செம்மண்

நிலம் 1 துகள் 13 வள்ளுவர் ஆண்டு 2051 10 - 16 ஐப்பசி 2020 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-

# புதிய ஒழுங்கு

## நாம் தயாரா?

தற்போதைய உலக ஒழுங்கானது கொரோனா தொற்றுக்கு முன்பான காலம், கொரோனா தொற்றுக்குப் பின்பான காலம் என இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டியிருக்கிறது. அந்தளவிற்கு மனிதகுல வாழ்வியலின் அடிப்படைகளை மாற்றிப்போட்டிருக்கிறது கொரோனா.

உலகம் முழுவதற்குமான பொது ஒழுங்கு மாற்றத்தைக் கொரோனா ஏற்படுத்தியிருக்கிறது. அதனைத்தான் ஊடகங்களும், மருத்துவ உலகமும் புதிய ஒழுங்கு (New Normalcy) என்கின்றன. பிந்தைய உலகமயத்தின் முக்கிய விளைவான இதனைக் கடந்து மனிதகுலம் பழைய நிலைக்குத் திரும்புதல் என்பது அசாத் தியமானது என்கிற நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இந்நிலையில் புதிய ஒழுங்கிற்கு நாம் தயாரா என்பதை மதிப்பிட்டுக்கொள்ளவேண்டியதும் அவசியமானதாகும்.


இந்த வார்த்தையை அடிக்கடி இப்போது "பிக் பாஸ் சீசன் - 4" இல் நடிகர் கமல் உச்ச ரிக்கக் கேட்கலாம். சனி, ஞாயிறு தினங்களில் அவர் தோன்றும் போதெல்லாம் இந்த நியூ நார்மல்சி என்பதை அவர் உச்சரித்துக்கொண்டே இருக்கின்றார்.

(02 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். பல்கலைக்கழகத்தில் இந்த மாணவர் இம்சையால் ஏற்பட்ட முறுகலில் சண்டை விலக்கப்போன துணைவேந்தரையே தள்ளிவிட்டுத் தடுமாற வைத்துவிட்டார்கள் தமிழ் மாணவர்கள்.



03




05

யாழ்ப்பாணம் என்று அழைப்பதற்குப் பதில் வாள்ப்பாணம் என்று அழைக்கும் நிலை தோற்றுவிக்கப்படுகின்றது.

தமிழ்த் தலைவர்களின் திறமையின்மையை இந்தியா புரிந்துகொள்ள அமைந்த சந்தர்ப்பமே விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்த காலப்பகுதி.

07



22



சிறுபான்மைச் சமூகங்களின் ஒத்துழைப்பின்றி மாகாண சபை முறையில் மாற்றங்கள் கொண்டு வரப்பட மாட்டா...

செம்மண்

வாரப் பத்திரிகை
551-A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

ஆசிரியர்: தே.பிரேமானந்த்



# வருமுன் காப்போம்!

10 லட்சத்துக்கும் அதிகமான உயிர்களைக் காவு கொண்டுவிட்டது. உலகம் முழுவதும் பொருளாதாரத்தை அடியோடு சரித்து மனிதர்களை அவலக் குழிக்குள் தள்ளி விட்டுவிட்டது. 36 லட்சம் பேரை இதுவரையில் தனது பிடிக்குள் கொண்டு வந்திருக்கிறது. ஆனால் எப்போது முடிவுக்கு வரும் என்று தெரியாமலேயே மனிதர்களைப் பித்தம் பிடித்து ஆட்டுவிக்கின்றது. கொரோனா!

கிட்டத்தட்ட ஒரு வருடமாகின்றது கொவிட்-19 என்கிற கொரோனா கண்டறியப்பட்டு. சீனாவின் வுகான் மாகாணத்தில் முதன் முதலில் கண்டறியப்பட்டது முதல் இன்றுவரை உயிர்களைக் காவு கொள்வதை ஒரு நாள் தவறாமல் செய்து வருகின்றது கொரோனா. இலங்கை வாழ் மக்களான நாம் இந்தப் பெருந் தொற்றுக் குறித்து அதிகம் அலட்டிக்கொண்டதில்லை.

முதன் முதலில் முழு முடக்கம் அறிவிக்கப்பட்டு அனைவரும் வீடுகளுக்குள் தடுக்கப்பட்டபோது ஏற்பட்ட அச்ச உணர்வே இந்த நோய் பற்றிய இலங்கை வாழ் மக்களின் ஆகக் கூடுதலான விழிப்புணர்வு. அதற்கு மேல், வெப்ப மண்டல நாடுகளில் கொரோனாவால் தாக்குப் பிடிக்க முடியாது, மஞ்சள் மற்றும் உள்ளி சாப்பிட்டால் கொரோனா தொற்றாது, இயல்பிலேயே நோய் எதிர்ப்பு சக்தி அதிகமான ஆசியர்களுக்கு இதன் பாதிப்பு அதிகம் ஏற்படாது என்பன போன்ற வதந்திகளால் உசாரடைந்த நாம் கொரோனாவுக்கான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறியிருந்தோம்.

மக்களிடம் மட்டுமல்ல பெருந் தொற்றுக் கால நடைமுறைகள் இறுக்கமாகப் பின்பற்றப்படுவதை உறுதிப் படுத்தவேண்டிய அதிகாரிகளும் அசண்டையாகவும் அலட்சியமாகவும் இருந்ததன் விளைவாக இப்போது கடந்த முறையைவிடப் பாரதூரமானதான சமூகத் தொற்று நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. இதுவரையில் கொரோனாவை திறம்படக் கையாண்டமைக்காக இலங்கையை மற்ற நாடுகள் பாராட்டுகின்றன என்றும், அவ்வாறு திறமையாகக் கையாண்ட நாடுகள் பட்டியலில் இலங்கைக்கு இரண்டாவது இடத்தை சீனா வழங்கியிருக்கிறது என்றும் பெருமை பாராட்டி வந்திருக்கும் நாம் இன்று உருவாகி இருக்கும் பேராபத்தையாவது முழுமையாக உணர்ந்திருக்கிறோமா என்றால் இல்லை என்பதே பதில்.

சமூகத் தொற்றாகக் கொரோனா பரவத் தொடங்கியதன் பின்னரும் முகக் கவசங்களை அணியாமலும் சமூக இடைவெளியைப் பேணாமலும் தேவையற்ற நடமாட்டங்களைக் குறைக்காமலும்தான் நாம் நாட்களைக் கடத்தி வருகின்றோம். இந்தப் போக்கை உடனடியாக நாம் மாற்றியாகவேண்டும். இல்லையேல் பேராபத்தைச் சந்திக்கவேண்டியதாகிவிடும். மீண்டும் ஒரு முழு முடக்கத்திற்குச் செல்வதற்கு ஆட்சியாளர்கள் அச்சம் கொண்டிருப்பது புரிகின்றது. அத்தகைய ஒரு நடவடிக்கையால் பொருளாதாரம் இன்னும் மோசமாக அடி வாங்கும் என்பதுடன் ஏழை, எளிய மக்களின் வாழ்க்கையைச் சமாளிப்பதும் கடினமாகிவிடும் என்பதால் முடிந்தவரை முழு முடக்கத்தை நடைமுறைப்படுத்தாமல் கடப்பதற்கு கொழும்பு முயற்சிக்கின்றது.

அத்தகைய முயற்சியின் முன்னுதாரணமாக எமக்கு அயலிலேயே இருக்கும் இந்தியாவில் இதனால் ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்பு மிக உச்சமானது. உலகிலேயே அதிகமானவர்கள் நோய்த் தொற்றுக்குள்ளாகி இருக்கக்கூடிய நாடுகளின் பட்டியலில் இரண்டாவது இடத்தில் சுமார் 7 லட்சம் தொற்றாளர் எண்ணிக்கையுடன் உள்ளது இந்தியா. ஒரு லட்சத்து 6 ஆயிரம் பேருக்கு மேலானவர்கள் அங்கு உயிரிழந்திருக்கிறார்கள்.

கட்டுப்படுத்தும் வரையான முழு முடக்கத்திற்குப் பதிலாக பகுதியளவான முடக்கத்துடன் நகர முற்பட்டே இந்தியா இந்த நிலையை எட்டியதன் பின்னரும் கொழும்பு முழு முடக்கத்தை நடைமுறைப்படுத்தப் பின்னடிப்பது பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

இந்த விடயத்தில் மக்களின் ஒத்துழைப்பு எவ்வளவு முக்கியமோ அதேபோன்று அரசின் முன்யோசனையான முன்னெச்சரிக்கையான நடவடிக்கையும் மிக முக்கியம். வருமுன் காப்பதே சிறந்தது. வந்த பின் வருந்துவதால் பயனில்லை.

## புதிய ஒழுங்கு...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

**புதிய ஒழுங்கு என்றால் என்ன?**

கடந்த வருடத்தின் தொடக்கப் பகுதியில் சீனாவில் இருந்து பரவத் தொடங்கிய COVIDE 19 என்கிற வைரஸ் தொற்றிற்கு இதுவரை தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. குறித்த வைரஸ் உருவாக்கப்பட்ட விதம் பற்றியோ, தொற்று பரவும் முறை குறித்தோ சரியான கண்டு பிடிப்பு நிகழவில்லை. அது சீன - அமெரிக்க ஆதிக்க வாதப் போட்டி அரசியலின் ஒரு அந்தமாக மாற்றப்பட்டிருக்கிறது.

மறுபுறத்தில், உலக அளவில் கொரோனா தொற்றினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 10 லட்சத்தைக் கடந்திருக்கிறது. எனவே இந்த ஆபத்தான நோய்ப் பரவலுக்கு மத்தியில் தன்னை வாழப் பழக்கிக் கொள்ளவே மனித குலம் போராடுகிறது. இந்தப் போராட்டத்தை வெற்றி கரமாக்கு வதற்கான வழிமுறைகள் உள்ளடங்கிய வாழ்வுமுறையைத்தான் புதிய ஒழுங்கு என்கின்றனர். மலேசியாவிலிருந்து இச் சொல் பாவனைக்கு வந்ததாக அறியமுடிகின்றது.

**எந்தெந்த விடயங்களில் புதிய ஒழுங்கு ?**

கல்வி, பொருளாதாரம், நாளாந்த வாழ்வியல், சினிமா உள்ளிட்ட கலைத் துறைகள், உணவுப் பழக்கவழக்கம் எனப் பலவற்றை கொரோனா தாக்கியிருக்கிறது. எனவே இந்தத் துறைகள் அனைத்தையும் தொடர்ந்தும் இயக்குவதற்கான வழிமுறைகளைத்தான் புதிய ஒழுங்கு வலியுறுத்துகின்றது. புதிய ஒழுங்கில் பிள்ளைகள் பாடசாலை செல்லாமலே கற்கிறார்கள். வீட்டிலிருந்தபடி, தமக்கு விரும்பியபடி கற்கிறார்கள். விரும்பியதைக் கற்கிறார்கள். ஏனெனில் இந்தக் கற்பித்தலுக்கு வகுப்பறைகள் இல்லை. கரும்பலகைகள் இல்லை. இணைய வழியில்தான் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. நமது சூழலில் இந்தக் கற்றல் செயற்பாடு இடம்பெற்றாலும், எல்லா பிள்ளைகளாலும் அதனைப் பெறமுடியவில்லை. நம்மிடையே இருக்கும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இந்தக் கற்றல் செயற்பாடுகளில் அதிக தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

அடுத்த வரும் ஆண்டுகளில் உணவுப் பஞ்சமே ஏற்படுமளவுக்குப் பொருளாதார நெருக்கடி ஏற்படும் என பொருளியல் வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர். மக்களாக முன்வந்து விவசாயத்தில், சுயசார்பு உணவு உற்பத்தியில் ஈடுபடவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்கள். நமது சூழலில் என்றுமில்லாதளவிற்கு விவசாயத்தில் ஆர்வம் காட்டி களத்தில் இறங்கியிருப்பவர்களின் திடீர் அதிகரிப்பு முன்னேற்றகரமானதாகப் பார்க்கப்படுகின்றது.

இனிவரும் மூன்று மாதங்களுக்குமாக காலநிலையும் அதற்கு ஒத்துழைத்தால் தமிழ் சமூகம் புதிய ஒழுங்கின் பொருளாதார நெருக்கடியில் இருந்து தாக்குப்பிடிக்கும் நிலையை அடையும். மறுபுறத்தில் நாட்டின் பொருளாதாரத்தைத் தாங்கி வைத்திருக்கும் சுற்றுலா, கைத்தொழில் துறைகள் தொடர்ந்தும் பெரும் வீழ்ச்சியையே சந்திக்கப் போகின்றன. அண்மையில் கொரோனா மீள் அலையானது புதிய ஒழுங்கிற்கு அமைவான கைத்தொழிற் சாலைகளிலேயே ஏற்பட்டு அபாயகரமான சூழலை உண்டுபண்ணியிருக்கிறது. எனவே இனிவரும் காலங்களில் கைத்தொழில் துறை மீள இயக்கப்படுவது பற்றிய பரிசீலனைகளும் மேற்கொள்ளப்படலாம்.

புதிய ஒழுங்கில் வாழ்க்கை முறைதான் சிக்கலானதாக மாறப்போகிறது. தனிமைப்படுத்தல் குறித்து மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் அச்சநிலை காரணமாக கொரோனா தொற்றுடனே மறைந்து வாழ விரும்புகின்றனர். எத்தனை முறை அறிவித்தும் தொற்றாளருடனும் பயணித்தவர்களே மருத்துவ பரிசோதனைக்குத் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளத் தயாராக இல்லை.

கொரோனாவுடன் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுபவர்கள்கூட தப்பியோடும் நிலையைத்தான் நாட்டில் அவதானிக்க முடிகிறது. இந்நாட்டின் பொருளாதார - மருத்துவ நிலைமைகளுக்கு அமைவாக சிறியளவிலான தொற்றாளர்களைப் பராமரிக்க முடியுமாயினும், வளர்ந்த நாடுகளைப் போல லட்சக்கணக்கான தொற்றாளர்களைப் பராமரிப்பது சமாளிக்கமுடியாத ஆபத்து நிலையை ஏற்படுத்தும்.



முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டிருப்பினும் அனேகர் அதனை அணிவதை விரும்புவதில்லை. காவல்துறையினரை, இராணுவத்தைக் கண்டால் மாத்திரம் அதை அணிபவர்களையும், தாடைக்கு கீழே முகக்கவசத்தை அணிந்து செல்பவர்களையும்தான் நகரங்களெங்கும் அவதானிக்க முடிகிறது.

பொது இடங்கள், பேருந்துகள், தொடரிகள் (ரயில்), உணவகங்கள் போன்றவற்றில் முகக்கவசங்கள் மாத்திரம் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தாது. அங்கு கையுறை, வைரஸை அழிக்கும் மருந்துகள் என்பவற்றையும் அடிக்கடி பயன்படுத்த வேண்டியிருக்கிறது. ஆனால் நாட்டில் சமூக நிலமைகள் அப்படி தயார்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. பயணிகளைத் திணித்துக் கொண்ட பேருந்துகளில் முகக்கவசம் அணிவது மாத்திரமே கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தாது.


எனவே நமது சமூகத்திற்கு கொரோனா பரவல் குறித்தும், அதற்கு இயைபு கொடுக்கும் புதிய ஒழுங்கு குறித்தும் விழிப்புணர்வு அவசியப்படுகிறது. அதனை உடனடியாகவே செய்யவேண்டிய பொறுப்பு அரசியல் கட்சிகளுக்கும், சமூக அமைப்புக்களுக்கும், தன்னார்வலர்களுக்கும் உண்டு.

# துணைவேந்தரையே அரண்டுபோக வைத்த யாழ். பல்லை மாணவர்கள்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பகிடிவதை இடம்பெறுவதற்கு அனுமதிக்கவே மாட்டோம் என்று சில வாரங்களுக்கு முன்னர்தான் சூளுரைத்த துணைவேந்தரையே அரண்டுபோக வைத்திருக்கிறார்கள் மாணவர்கள்.

புகுமுக மாணவர்களுக்கும் அவர்களின் மூத்த மாணவர்களுக்கும் இடையிலான இயல்பு நிலையை உருவாக்குவதை நோக்காகக் கொண்ட ஒரு வதையுரையாடல் என்பதாக வெளிக்காட்டப்படும் பகிடி வதைகள் எல்லை மீறுவதும் அதனால் சாவுகள் சம்பவித்ததும்கூட இலங்கையின் பல்கலைக்கழக வரலாறு.



வாழ்க்கையை பகிரவும் அனுபவிக்கவும் குருதி துடிக்க இளமை பொங்கக் காத்திருக்கும் இளைஞர்களைக் கட்டிமேய்ப்பதென்பது இலகுவான விடயமல்ல. அதிலும் பல்கலைக்கழகத்திற்குள் நுழைவதென்பது சமூகத்தில் தாம் பெரிய மனிதர்களாக மதிக்கப்படுவதற்கான அடையாளம் என்கிற மனோநிலையை வளர்த்துக்கொள்ளும் ஒரு சமூகத்திற்குள் அது இன்னும் கடினமான பணிதான்.

இந்தப் பின்னணியில் வதையுரையாடல்கள் எல்லைமீறி இம்சைகளாக மாறிப்போகின்ற நிலைமை பல்கலைக்கழக நிர்வாகங்களுக்குப் பெரிய தலையிடி என்றாலும், இத்தகைய இம்சைகள் இன்றி ஒரு மாணவனோ மாணவியோ வயதுக்கு வந்துவிடமாட்டார்கள் என்று எண்ணுகின்ற மனப்போக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் சிலரிடம் இருப்பதையும் ஏற்றுத்தானாக வேண்டும். இதற்குக் காரணம் அவர்களும் இதே பாதையைக் கடந்து வந்தவர்கள் என்பது தான்.

இந்த நிலையில்தான் கடந்த மாதம் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 4 இரண்டாம் வருட மாணவர்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு உதவினார்கள் என்று கருதப்படும் இரு முதல் வருட மாணவர்களும் பல்கலைக்கழக வளாகத்திற்குள் வருவதற்குத் தடை விதிக்கப்பட்டு விடுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

முதல் வருட மாணவன் ஒருவனை அலை பேசிகளின் வழியாகப் பாலியல் இம்சைக்கு உட்படுத்தினார்கள் என்றும் அதற்குத் துணையாக இருந்தார்கள் என்றும் இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த குற்றச்சாட்டுக்களோடு தொடர்புபட்டவர்கள் அனைவரும் சிங்கள மாணவர்கள் என்று குறிப்பிடப்படுகின்றது. பாதிக்கப்பட்ட மாணவன் இலங்கைப் படை அதிகாரியின் தம்பி என்பதும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

அதனாலோ என்னவோ அது பற்றிய செய்தியாளர் மாநாடு நடத்தப்பட்டு மாணவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தகவல்கள் விலாவாரியாகத் தெரிவிக்கப்பட்டன. அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்பட்டு, அவை குற்றவியல் குற்றங்களுக்குக் கீழ் வரும்பட்சத்தில் காவல்துறையினரிடம்கூட அவர்கள் ஒப்படைக்கப்படுவார்கள் என்றெல்லாம் சொல்லப்பட்டது. ஆனால், அதன் பின்னர் அந்த மாணவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பில் எந்தவிதமான தகவல்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விடுக்கவில்லை.


இந்த நிலையில்தான் கடந்த 8ஆம் நாள் யாழ். பல்கலைக்கழகத்தில் இந்த மாணவர் இம்சையால் ஏற்பட்ட முறுகலில் சண்டை விலக்கப்போன துணைவேந்தரையே தள்ளிவிட்டுத் தடுமாற வைத்துவிட்டார்கள் தமிழ் மாணவர்கள்.

இரண்டாம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட பகிடிவதை தொடர்பான முரண்பாடே இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகின்றது. இந்த இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட தர்க்கம் பின்னர் கைகலப்பாக மாறியதை அடுத்து விரிவுரையாளர்கள், ஒழுக்காற்று அதிகாரிகள், துணைவேந்தர் போன்றோர் சம்பவ இடத்திற்கு வருகை தந்துள்ளனர். கட்டுக் கடங்காதிருந்த மாணவர்கள் சிலரால் விரிவுரையாளர்கள் தாக்கப்பட்டதுடன் துணைவேந்தரும் கீழே தள்ளிவிழ்த்தப்பட்டார் என்று கூறப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து காவலாளிகள் விரிவுரையாளர்களால் 3ஆம் வருட மாணவர்கள் அங்கிருந்து அகற்றப்பட்டனர். இதன்போது தாமும் தாக்கப்பட்டு காயங்களுக்கு உள்ளானதாக 3ஆம் வருட மாணவர்கள் தெரிவித்தனர். இதில் ஒருவர் வைத்தியசாலையில் சென்று படுத்துக்கொண்டார். எஞ்சியவர்கள் தமக்கு அநீதியிழைக்கப்பட்டதாகக்கூறி வீதியில் அமர்ந்து ஆர்ப்பாட்டமெல்லாம் செய்தனர். எனினும் இந்த முரண்பாடு குறித்து தனிக் குழு அமைத்து விசாரிக்கப்படும் என்று அறிவித்தார் துணைவேந்தர்.

பிரச்சினை அத்தோடு முடிந்துவிடும் என்று பார்த்தால், மாணவர்களுக்கு இடையிலான சண்டையை விலக்குப் பிடிக்கப்போன தங்களையும் அவர்கள் தாக்கினார்கள் என்று குற்றஞ்சாட்டியிருக்கும் விரிவுரையாளர்கள் அந்த மாணவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி வெள்ளிக்கிழமை காலை முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

பாலியல் இம்சை தொடர்பான விசாரணைக்கும் அதன் பின்னர் தொடரும் என்று அறி விக்கப்பட்ட விடயங்களுக்குமே என்ன நடந்தது என்று தெரியாதிருக்கும் நிலையில் இப்போது விரிவுரையாளர்களும் விசாரணை கேட்டிருக்கிறார்கள். பொறுத்திருந்து பார்ப்போம் என்னதான் நடக்கிறதென்று. ■



## கணவாய்ப் பிரட்டல் கறி...


அசைவ உணவு வகைகளில் தனக்கெனத் தனியான இடம் பிடித்திருக்கும் மிகச்சிறந்த கடலுணவுகளில் ஒன்று கணவாய். கணவாயைப் பிரட்டல் கறியாகத் தயாரித்து ருசிப்பது எவ்வாறு என்று இந்த முறை பார்ப்போம்.

### என்னென்ன பொருள்கள் தேவை...?

கணவாய் - 1 கிலோ, பெரிய வெங்காயம் - 2, பூண்டு - 10 பற்கள், தக்காளிப்பழம் - 2, மஞ்சள்தூள் - சிறிதளவு, தேங்காய்ப் பால் - 1 கப் பச்சை மிளகாய் - 5, கடுகு - 2 தேக்கரண்டியளவு, சோம்பு - 2 தேக்கரண்டியளவு, வெந்தயம் - 2 தேக்கரண்டியளவு, கறிவேப்பிலை - சிறிதளவு, உப்பு - தேவையான அளவு, மரக்கறி எண்ணெய் - தேவையான அளவு

### எப்படிச் செய்வது...?

முதலில் கணவாயைச் சுத்தம் செய்து சிறிய துண்டுகளாக வெட்டிக் கொள்ளுங்கள். வெங்காயம், பச்சை மிளகாய், தக்காளிப்பழங்கள் ஆகியவற்றையும் சிறிய துண்டுகளாக வெட்டிக் கொள்ளுங்கள். அடுப்பில் சட்டியை வைத்து எண்ணெய் ஊற்றி எண்ணெய் காய்ந்ததும் கடுகு, சோம்பு, வெந்தயம் போட்டுத் தாளியுங்கள். தாளித்ததும் வெங்காயம் சேர்த்துப் பொன்னிறமாகும்வரை வதக்குங்கள். வெங்காயம் வதங்கியதும் பச்சை மிளகாய், பூண்டு மற்றும் தக்காளிப்பழங்களைச் சேர்த்து 10 வரையில் மெல்லிய தணலில் நன்றாக வதக்குங்கள். தக்காளி வதங்கியதும் சிறிய துண்டுகளாக வெட்டிய கணவாயையும், மஞ்சள் தூள், மிளகாய்த் தூள் ஆகியவற்றையும் சேர்த்து 3 நிமிடங்கள் வரை நன்றாகப் பிரட்டிக் கொள்ளுங்கள். பின்னர் தேங்காய்ப்பாலைச் சேர்த்து மூடிவைத்து வேகவிடுங்கள். 15 நிமிடம் வரை வேகவையுங்கள். தேங்காய் பால் வற்றிக் கொண்டுவரும்போது இறக்கினால் சுவையான கணவாய்ப் பிரட்டல் கறி தயார்.



# சம்பந்தர் கடையடிச் சமா...

“காங்கிரஸ் காறரின்ர கதை பறைஞ்சுகொண்டிருந்ததில போன முறை நேரம் போனதே தெரியாம றோட்டிலை மினக்கெட்டு மனிசிற்ற வாங்கிக் கட்டினதுதான் மிச்சம். இந்த முறை ரைம் பாத்து இருட்டுறதுக்குள்ள என்னை விட்டுட வேணும் எண்டுற கொண்டிசனோட தான் கடையடிக்கு வந்தனான். ஆனாப் பாருங்கோ அண்டைக்கு முழு விசயத்தையும் சொல்லி முடிச்சிருந்தா எல்லாரும் விசிலடிச்சிருப்பாங்கள். இப்ப அது ஆறின கஞ்சி பழங்கஞ்சியாப் போச்சு. அண்டைக்குக் கதைச்சதை விட, இண்டைக்குக் கனக்க நடந்து போச்சுது. ஜி.ஜியின்ர பேரன் கணக்குப் போட்டவர் எண்டதோட எல்லே போனநாங்கள், அவர் போட்ட கணக்கும் போய், அவற்றை கட்சி அவரை விட்டே போற நிலமைக்கு வந்துட்டுது இண்டைக்கு...

அவசரப்பட்டுக் கிலுக்கின “மணி”யும் இப்ப வெளியில போய் நிண்டு கொண்டு “அவன் கள்ளன் - இவன் புலனாய்வுக்காரன்” எண்டு உள வீட்டு விசயங்கள் எல்லாத்தையும் புட்டுப் புட்டு வைக்கிறான், அவசரப் பட்ட அப்புக்காத்துமாரால எல்லா இடமும் பிரச்சினைதான் பாருங்கோ...

இங்க கட்சிக்குள் ரெண்டு அப்புக்காத்துமாருக்குள்ள பிரச்சினை எண்டு பாத்தா வெளியாலயையும் இந்த அப்புக்காத்துமாரை இயக்கிற அப்புக் காத்துகளும் ‘முந்திரிக்கொட்டை’ வேலை பாத்துப்போட்டு இப்ப முழிஞ்சு கொண்டிருக்கினம்...

“என்னன்ண உது, கதை வேறெங்கயோ பேகுது...?” என்ர கதைக்கிடையிலி புகுந்த சுப்பன் அவசரப்பட்டான்.

“அதொண்டுமில்லையடாப்பா, அங்க பெரிய பள்ளிக்கூடத்தில இருக்கிறவயள் எல்லாரும், தங்களுக்கென்னவோ கொம்பு” முளைச்சிருக்கெண்டு தானே எல்லாத்தையும் செய்யுறவை? அப்பிடித்தான் அங்க இருக்கிற ஒரு அப்புக்காத்துவும், தன்னைவிட அங்க ஆளில்லை எண்ட கணக்கில எல்லாம் செஞ்சுகொண்டிருந்தவர். அங்க இருக்கிற தலையள் எல்லாம் தான் சொல்லுறபடி நடக்க வேணும் - தான் எழுதிக் குடுத்ததைத்தான் பெரிய சபையள் எல்லாத்திலயும் வாசிக்க வேணும் எண்டு போன மாசம் வரையும் ஒரு பிடி பிடிச்சுக் கொண்டிருந்தவர். அது பரவாயில்லை. ஒரு படிச்சவன் - சட்டம் தெரிஞ்சவன் சொல்லுறதைக் கேக்கிறதிலை தப்பில்லைத் தானே. ஆனா தம்பி தன்ர தலையில தானே மண் அள்ளிப் போட்டான் பாரு அங்க தான் ‘அப்புக்காத்துத்’ தம்பியின்ர அவசரக்குடுக்கை வேலை பிழைச் சுப்போச்சுது.

பெரிய பள்ளிக்கூடத்துக்கு எதிரா வழக்குப் போட்டுட்டு, அந்தப் பள்ளிக் கூடத் தலைமை வாத்தியாரைப் போய் நான் போடுற தாளத்துக்கு ஆடு எண்டு சொன்னால்... அது முடிஞ்ச காரியமே...? ஒரு வழக்காளி - எதிராளியிட்டப் போய்த் தன்ர வழக்குச் சம்பந்தமா இப்பிடிச் செய், அப்பிடிச் செய் எண்டு கேக்கலாமே? தான் சொல்லுற எல்லாத்துக்கும் தலைமை வாத்தி ஆடும் எண்ட நம்பிக்கையிலதான் பதவி விலகுறன் எண்டு ஒரு வெருட்டு வேற விடுபட்டிருக்கு. சட்டப்படி, ஒருத்தன் தானாப் பதவி விலகுறன் எண்டு கைப்பட எழுதிக்குடுத்தா, அதில உள்ள சரி - பிழையளச் சுட்டிக்காட்டி அதை ஏற்றுக் கொள்ளுறதாக இப்ப பெரிய பள்ளிக்கூடம் கடிதம் ஒண்டை அனுப்பி இருக்குது. அது தானே முறை? அது பிழை எண்டு துள்ளிக் குதிக்கிறதில என்ன ஞாயம் இருக்கு?

“உந்த ரெண்டு அப்புக்காத்து மாரும் தங்களால தாங்கள் கெட்டுப்போட்டு, இப்ப குய்யோ - முறையோ எண்டு தேசியத்தைத் தூக்கிப் போர்த்தேலுமே? சொல்லுங்களன்ராப்பா?” நடந்த சம்பவங்களைப் புலனாய்வுத்துறைபோல அக்குவேறா ஆணிவேறயாப் பிரிச்சுச் சுப்பன்ர கேள்விக்குப் பதில் குடுத்தன் நான்.

“அண்ணை, காங்கிரஸ் உன்ர கட்சி எண்டதால, நீ சும்மா விளாசித் தள்ளுறாய்... உங்கால கூட்டமைப்புப் பக்கம் என்ன நடக்குதாம்? ஏதும் தெரியுமே?” சுப்பனும் சலிக்காமலுக்கு என்ர வாயைக் கிளறிக்கொண்டிருந்தான்.

ஏனடாப்பா என்ர வாயைக் கிளறுறியள்? நான் என்ன நேரில பாத்தனானே, ஏதோ தெரிஞ்சதை அப்பப்ப உங்களிட்டச் சொல்லுவன். கூட்டமைப்புக்குள்ளயும் அப்புக்காத்துமாராலதான் பிரச்சினையாம்.. நம்புவியளோ? ஏதோ அப்புக்காத்துமாரில எனக்கு எரிச்சல் அதாலதான் அவையளுக்குக் காட்டு காட்டெண்டு காட்டுறன் எண்டு மட்டும் யோசியாதேங்கோ.

கூட்டமைப்பின்ர பேச்சாளர் ஆர் எண்டதில பெரிய புடுங்குப்பாடு போய்க் கொண்டிருந்ததெல்லே... இங்க எங்கட கிளவித்தோட்டம் மதியாபரணம் மாஸ்டரின்ற மகன்தானே இவ்வளவு நாளும் பேச்சாளர். அவனும் ஒரு அப்புக் காத்துத் தனே? சும்மா சொல்லப்படாது, வாற வெளிநாட்டுக் காரரில இருந்து, உள்ளூர் ஆளும் தரப்பு வரை அவன் பொடியில ஒரு மரியாதை. விசியம் தெரிஞ்சவன் எண்டுதான். ஆனா, போன தேர்த லுக்க அவனுக்குப் பல பக் கத்தாலயும் கடும் அடி, உள் வீட்டுக்குள்ள அவன் மட்டும் ஒரு கன்னையில நிக்க மற்றப்பக்கம் நிண்டவன் போனவன் எல்லாம் அவனோட ராத்தல்.

அதில்ல உங்க பிரச்சினை, கட்சிக்குள்ள அவனுக்கெதிரா இப்பிடியெல்லாம் செய்யப்பண்ணி, இப்ப பேச்சாளர் பதவியைத் தாங்கோ எண்டு நேரடியா நிண்டு அடைக்கலத்தார் பிடிபடுறதுக்கு ஆர் காரணம் எண்டு நினைக்கிறியள்? எல்லாம் பக்கத்து வீ(நா)ட்டுக் காரர் தான் பாருங்கோ. சொல்லுறது விளங்குதே பெரியண்ணர் பாக்கிற வேலை தான் உது.

ஆனா, பெரியண்ணர் என்ன, பெரிய தம்பிக்கே தண்ணிகாட்டினவர்தானே இப்ப தலையா இருக்கிற அப்புக்காத்து, அந்தக் காலத்தில ஆனந்த சங்கரி இருக்க வேண்டிய இடத்துக்கு ஆப்பு வைச்சுப்போட்டு தான் உரிமை கொண்டாடிக்கொண்டு, பெரிய தம்பியா - ஆர் அவர்? எங்கடயத் தொடக்கினது அவரா? எண்டு கேள்வி கேக்கிற பெரிய அப்புக்காத்து இருக்கும் வரை கூட்டமைப்புக்குள்ள எந்த மாற்றமும் உடனடியா வரப்போறதில்லைப் பாருங்கோ... சுப்பன் வாயைக் கிளறுறதுக்கு முதல் மனிசியின்ர வாயை மூட வேணும் பாருங்கோ. இந்த முறையும் என்னால ஏச்சு வாங்க ஏலாது. அப்ப பின்ன வரட்டே...

**- ஆதிரன்**

# கொரோனவை வீட்டுக்கு கொண்டுவருதல்.....

இன்று சர்வதேசம் எங்கும்
இவளைப்போல் பிரபல்யம் யாருக்குமில்லை

‘கொரோனா’
தலையில் மகுடம் சூட்டிய
பிரபஞ்ச அழகி.
இவள் உங்களை விரும்பி வந்தாள்
என்றால் அது உயிரில் கலந்த உறவுதான்.

இவளை சேர்ந்தால் நீங்களும் பிரபல்யம் தான்
உங்களுக்கு அரச அழைப்பு வரும்,
சீருடை தந்து தனி வானத்தில் அழைத்து செல்வார்கள்,
ஏசி றூம், ஓசி சாப்பாடு,
சூரியகுளியல்
உங்களை கவனிக்க மிகவம் படித்தவர்கள் என்று
ராஜ மரியாதை தான்...

உங்கள் விருந்துக்காலம் முடிந்து
கோரோனவை விட்டுவிட்டு வந்தாலும்,
இல்லை அவள் கூடவே ------ போனாலும்.
நீங்கள் பிரபலம் தான்.

கோரோனாவுடன் உ ங்கள் அனுபவம்.
வாழ்க்கையை எப்படி உணர்ந்தீர்கள் ,,,,,,
என பேட்டி வரும், போட்டோ வரும்
டிவி பத்திரிகை என்று
ஊடக ங்கள் எல்லாம் உங்கள் பெயர் தான்.

சரி ‘கொரோனவை’ வீட்டுக்கு கொண்டுவர
விரும்பினால்
அவளுக்கு பிடிக்காததை
நீங்கள்செய்ய கூடாது.

அடிக்கடி கை கழுவாதீர்கள்
கைகழுவி விடுபவர்களை
வெறுக்கிறாள் கொரானா

மாஸ்க் அணிய கூடாது
உங்கள் கண்களில் வாயில் மூச்சில்
- விழுந்து
கலக்கவே இவள் விரும்புகிறாள்.

ஊரடங்கு நிலைமை இருந்தாலும் வீட்டிலே
- இருக்காது.
வெளியே சுத்தவேண்டும்
றிஸ்க் என்கிறீர்களா
முயற்சி திருவினையாக்கும் என்று ஊரில் சொல்வார்கள்

ம்ம் உங்கள் ஊரெல்லையில் அவள் தென்படாவிட்டாள்.
நகரின் எல்லைகளை கடந்து தேடிச்செல்லுங்கள் .

ம்ம் தேடினால் கண்டு .....அடைவீர்கள்..

ஒரு போதும் தனித்திருக்காதீர்கள்
- தனித்திருபவர்களை
தவிர்க்கிறாள் கொரானா.
இவள் கொண்டாட்டமான பெண்
கூட்டங்கள் களியாட்டங்கள்.
திருவிழாக்கள் சந்தைகள் என்று
மக்களோடு கலந்திருப்பாள்.
சென்று நெருக்கமாகி உரசுங்கள்
உங்களை விரும்பினால்
ப(தொ)ற்க்கொள்வாள்கொரோனா

இப்பொழுது அவளை
நீங்கள் வீட்டிற்க்கு கொண்டு வரலாம்
யாரும் பயப்பட தேவை இல்லை
உங்களோடு வந்தாலும் யார்
கண்ணுக்கும் புலப்படா
மந்திரம் கற்றவள் கொரானா.

ஆனால் இவளை அழைத்துவந்தபின்
ஒரு பண்பாட்டு கலாச்சார அதிர்வை
- நிச்சயமாய்உணர்வீர்கள்




**வேலணையூர் - தாஸ்**

● என்.கே.மாறன்

# யாழில் அடங்க மறுக்கும் வாள்...!

பண்பாடு - கலாசார உயர்வுக்கும், போராட்டத் தியாகங்களுக்கும் சொந்தமான யாழ்ப்பாணம் இன்று வாள் வெட்டுக்குப் பெயர் போன மத்திய நிலையமாக மாறிவிட்டது. யாழ்ப்பாணம் என்று அழைப்பதற்குப் பதில் 'வாள்ப்பாணம்' என்று அழைக்கலாம் போலுள்ளது நிலை. சிறு குடும்பத் தகராறுகள் தொடங்கி ஊர்ச்சண்டைகள் வரைக்கும் அனைத்தையும் கட்டுப்படுத்தும் வல்லமை வாய்ச் சமாதானங்களையெல்லாம் மீறி வாள்களுக்கு வந்து விட்டது.

தமக்குள் உருவாகின்ற இள வயதுச் சச்சரவுகளால் தங்களுக்குள் மோதிக் கொண்டிருந்த குழுவொன்றைப் பொலிஸாரும் புலனாய்வாளர்களுமாகச் சேர்ந்து 'ஆவா' என்று பெயரிட்டு அடையாளப்படுத்தினர். அன்றிலிருந்து அடையாளம் காணப்பட்ட பிரச்சினைதான் இது. குறித்த குழுவில் இருந்து ஆரம்பகால உறுப்பினர்கள் இதிலிருந்து விலகி வெளிநாடுகளுக்கு செல்ல ஆவா குழுவின் தலைவர் என்று அடையாளம் காணப்பட்ட வினோதன் எனப்படுபவரும், அவருடன் சேர்ந்த பதின்மவயது இளையோர்களுமாகத் தமக்கும் தமது நண்பர்களுக்கும் விரோதிகளாகத் தெரிபவர்களை மிரட்டவும், தாக்கவும் ஆரம்பித்தனர். இவர்களின் செயற்பாடுகள் சமூகத்தில் பேசப்பட ஆரம்பித்ததும், இவர்களை விடவும் மேலும் வயது குறைந்த இளையோர்கள் தம்மையும் சமூகத்தில் இவர்களைப் போல அடையாளப்படுத்த வேண்டும் என்ற ஒரு வகைச் சினிமாத்தனமான நோக்கில் தமக்கு மேலிருந்தவர்களுக்குப் பணங்களையும், போதைப் பொருள்களையும், மற்றும் சிலர் மோட்டார் வண்டிகளையும் அன்பளிப்பு என்கின்ற பெயரில்



வழங்கி ஆவாவில் இணைந்து கொண்டனர். அவ்வாறு படிப்படியாக வளர்ந்த இந்த ஆவா என்கின்ற குழு பெயர் போன வாள்வெட்டுக்குழுவாக அடையாளப்படுத்தபட்டுள்ளது.

## தனுரொக்

தமக்குள் முரண்கள், ஒருமித்த கருத்துகள் இல்லாத தன்மை காரணமாக இந்த ஆவா குழுவிலிருந்து விலகிய சிலர் தமக்கெனச் சிறு சிறு குழுக்களைத் தோற்றுவித்து அவற்றை அடையாளப்படுத்த வேண்டும் என ஆரம்பித்து இவை இன்றைக்கு வேறுபல பெயர்களில் ஆவா குழுவுக்கு எதிரான வன்முறைகளிலும், திருட்டு, போதைப் பொருள் கடத்தல் ஆகிய சமூக விரோதச் செயல்களிலும் இறங்கினர். அவ்வாறு உருவாகிய முக்கிய குழு தான் மானிப்பாய்ப் பகுதியில் உருவெடுத்த மோகன் தனுசன் என்பவரது தலைமையிலான "தனுரொக்".

## ஆவாவைச் சீண்டும் தனுரொக்


ஆவா குழுவைச் சேர்ந்த சிலர் உட்படக் குறித்த குழுவின் தலைவர் என்று அடையாளப்படுத்தப்பட்ட வினோதனும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுச் சில வழக்குகளில் குற்றவாளிகளாக நீதிமன்றில் அடையாளப்படுத்தப்பட்டுச் சிறைவாசம் அனுபவித்தனர். சிறிது காலத்தின் பின்னர் அவர்கள் வெளியில் வந்து சில காலங்கள் வரை வன்முறைகளில் இருந்து விலகியும் இருந்தனர். எனினும், அவர்களை சீண்டிப்பார்த்து மீண்டும் வன்முறைகளுக்குள் கொண்டுவர எண்ணிய தனுரொக் குழு ஆவா குழுவினர் மீது முகநூல் பக்கங்களிலும், மறைமுகமாகவும் தாக்குதல்களை ஆரம்பித்தனர். இந்தத் தாக்குதல்களால் ஏற்பட்ட குழப்பநிலையே கடந்த மாத இறுதியிலிருந்து யாழ்ப்பாணத்தில் மீள இணங்காணப்பட்ட வாள் வெட்டுத் தாக்குதல்கள்.

கிராமப் பகுதி களிலும், வாள் வெட்டுக் குழுவினரது வீடுகள் அமைந்துள்ள பிரதேசங்களிலுமாக ஆரம்பத்தில் நடந்து வந்த இந்த வாள்வெட்டுச் சம்பவங்கள் கடந்த செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி யாழ். நகரின் மத்தியில் சன நடமாட்டத்துக்கு நடுவில் அரங்கேறியது.

> கிராமப் பகுதிகளிலும், வாள்வெட்டுக் குழுவின ரது வீடுகள் அமைந்துள்ள பிரதேசங்களிலுமாக ஆரம்பத்தில் நடந்து வந்த இந்த வாள்வெட்டுச் சம்பவங்கள்; கடந்த செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி யாழ். நகரின் மத்தியில் சனநடமாட்டத்துக்கு நடுவில் அரங்கேறியது.

## நடந்த சம்பவம் என்ன...?

தம்மை இனம்காட்டிவிடக்கூடாது என்ற எண்ணத்தில், தாக்குதல் சம்பவம் ஒன்றுக்குத் திட்டம் தீட்டி, வவுனியா மாவட்டத்தில் இருந்து வாடகைக்குக் கார் ஒன்றைப் பெற்று, அந்தக் காருக்கு மருத்துவர்கள் பயன்படுத்தும் மருத்துவச் சின்னத்தைப் பொறித்து, அதில் யாழ்ப்பாணத்துக்கு வந்த ஆவா குழுவைச் சேர்ந்த சிலர், யாழ்ப்பாணம் - மணிக்கூட்டுக் கோபுர வீதியிலுள்ள பெருமாள் கோவிலுக்கு அண்மையாக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த தனுரொக் குழுவின் தலைவன் மோகன் தனுசன் மீது மோதி, கீழே விழுந்த அவர் மீது வாள்வெட்டுத்தாக்குதல் நடத்தினர். நீண்ட இடைவெளிக்கு பின்னர் யாழ் நகரின் மத்தியிலேயே இடம்பெற்ற இந்தச் சம்பவம் மக்கள் மத்தியில் பீதியை உண்டாக்கியது. வாள் வெட்டு தாக்குதலை மேற்கொள்வதற்குச் சினிமாப் பாணியில் காரில் வந்த அந்தக் கும்பல் காரின் முன் சில்லுக் காற்றுப்போன காரணத்தால் அந்தக் காரை விட்டு விட்டுத் தப்பித்தது. தனு



ரொக் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் இதன் பின்னணியில் வன்முறைகளில் இருந்து ஒதுங்கி யிருந்த மோகன் அசோக் எனப்படும் இளைஞன் கைதுசெய்யப்பட்டதுடன், மேலும் மூவர் கைது செய்யப்பட்டனர். அதன் பின்னர் ஆவா குழுவின் தலைவர் வினோதன் சட்டத்தரணி மூலம் நீதிமன்றில் சரணடைந்தார். வாடகைக்கு அமர்த்தப்பட்ட காரின் உரிமையாளரிடமும் வாக்குமூலம் பெறப்பட்டது. எனினும் குறித்த தாக்குதலின் சூத்திரதாரி எனக் கூறப்படும் ஓட்டு மடம் பகுதியைச் சேர்ந்த சுமன் எனப்படுபவர் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸ் தரப்பில் இருந்து தகவல்கள் வெளிவந்தன.

## இன்னும் பல தாக்குதல்கள்

யாழ். நகரில் இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம் பெற்றுச் சில நாள்களில் தனுரொக்கின் நெருங்கிய சகாக்கள் சிலரது வீடுகளிலும் தாக்குதல் நடத்தப்பட்டது. குறித்த தாக்குதலில் அவரவர் வீடுகளில் இருந்த பொருள்கள் சேதமாக்கப்பட்டதுடன் தனுரொக்கின் நண்பர் எனப்படும் நீர்வேலிப் பகுதியைச் சேர்ந்த சுதா, மற்றும் அவரது தாயார் மீதும் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அடுத்தடுத்து நடந்த இந்த வாள்வெட்டுக்கள் அதிர்வலைகளை ஏற்படுத்தின. வாள் வெட்டுக்கள் இடம்பெற்று இது தொடர்பிலான செய்திகள் ஓய்ந்திருந்த நிலையில், தனுரொக் சார்ந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள் என்று சந்தேகிக்கப்பட்ட நபர்களின் வீடுகள் கடந்த 6ஆம் திகதி முதல் அடுத்தடுத்துத் தாக்கு தலுக்குள்ளாகி வருகின்றன. அந்த நிலையில் தான் கடந்த 6ம் திகதி பிற்பகல் இணுவிலில் உள்ள வினோதனது வீட்டுக்குச் சென்ற ஒரு குழு அங்கிருந்த பொருள்களைச் சேதப்படுத்தியதுடன் மோட்டார் சைக்கிள்களுக்கும் தீயிட்டுச் சென்றிருந்தது. இந்தத் தாக்குதல் இடம் பெற்ற 10 நிமிடங்களில் ஆவாகுழுவின் ஆரம்பகால உறுப்பினர் ஒருவரின் வீடு எனக் கூறி உடுவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் சென்று அங்கும் தாக்குதல்களை நடத்தியுள்ளது இந்தக் குழு. இந்தத் தாக்குதல்களுடன் தொடர்புபட்ட எவரும் கைது செய்யப்படாத நிலையில் அடுத்த நாள் 7ஆம் திகதி தனுரொக் மீதான தாக்குதலின் சூத்திரதாரி என்று பொலிஸார் கூறிய ஓட்டுமடம் பகுதியில் அமைந்துள்ள சுமனின் வீட்டுக்குச் சென்று அங்கும் தாக்குதல் நடத்தி - அதாவது அங்கிருந்த பொருள்களை அடித்து நொருக்கிச் சேதப்படுத்திய துடன் வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கனரக வாகனம் ஒன்றையும் சேதப்படுத்தித் தப்பித்தது ஒரு குழு. இன்றுவரை இது தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை.

## பிரிந்த குழுவின் அராஜகம் இது

ஒரு பெரும் மந்தைக் கூட்டத்தில் இருந்து பிரிந்து சென்ற ஒரு சிறு கூட்டம் பழிவாங்கல் என்கின்ற பெயரில் தமக்கிடையில் மோதிக்கொண்டு மக்கள் மத்தியில் அச்சத்தை உருவாக்கி வாள்வெட்டு வன்முறைகளை மீண்டும் புத்துயிர் பெறவைத்துள்ளன. வன்முறைக் கும்பல்களைக் கட்டுப்படுத்துவது தனது முக்கிய நடவடிக்கைகளில் ஒன்று என்று இலங்கையின் புதிய அதிபராகப் பொறுப்பேற்றுள்ள கோத்தபாய ராஜபக்ச கூறியுள்ளார் என்று செய்திகள் வெளியாகியிருந்தன. அதன் முழு மூச்சான நடவடிக்கைகளாகத் தான் தெற்கில் பாதாள உலகக் கோஸ்டிகளைச் சேர்ந்தவர்களைச் சுட்டு கொல்கின்ற நடவடிக்கைகள் அரேங்கேற்றப் படுகின்றன. எனினும் வடக்கில் இத்தகைய வாள் வெட்டு மாபியாக்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் ஆமை வேகத்தில் இடம்பெறுவது குறித்துப் புதிய அதிபரின் கவனம் வடக்கின் பக்கம் திரும்புமா.?

# ஆறாவது குணம்

நெடுங்கதை
அத்தியாயம்
12

**கலியுக பித்தன்**

மர்ம புன்னகை ஒன்றை ராகுல் வீச, அடுத்து என்ன செய்ய வேண்டும் ன்பது தெரியாமல் முழித்து கொண்டு நின்றான் கவிந்த்.

"கவிந்த் சேர்... கேஸப்பற்றி இப்போ நான் உங்களிட்டக் கேக்கலாமா?" கவிந்தை சீண்டுவதற்காக ராகுல் கேட்டான்.

"சேர்... அது... அது வந்... ந்து..." வார்த்தைகள் வர மறுத்தன. வந்த வார்த்தைகளோ பற்களிலும், நாவிலும், உதட்டிலும் முட்டி மோதிப் பகுதி பகுதியாக வந்து விழுந்தன. மரியாதை கொடுக்க வேண்டிய உயரதிகாரி என்று தெரிந்து கொள்ளாமல், அதிகப் பிரசங்கித் தனமாக நடந்து கொண்டதன் விளைவு தான் இவை என்பதை கவிந்த் உணர்ந்து கொண்டான்.

"இந்த கேஸ் இப்போ என்ன நிலைமைல இருக்கு?" கடும் தொனியில் இரைந்தான் ராகுல்.

"இதுவரைக்கும் எந்த துப்பும் கிடைக்கல சேர். பட் கெதியா சகல விசயத்தையும் பிடிச்சிருவம்" பயபக்தியோடு பதிலளித்தான்.

"இந்த கேசுக்கும் ரஸ்விகாக்கும் என்ன தொடர்பு?"

"கொலை செய்யப்பட்ட பெண் ரஸ்விகாவோட ப்ரண்ட். அவங்க ரெண்டு பேரும் அடிக்கடி போன்ல ஏதோ பேசி இருக்காங்க."

"அதை வைச்சு எப்டி இந்த முடிவுக்கு வந்தீங்க?"

"அது...அ..து.... " தலையை சொறிந்து கொண்டு பார்வையை தரையை நோக்கி திருப்பினான் கவிந்த்.

"சீ... மிஸ்டர் கவிந்த். நீங்க ஒரு பொலிஸ் ஓபீசர். எலும்புத் துண்டுக்கு அலையுற நன்றியுள்ள நாலு கால் மிருகம் அல்ல" முகத்தை சுழித்தபடி சொன்னான் ராகுல்.

ராகுலின் அந்த பேச்சு கவிந்தின் மனதை சுளீர் என்று தாக்கியது. வெட்கத்தால் தலையைத் தொங்கப் போட்டான்.

அந்த நேரத்தில் அறை ஒலிப்பு மணி மீண்டும் கேட்கவே கவிந்த், ராகுலின் அனுமதியோடு "யெஸ் கம் இன் " என்றான். குரலில் பழைய தோரணை தென்படவில்லை.

கதவை திறந்து கொண்டு அமைச்சர் வரதராஜன் வந்து நின்றார். ராகுல் அவரைப் பார்த்தும் அவரை ஒரு பொருட்டாக எண்ணிக் கொள்ளவில்லை. ஆனால் கவிந்தோ திடீரெனக் கலவரமடைந்து, அமைச்சருக்கு ஒரு வணக்கத்தைச் செலுத்தினான். கவிந்தின் கண்கள் சுழன்று அடிப்பதை நன்றாக அவதானித்த ராகுல், அவர்கள் இருவருக்குள்ளும் ஏதோவொன்று இருப்பதை உணர்ந்து கொண்டான்.


"ஓகே மிஸ்டர் கவிந்த், உங்க கிட்ட வி.ஐ.பி. வந்திருக்கார் போல. நீங்க பேசுங்க. நான் வெளிக்கிடுறன்" என்று சொல்லி கொண்டே வரதராஜனை ஏளனமாக பார்த்துக்கொண்டு வெளியேறினான்.

வரதராஜனை ராகுல் அவ்வாறு ஏளனமாக பார்த்ததற்கு காரணமும் இருந்தது.

விடுதலைப் போராட்ட வரலாறுகளையும், அந்தப் போராட்டத்தில் தம் உயிர் நீத்த தியாக சொரூபங்களையும் தனக்குச் சாதகமாக்கி, மேடைகளில் தமிழ் மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிப் பேசி பரப்புரை செய்துவிட்டு அமைச்சர் பதவிக்கு வந்தவர்தான் இந்த வரதராஜன்.

பதவிக்கு வந்த பிற்பாடு முன்னாள் போராளிகள் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களையும், முன்னாள் போராளி பெண்களையும் பயமுறுத்தி, கட்டாயப்படுத்தி தவறான முறையில் பயன்படுத்தி தான் சம்பாதித்து கொண்டு, வெளியில் போராளிகளின் புனர்வாழ்வுக்கு தான் கடுமையாக போராடி கொண்டிருப்பவர் என்றும் காட்டிக்கொள்ளும் ஒரு பச்சை துரோகிதான் இந்த வரதராஜன். இப்பேர்ப்பட்டவர்களை ஏளனமாகப் பார்ப்பதில் தவறொன்றும் இல்லையே...

○ ○ ○ ○ ○ ○



ராகுல் ஒபிஸில் இருந்து புறப்பட்டு நேராக தன்னுடைய அறைக்கு சென்றான். அங்கே ரஸ்விகாவுடன் இன்னொரு பெண் அமர்ந்திருந்தாள். அவளுடைய உடல்களில் ஆங்காங்கே காயங்கள் இருப்பதையும் ராகுல் அவதானித்தான். அந்த பெண்தான் தமிழ்ச்செல்வி என்பதை ஊகிப்பதற்கு அவனுக்கு நீண்ட நேரம் எடுக்கவில்லை. ஆனாலும் அதை உறுதிப்படுத்த வேண்டும் என அவனுடைய மனம் சொல்லி கொண்டே இருந்தது.

"ரஸ்விகா! யாரு இவங்க?"

"நான் சொன்னனே தமிழ்செல்வி. அது இவங்க தான்" என்று தமிழ்செல்வியை தன்னுடைய தோளோடு அணைத்து கொண்டு அறிமுகப்படுத்தினாள் ரஸ்விகா.

தமிழ்செல்வியை பார்த்து ஒரு வணக்கம் சொல்லிவிட்டு, அலுமாரிக்குள் இருந்து முதலுதவி பெட்டியை எடுத்து ரஸ்விகாவிடம் கொடுத்தான். காயங்களுக்கு கட்டுப்போட்டு விடும்படியும் கூறிவிட்டு அருகில் இருந்த கட்டிலில் மல்லாக்க படுத்து கொண்டான் ராகுல். ரஸ்விகா, தமிழ்செல்விக்கு மருந்து கட்ட தொடங்கினாள்.

ராகுலின் மனதுக்குள் ஏகப்பட்ட குழப்பங்களும், சந்தேகங்களும் சேர்ந்து புயலாய் அடித்து கொண்டிருந்தன. அதன் வெளிப்பாடுகள் அவனது முகத்தில் அப்பட்டமாகவே தெரிந்தது.

"ராகுல்... ராகுல்..." சற்று தயக்கத்தோடு ரஸ்விகா கூப்பிட்டாள்.

ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி இருந்தவன் சற்று கஷ்டப்பட்டு நிதானத்திற்கு வந்தான்.

"ம்ம்... சொல்லு" என்றான்.

"தமிழ்செல்வி ஏதோ முக்கியமான விஷயம் உங்க கிட்ட சொல்லச்சொன்னா "

"இப்போ நான் யார் கூடவும் பேசுற நிலைல இல்லை"

"ப்ளீஸ் ராகுல்... இப்போ அவ சொல்றதை கேட்டா இந்தக் கேஸை ஈசியா முடிச்சிடலாம்."

"எந்த கேஸ்" சற்று குழப்பத்தோடு சேர்ந்து உற்சாகமாகி கேட்டான்.

"நீங்க இரகசிய பொலிஸை சேர்ந்த பெரிய ஒபிஸர் எண்டு எங்களுக்குத் தெரியும் அண்ணா" தமிழ்செல்வி குறுக்கிட்டாள்.

விழிகளை விரித்தபடி அவள் மேலும் கூறுவதை கூர்ந்து கவனிக்கலானான்.

"நீங்க இங்க எதுக்காக வந்தீங்க எண்டதும் எனக்கு தெரியும். அதனாலதான் உங்களுக்கு உதவி செய்து எங்களுக்கும் கிடைக்க வேண்டிய நியாயத்தை உங்க மூலமா பெற்று கொள்றதுக்காகவும்தான் வந்தன். "

"நான் எதுக்காக வந்தனான் எண்டு உங்களுக்கு யார் சொன்னது?"

"சந்துரு..."

"சந்துருவா?" குரலில் சிறு சோகம் தொற்றி கொள்ள கேட்டான் ராகுல்.

"ஆமா உங்க உயிருக்குயிரான உற்ற நண்பன் சந்துருதான் சொன்னார் அண்ணா."

அந்த வார்த்தைகளைக் கேட்ட ராகுலின் கண்களில் அடக்கி வைத்த சோகங்கள் கண்ணீராய் வெளியேற தொடங்கியது. ரஸ்விகா, அவன் அருகே சென்று அவனை தேற்ற முற்பட்டாள். சிறு பயனும் அடைந்தாள்.

கண்களை துடைத்துக் கொண்டு "அவன் உங்களுக்கு எப்டி....." அழுகை மீண்டும் குறுக்கிட பாதியிலேயே நிறுத்தி கொண்டான்.

இப்போது தமிழ்செல்வியின் கண்கள் குளமாக தொடங்கிற்று. "சந்துரு.... என்னோட கா... காதலன்... " அழுகையின் மத்தியில் பெரும் அவஸ்தைப்பட்டு சொல்லி முடித்து மீண்டும் அழ தொடங்கினாள்.

(தொடரும்)

## வருகிறது ''பூம்'' இன் புதிய சுப்பர் சொனிக்...!





அமெரிக்காவைச் சேர்ந்த "பூம்" தொழில்நுட்ப நிறுவனம் கடந்த புதன் கிழமை தனது சுப்பர் சொனிக்கின் புதிய ரக விமானம் ஒன்றை வெளியிட்டது. அதற்கு எக்ஸ் - பி 1 என்று பெயரிட்டுள்ளது. ஒலித் தடையை வெல்லக்கூடிய - அதாவது ஒலியை விட வேகமாகப் பறக்கக்கூடிய வணிக விமானமாக இது திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ளது என்பதுதான் இதன் சிறப்பு. இதுகுறித்துப் பூம் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், எக்ஸ்பி - 1 கார்பன் - நடுநிலை விமான சோதனை திட்டத்துக்கு உட்படும், இது அடுத்த ஆண்டு கலிபோர்னியாவின் மொஜாவேயில் நடக்கும் என்றுள்ளது. இதுவரை உருவாக்கப்பட்ட சுப்பர் சொனிக் ஜெட் விமானங்களை விட அமைதியான மற்றும் அதிக எரிபொருள் திறன் கொண்டதாகவும், மேற்குறித்தவற்றிலிருந்து இரைச்சல் அளவுகள் மற்றும் கார்பன் உமிழ்வு தரங்களைப் பூர்த்தி செய்யச் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் விமான நிலையங்களின் அழுத்தத்திற்கு உள்ளாகி வருகின்ற நிலையில்தான் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த எக்ஸ்பி - 1 சுப்பர் சொனிக்கின் 71 அடி நீளம் (21.6 மீற்றர்) உருகி, கார்பன் கலப்பு ஏர்ஃப்ரேம் மற்றும் மூன்று ஜி, வடிவமைக்கப்பட்ட ஜே 85-15 இயந்திரங்களை உடையது என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியா தமிழர் பக்கம் சாயுமா?



"இனிவரும் காலங்களிலும் தமிழ்த் தலைவர்களை வைத்துத் தனது ராஜதந்திர முனைப்புகளை கொழும்பில் நகர்த்திச் செல்வது முடியாத விடயம். அதற்குப் பிரதானமாக இரண்டு காரணங்களைக் குறிப்பிட முடியும். ஒன்று திறமையான தலைவர்கள் எவரும் தமிழர் மத்தியில் இல்லை. இரண்டாவது தமிழ்த் தேசியவாதிகளை நம்ப முடியாது. அவர்கள் தமக்குள் தற்காலிக இணைப்பைக் காட்டிக்கொண்டாலும் சந்தர்ப்பம் ஏற்படும் போது ஒருவரை ஒருவர் காட்டிக்கொடுத்தபடி பல கூறுகளாகப் பிரிந்து செயற்படுவார்கள்."

**1987**ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதியன்று இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இது இலங்கையின் முக்கிய ராஜதந்திரியும் அதிபருமான ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் விருப்பத்துடன் நடைபெற்ற ஒன்றல்ல அதேவேளை தமிழர்களை ஒரு தரப்பாக வைத்துச் செய்யப்பட்ட ஒப்பந்தமும் அல்ல. இலங்கையின் இறைமை என்ற கோணத்தில் நோக்கினால், தென்னாசியாவின் பெரியண்ணா என வர்ணிக்கப்படும் இந்தியா, குட்டி நாடான இலங்கையை மிரட்டிக் குந்தியிருக்கப் பண்ணிய சம்பவமே அது. அதற்கான எதிர் வினைகளைச் சிங்கள தலைவர்கள் இன்றுவரை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தியப் பிரதமர் ரஜீவ்காந்திக்குச் செங்கம்பள வரவேற்பளித்துத் தானும் ரஜீவ் காந்தியும் அதில் நடந்துவரும்போது கடற்படைச் சிப்பாய் ஒருவர் ரஜீவ் காந்தியைத் தன் துப்பாக்கியால் தாக்க முற்பட்டதற்கு ஜே.ஆர்.சொன்ன விளக்கமே அதற்குச் சான்று. "சன் ஸ்ரோக்" அதாவது உச்சி வெய்யில் வெக்கையால் ஏற்பட்ட தடுமாற்றம் என ஜெ.ஆர். விளக்கம் சொன்னார். மரியாதை அணிவகுப்பில் சிப்பாய் ஒருவர் ஒரு நாட்டின் தலைவரை தாக்குவதை அப்போதுதான் உலகம் முதற்றடவையாகக் கண்டது. உலக அரசியல் தலைவர்களின் செங்கம்பள வரவேற்பில் நடந்த முதற் சம்பவம் அது. உடனடியாக ரஜீவ்காந்தி தன்னைச் சுதாகரித்துக் கொண்டதால் உயிர் தப்பினார்.

இலங்கை அரசின் நிலைப்பாட்டையும், சிங்கள ஆட்சியாளர்களின் தன்மையையும் தமிழ்த் தலைவர்கள் ரஜீவ் காந்திக்கு உணர்த்துவதற்கு கிடைத்த மிக முக்கிய தருணம் அது. அதைப் பின் வந்த நாள்களில் விடுதலைப் புலிகளும் கையாளத் தவறிவிட்டனர். இந்திய இராணுவத்துடன் சேர்ந்து நின்ற வரதராஜப் பெருமாள், சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்றவர்களும் கையாளத் தவறிவிட்டனர்.

தொடக்கத்திலேயே இந்தியாவின் பிடியிலிருந்து வழுக்கிய பிரபாகரன் அவரது தொலைத் தொடர்புக் கருவிகளை இந்திய அரசு பறித்த பின்பு பட்டினி கிடந்தும் புதுடில்லி - அசோக் ஹோட்டலில் ரஜீவ் காந்தியுடன் மேற்கொண்ட விவாதத்தின் மூலமும் அதனை வெளிக்காட்டியிருந்தார். "நீ இத்தனை தடவை என்னை ஏமாற்றியிருக்கிறாய்" என்று ரஜீவ் காந்தி பிரபாகரனைப் பார்த்துக் கூறியபோது "அப்படியானால் அத்தனை தடவைகளும் நான் எனது மக்களைக் காப்பாற்றியிருக்கிறேன்" என்று பிரபாகரன் கூறியிருந்தார். இதன்மூலம் இந்தியாவை ஆக்கிரமிப்பாளர் என்று அவர் அந்த நாட்டின் தலைவருக்கு முன்பாகவே கூறியிருந்தார். அதாவது இந்தியாவை அவர் வெறுத்தார்.

இந்திய வெறுப்பு என்ற நிலைப்பாட்டில் ஜே. ஆரும் இருந்தார். தமிழ் இயக்கங்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்துச் சிங்கள ஆட்சியை அழிக்க நினைத்த இந்தியாவுக்கு அதன் செல்லப் பிள்ளைகளான தமிழ் ஆயுததாரிகளைக் கொண்டே பதிலடி கொடுக்க விரும்பினார் ஜே. ஆர். அது தன்னால் கொல்ல முடியாத ரஜீவ் காந்தியை புலிகள் கொல்லுமளவுக்கு வன்மாக மாற்றியிருந்தது. ஜே.ஆர் இறந்து ஓரிரு ஆண்டுகளில் ஜே.ஆரின் கனவு பலித்தது. இந்த விடயத்துக்குப் பொருந்தத் தக்க ஒரு சொல்லாடலையும் ஜே.ஆர். கூறியிருந்தார். "பன்றி இறைச்சியை பன்றி இறைச்சியின் மீதே வைத்து வெட்டுவேன்" என்று.

இந்தியா வெறுப்பைத் தலைகீழாக மாற்றும் வாய்ப்பு வரதராஜப் பொருமாளுக்கும், சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்றவர்களுக்கும் இருந்த போதிலும் அவர்கள் வகைதொகையின்றிப் புலிகளின் குடும்ப உறுப்பினர்களைப் பழிவாங்கியும், இளம் பிள்ளைகளை வகைதொகையின்றிப் பிடித்துத் தமிழ்த் தேசிய இராணுவத்துக்கு (ரி.என்.ஏ) வலுச் சேர்க்க முனைந்ததும் இந்திய எதிர்ப்பை தமிழ் மக்களிடம் ஆழமாக வேரூன்ற வைத்தனர். மட்டுமல்லாது தமது பிள்ளைகளை இந்திய சார்பு அணியிடம் சிக்கவிடாது காப்பாற்றி இந்தியப் படைகளுக்கு எதிர் நிலைப்பாட்டைக் கொண்டிருந்த புலிகளிடம் (வன்னிக் காட்டுக்கு) அனுப்பி வைக்குமளவிற்குத் துன்பம் விளைவித்தார்கள்.

இந்தியாவை ஏற்றுக்கொள்ளாத பிரபாகரனை ஓரம் கட்டுவதற்காக புலிகளுக்கு எதிரான ஆயுத இயக்கங்களை இந்தியா தனது படைகளின் பாதுகாப்புடன் களமிறக்கியபோதிலும் இந்தியா எதிர்பார்த்தபடி மக்கள் தலைவர்களாக அந்த அமைப்புகளால் காலூன்ற முடியவில்லை. இந்தியா உருவாக்கிய வடக்குக் கிழக்கு மாகாண சபையும் இரண்டு ஆண்டுகளில் கைவிடப்பட்டது. இது இந்தியாவுக்கு ஏற்பட்ட முதல் தோல்வி.

2009இல் புலிகள் அழிக்கப்பட்டதன் பின்னர் 2013இல் 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின்படி வட மாகாணசபை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கைக்கு எட்டியபோதிலும் அந்தக் கட்சி தொடங்கப்பட்ட காலத்தில் (1949) இருந்து நிர்வாகம் நடத்திய அனுபவம் இல்லாதவரான முதலமைச்சரான நீதியரசர் விக்னேஸ்வரனும் இந்தியாவைச் சரிவரக் கையாள முடியாதவராகவே இருந்தார்.

இது தமிழ்த் தலைவர்களின் திறமையின்மையை இந்தியா புரிந்து கொள்வதற்குக் கிடைத்த 2ஆவது சம்பவமாகும். இதைவிட வடக்குக் கிழக்குத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபையை வடக்குக் கிழக்குத் தலைவர்களே பலப்படுத்தாது விட்டதால் கடந்த இரு வருடங்களாக மாகாணசபை நிர்வாகம் இல்லாமலே மத்திய அரசு நிர்வகிக்க முடியும் என்ற யதார்த்தத்தை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் அதன் பங்காளி முன்னாள் ஆயுதக் குழுக்களும் ஏற்படுத்திவிட்டதையும் குறிப்பிடவேண்டும்.


இதனால் 13ஆம் திருத்தம் மூலமாக இந்தியா அடைய விரும்பிய இலக்கை, எதிர்பார்த்த விடயங்களைத் தமிழ்த் தலைவர்கள் ஊடாகப் புதுடில்லியால் நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை. தமிழ்த் தலைவர்கள் 13ஆவது திருத்தம் இனப் பிரச்சினைக்கான தீர்வில்லை என்று திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்த நிலையில் இந்தியாவால் அதையொட்டிய எந்தவொரு விடயத்தையும் நகர்த்த முடியவில்லை.

இனிவரும் காலங்களிலும் தமிழ்த் தலைவர்களை வைத்துத் தனது ராஜதந்திர முனைப்புகளை கொழும்பில் நகர்த்திச் செல்வது முடியாத விடயம். அதற்குப் பிரதானமாக இரண்டு காரணங்களைக் குறிப்பிட முடியும். ஒன்று திறமையான தலைவர்கள் எவரும் தமிழர் மத்தியில் இல்லை. இரண்டாவது தமிழ்த் தேசியவாதிகளை நம்ப முடியாது. அவர்கள் தமக்குள் தற்காலிக இணைப் பைக் காட்டிக்கொண்டாலும் சந்தர்ப்பம் ஏற்படும் போது ஒருவரை ஒருவர் காட்டிக்கொடுத்தபடி பல கூறுகளாகப் பிரிந்து செயற்படுவார்கள்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

12

# எங்கே போகிறோம்?



எழுத்தாளர்
மு.சிவநேசன்
எழுதும் தொடர்

## மீண்டும் கொரோனா

மிகுந்த கட்டுப்பாட்டில் இருந்த இலங்கையின் கொரோனா எண்ணிக்கை திடீரென எகிற ஆரம்பித்து விட்டது கவலைக்குரியது. நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க சென்றவேளை அங்கு பேணப்பட்ட ஒழுங்கு முறைகளை பாராட்டாமல் இருக்க முடியவில்லை. அத்தனை சிறப்பாக ஒருவரோடொருவர் கொடுக்கல் வாங்கல் இன்றி ஏற்பாடுகள் பிரமாதமாகவே இருந்தன. சில அலுவலகங்களிலும் ஏற்பாடுகள் சிறப்பாக கையாளப்படுகின்றன. இப்படி எல்லாம் அமைந்தால் இது கொரோனா அற்ற நாடு ஆகிவிடும் என்றுதான் எண்ணத் தோன்றியது.

என்றாலும் பொதுமக்கள் கொரோனாவை முற்றிலும் மறந்து போன நிலையில் அது மீண்டும் நுழைந்திருக்கிறது. இதன் பரம்பலுக்கு உரிய முழுப் பழியையும் அசண்டையாக இருந்த மக்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கொரோனா பற்றிய போதிய விழிப்புணர்வு தாராளமாக மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டே இருந்தது. என்றாலும் அவர்களின் அசண்டையீனமே, தெரிந்து கொண்டு செய்யும் தவறுகளே இன்றைய மோசமான நிலமைக்கு காரணம் ஆகின்றது.

ஆவணி, புரட்டாதி மாதங்களில் முகக்கவசம் அணிந்து திரிபவர்களை மன நோயாளிகளாகப் பார்க்கும் மனப்பாங்கு உருவாகி இருந்தது. மேலும் பலர் ஏதோ பெயருக்கு முகக்கவசம் அணிந்து மூக்கை வாயை திறந்தபடி திரிவதும் மிகவும் இயல்பானதாக இருக்கக் காணப்பட்டது.

தொடக்க காலங்களில் கூலித் தொழிலாளிகள்கூட இதனைப் பற்றிய முழு விழிப்புணர்வு கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஒரு பழைய சாரமோ சாக்குத் துண்டோகூட அவர்களினது முகக்கவசமாக மாறிவிட்டிருந்தது.

வெளிநாட்டில் இருந்து வருகின்ற வசதி படைத்தவர்கள் சொகுசு விடுதிகளில் தமது தனிமைப்படுத்தல் காலங்களை கழிக்கிறார்கள். ஏனையோர் அரசு ஏற்பாடு செய்யும் முகாம்களில் பதினான்கு நாட்களை கழிக்கிறார்கள். பதினான்கு நாட்கள் போதாது என்ற நிலையில் மேலும் சில காலம் தனிமையைப் பேணவேண்டிய சமூகக் கடமையும் அவர்களுக்கு இருக்கிறது.

இவர்களை கண்காணித்து நிர்வகிக்கும் பொறுப்பில் உள்ள சுகாதார துறையினர், பாதுகாப்புப் படையினர் ஆகியோரின் அர்ப்பணிப்பு மிக்க பணி மகத்தானது. அவர்களுக்குத் தொற்று ஏற்படாதவாறு காக்க வேண்டிய மாபெரும் சமூகக் கடமை ஒவ்வொருவருக்கும் உரியது. இவர்கள் பாதிக்கப்பட்டால் முழு நாடுமே கொரோனாவால் முடங்கிவிடும்.

பல இடங்களில் கொரோனா தடுப்பு நடவடிக்கை என்ற பெயரில் கொரோனா பரம்பல் வாய்ப்புக்களே அதிகம் தென்படுகின்றன. உதாரணமாக கையை கழுவித்தான் உள்ளே அனுமதிக்கும் இடங்களில் கைகழுவ போதுமான எச்சரிக்கை நடவடிக்கைகள் கிடையாது. காலால் இயக்கி தண்ணீரை திறக்கும் ஏற்பாடுகள் பிரபலமான பின்னரும் அனைவரும் ஒரே திருகியை திறக்கக் கட்டாயப் படுத்தப்படுவது ஆபத்தானது.

இப்போது கொரோனா சமூகத்தில் உள் நுழைந்த வழியை கண்டு பிடிக்க முடியாது அதிகாரிகள் திணறுகிறார்கள். முதலில் அடையாளம் காணப்பட்டவர்தான் இதன் மூலம் என்றும் கருத முடியாது. சிலரிடம் தொற்று ஊமை நிலையில் இருந்தும் பரவி இருக்கலாம். போன இடம், வந்த இடம், சந்தித்த ஆட்கள் பற்றி எல்லோரும் வெளிப்படையாகவே பேசத் தயங்கும் சூழ்நிலையும் சிக்கலாக இருக்கலாம்.

அதுவும் தொற்று எத்தனை நாள்களுக்கு முன்னர் எந்த இடத்தில் ஏற்பட்டு இருக்கலாம் என்ற ஊகங்கள் துல்லியமானவையாக இருக்காது.

மக்கள் விழிப்புணர்வு கொண்டவர்களாக இருந்தும் அசண்டையாகவே இருக்கிறார்கள். இந்திய நிலமை மோசம் என்று தெரிந்தும் பணத்திற்காக அவர்களுடன் கடல்வழி தொடர்புகளைப் பேணுகிறார்கள். இதனால் தமக்கும் தமது குடும்பம் மற்றும் உறவுகளுக்கும் சமூகத்தில் ஏற்படக் கூடிய பாதகமான நிலமை பற்றி அவர்கள் கவலைப்படுகிறார்கள் இல்லை.

ஒருவர் அசண்டையாகவே இருந்து இன்னொருவர் பாதிக்கப்பட்டாலே அந்த இழப்புக்கு பொறுப்பு கூறும் சக்தி முதலாமவருக்கு இருப்பதில்லை. இந்த நிலமையில் ஒருவரால் சமூகம் பாதிக்கப்பட்டால் அந்த இழப்பு பல பில்லியன்களாகவே இருக்கும். இத்தகைய பொறுப்பின்மை மிகவும் பாரதூரமானது. இதனை ஒவ்வொருவரும் உணர்ந்து புத்திசாலித்தனமாக தமது ஒவ்வொரு நகர்வையும் செயற்படுத்த வேண்டிய காலகட்டம் இது.

எனவே சீன ஜப்பானிய மக்களைப் போல அரசு விடுக்கும் எச்சரிக்கைகளை கருத்தில் கொண்டு அந்தக் கட்டமைப்புக்குள் தமது வாழ்க்கையை ஒழுங்கு படுத்த வேண்டிய தேவை ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. கடைகளில் பொருட்களை வாங்க முண்டியடிப்பது, இடைவெளி பேணத் தவறுவது, அவசியமற்ற சந்திப்புகள், கொண்டாட்டங்கள், நோயை மறைப்பது, வைத்தியசாலையில் இருந்து தப்பி ஓடுவது, தனிமைப்படுத்தல் விதிகளை மீறுவது போன்றவை தொடர்ந்தும் இடம்பெற்றால் நிலமை கட்டுக் கடங்காமல் போய்விடும்.

இரும்புக் கரம் கொண்டு அரசுகள் மீறுபவர்களை அடக்க வேண்டிய நிலமை எழுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

உலக நிலமைகள் மோசமடைந்து வருகின்ற காலகட்டத்தில் வசதிபடைத்த நாடுகளே திணறும் நிலமையில் இலங்கை போன்ற சிறிய நாடுகளில் மக்கள் மிகுந்த சமூகப் பொறுப்புடன் வாழ வேண்டிய காலகட்டம் இது. இன்றேல் கொத்துக் கொத்தாக இறப்புக்களைச் சந்திக்க வேண்டிய நிலமை கண்கூடு. தவிர நோயின் துன்பங்களை சமாளிப்பது இறப்பை விடக் கொடியது.

தெரிந்திருந்தும் மக்கள் பொறுப்புடன் நடந்து கொள்வார்களா என்பது சந்தேகமே. அவர்களின் போக்குகள் அப்படி. நாட்டில் இடம்பெறும் கொலை கொள்ளை வன்முறை பணத்தின் பின்னாலான ஓட்டம் போன்ற போக்குகளை பார்க்கும் போது அவரவர் மனநிலையில் கொரோனா ஒரு தூசி. சமூகம் பற்றிய அக்கறையின்மை பற்றிய கவலைகள் படரும் வேளையில் தனது மனைவியை பெற்ற குழந்தைகளை கூண்டோடு கொல்லும் மனப்பாங்கு பற்றிய செய்திகள் வருகின்றன. இப்படிப் பட்டவர்களிடம் போய் சமூகப் பொறுப்பை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

பலருடைய வாழ்க்கை சாதாரணமாகவே விரக்தியின் விளிம்பில் இருக்கிறது. ஏதும் பிரச்சினை இல்லாமலே கற்பனையில் விரக்தியுடன் வாழ்பவர்கள் பலர். இன்றைய சூழ்நிலையில் தொழில் ஒழுங்கின்மை, வருமான இழப்பு, பிற நோய் நிலமைகள், விலைவாசி என பலரும் திணறுகிறார்கள். ஏற்கெனவே ஆழிப்பேரலை (சுனாமி), போர் என்று பலர் பாதிக்கப்பட்டு வாழ்கிறார்கள். இவர்கள் இவ்வாறு வாழ்க்கையை கொண்டு செலுத்த சிரமப்படும் நிலையிலும் சமுதாயக் கடமையாக பொறுப்புணர்வுடன் இருக்க வேண்டிய அவசியமும் எழுகிறது.

பெருமளவிலான உளவியல் ஆற்றுப்படுத்தல்களுக்கான தேவை சமூகத்தில் எழுகிறது. இதற்கான வளங்கள் தாராளமாக இல்லை. இவை முறைப்படி சுகாதாரத் துறையினரால் அடையாளம் காணப்பட்டு கையாளப்படாமல் போவதால் மக்கள் பெருமளவில் சுயநலக் கும்பல்களால் ஈர்க்கப்படுகிறார்கள்.

சிக்கலான நோய்களுக்கு பேய் பிசாசு என்று வைத்தியம் செய்து பலரது நிலமை கவலைக்கிடமாகிவிட்டது. இதனால் பல விசாரணைகள் வழக்குகள்கூட இடம்பெற்று வருகின்றன.

துறைசார் நிபுணர்களால் கண்காணிக்கப்பட வேண்டிய நிலமைகள் சாதாரண சூழ்நிலையில் சமாளிக்கப்படுவது போன்று அசாதாரண சூழ்நிலையில் கையாளப்படவளப் பற்றாக்குறை இடம் தருவதில்லை.

கொரோனா நிலமை மேலும் மேலும் மோசமடைந்தால் வைத்திய வசதிகள் அந்தப் பக்கமாக கவன ஈர்ப்பைப் பெறும்போது தினம் தினம் சாதாரண தொற்று மற்றும் தொற்றா நோய்களால் அவஸ்தைப் படுபவர்கள் தாமும் திணறப் போகிறார்கள். தவிர இத்தனை பெரிய எண்ணிக்கையில் ஆபத்தான நோயாளர்களை கண்காணிக்கும் வைத்தியர்கள், சுகாதார பணியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள், பாதுகாப்பு படையினர், காவல்துறையினர் எனப் பலரது கடமைகளும் ஆபத்தானதே. அவர்களும் மனிதர்களே.

இல்லை அவர்களை கடவுளாகவே பார்க்க வேண்டும் என்றால் மிகையாகாது. எனவே அந்தத் தெய்வங்களின் பணியை இடைஞ்சல் செய்யாமலும் அவர்களின் பணிச்சுமையை அதிகரிக்காமலும் தம்மையும் தமது உறவுகளையும் சமூகத்தையும் சிக்கலில் மாட்டாமலும் ஒவ்வொருவரும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டிய காலகட்டம் இது.



# தமிழ் அரசுக் கட்சியிடம் நியாயம் கேட்கும் ஒரு தொண்டன்



## எல்லைக்காவலன் ஏகாம்பரத்தின் காத்திருப்பு

■ அகில்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியுடன் இணைந்து 63 வருடங்களுக்கு மேல் பயணித்த, கட்சிக்காகவும் கல்முனை மாநகரம் வாழ் தமிழ் மக்களுக்காகவும் பாடு பட்டுவந்த நான், விருட்சம் ஒன்று வேரோடு தோண்டி வீசப்பட்டது போன்று கட்சியிலிருந்து வீசப்பட்டேன்.

இவ்வாறு தெரிவிக்கிறார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட மூத்த உறுப்பினரும் கட்சியின் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான குஞ்சித்தம்பி ஏகாம்பரம் மனம் வெதும்பக் கூறினார்.

கல்முனை 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் தமிழ் - முஸ்லிம் மக்களால் எல்லைக் காவலன் என்று பெருமையோடு அழைக்கப் பட்டவருமான கு.ஏகாம்பரம் 1956ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினராகச் சேர்ந்து கட்சியை கல்முனையில் வேரூன்றச் செய்வதற்காக பெரும் தியாகங்களுடன் உழைத்தவர். கட்சியின் பொதுச் சபை மற்றும் மத்திய குழுவிலும் உறுப்பினராக இருந்து வந்துள்ளார்.

கல்முனை மாவட்டத்தில் தமிழர்களுக்கு இழைக் கப்பட்ட, குறிப்பாகக் கல்முனைவாழ் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக நியாயம் வேண்டிப் போராடுவதில் முன்நின்று வந்த அவர், கல்முனை நகரத்தில் இனங்களுக்கு இடையிலான ஒற்றுமைக்காகவும் பாடுபட்டவர்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழர் உரிமைக்காகப் பாதுகாக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் நிறுவுனர் எம்.எச்.எம்.அஷ்ரப் போன்ற அரசியல் தலைவர்களுடனும் நல்லிணக்கச் செயற்பாடுகளில் நெருக்கமாகப் பணியாற்றியவர்.

இன்று தமிழ் அரசுக் கட்சியின் சகல பதவிகளில் இருந்தும் அடிப்படை உறுப்புரிமையில் இருந்தும் கூட நீக்கப்பட்டுள்ளார். மிக எளிதாக அவரைத் தூக்கி வீசிவிட்டார்கள்.

தன்னைக் கட்சியில் இருந்து நீக்கியமை தொடர்பில் மீளாய்வு செய்யுமாறு ஏகாம்பரம் விடுத்த கோரிக்கை தொடர்பில் பல மாதங்களாகியும் இதுவரை எந்தவிதப் பதிலும் வழங்கப்படவில்லை. "இன்னும் காத்திருக்கின்றன்" என்றபடி செம்மண் பத்திரிகையிடம் தனது உளக்கிடக்கையைக் கொட்டினார் ஏகாம்பரம்.

கட்சியில் இருந்து என்னை நீக்குவதாக கட்சியின் முன்னாள் செயலாளர் கி.துரைராஜசிங்கம் (இப்போது அவரைக் பதவியிலிருந்து ஓடச் செய்துவிட்டார்கள்) ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அதில் என் மீது 9 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

ஒரு நபரை விசாரணை செய்து குற்றவாளியெனத் தீர்ப்பு வழங்கப்படும் வரை அவர் சந்தேகநபரே என்கிற நீதி நியாயம் இன்றி நான் கட்சியில் இருந்து, எனது தரப்பு விளக்கம் எதுவும் கேட்கப்படாமலேயே தூக்கி வீசப்பட்டுவிட்டேன். தாங்களாகவே என் மீது குற்றத்தைச் சுமத்தி என்னைக் கட்சியை விட்டு நீக்கிவிட்டனர்.

அவர்களின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான எனது பக்க நியாயங்களை துரைராஜ சிங்கத்திற்கும் கட்சித் தலைவர் மாவை சோ.சேனாதிராசாவுக்கும் தெளிவுபடுத்தினேன். ஆனால், யாரும் அதனைச் செவிமடுப்பதாக இல்லை.

கட்சியின் முடிவை மீளாய்வு செய்யுமாறு கேட்டு இரு தடவைகள் கடிதங்கள் எழுதியிருக்கின்றேன். அதற்கும் பதிலில்லை. எனது தரப்பு நியாயத்தை விளக்க வாய்ப்பளிக்குமாறு தலைவர், செயலாளர், மத்தியகுழுவினரிடம் எழுத்து மூலம் கேட்டேன். எதற்கும் பதிலில்லை.

கட்சிக்காக, தமிழ் மக்களுக்காக இவ்வளவு காலமாகக் கட்சியிலிருந்து பாடுபட்ட எனது மீளாய்வுக் கோரிக்கை தொடர்பில் இப்போது வரை அமைதியே பதிலாக இருக்கின்றது. தந்தை செல்வாவின் தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்த வரையில் நான், "அற்ற குளத்து அறு நீர்ப் பறவையல்ல.... ஒட்டியும் ஆம்பலும் நெய்தலும்... போன்றவன்" எனக்கூறும் எல்லைக் காவலன் ஏகாம்பரம், கட்சி என்னை நீக்கினாலும் நான் இன்னும் தமிழ் அரசுக் கட்சிக்காரன்தான் என்று மார் தட்டினார்.

தமிழ் மக்களின் நலன் கருதி அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் ஒருங்கிணைக்கும் தமிழ் அரசுக் கட்சி தனக்கும் ஒரு நியாயம் வழங்கும் என்று அவர் இன்னமும் நம்புகின்றார்.

ஏகாம்பரம் கடந்த பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்ட கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனை ஆதரித்தமையே அவர் கட்சியைத் விட்டுத் தூக்கப்பட்டதற்குக் காரணம் என்கின்றன கட்சி வட்டாரங்கள்.

ஏகாம்பரம் கட்சியின் மூத்த உறுப்பினர், மிகுந்த விசுவாசி, கட்சியை அம்பாறையில் வளர்த் தெடுத்தவர் என்பதையெல்லாம் ஏற்றுக்கொள்ளும் கட்சியினர் கிழக்கைச் சேர்ந்த மூத்த உறுப்பினர் ஒருவர், இம்முறை அம்பாறையில் கட்சிக்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கிடைக்காமல் போனமைக்கு அவரது செயற்பாடும் காரணம் என்கிறார்.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பான எனது பக்க நியாயங்களை துரைராஜ சிங்கத்திற்கும் கட்சித் தலைவர் மாவை சோ.சேனாதிராசாவுக்கும் தெளிவுபடுத்தினேன். ஆனால், யாரும் அதனைச் செவிமடுப்பதாக இல்லை.


ஆனால், கல்முனை வாழ் தமிழ் மக்களின் இருப்பைக் காப்பாற்றத் தனக்கு வேறு வழியிருக்கவில்லை என்று தன்னை நியாயப் படுத்துகிறார் ஏகாம்பரம். கல்முனைத் தமிழ் மக்களின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கும் வகையிலான திட்டங்கள் மாற்று இனத்தவர்களால் முன்னெடுக்கப்படும் நிலையில் அதனை முறியடிக்க தமிழ் அரசுக் கட்சிக்கும் அப்பால் சிந்திக்கவேண்டியவனாக இருந்தேன், மாற்று இனத்தவர்களின் திட்டங்களை முறியடித்து எனது மக்களைக் காப்பதற்கு நான் மாற்றுக் கட்சியினரை நாடியது உண்மை தான், அதற்காக நான் கட்சி தாவிவிட்டேன் என்பது அர்த்தமல்ல. சில விடயங்களை யாரால் செய்ய முடியுமோ அவர்களை ஆதரிப்பது களச் சூழலின் தேவையும் அவசியமும் ஆகும், அதைத் தான் நான் செய்தேன் என்கிறார் ஏகாம்பரம்.

எமது பிராந்திய தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர்களான அந்தோணிப்பிள்ளை, கந்தையா நொத்தாரிஸ், அழகையா ஆசிரியர் ஆகியோரின் வழிகாட்டலில் கட்சிக்குள் வந்தவன் நான், இனியாவது எனக்கு நியாயம் கிடைக்க வேண்டும், கட்சித் தலை மைப்பீடம் என்னை நேரில் விசாரித்து எனது நியாயங்களைக் கேட்டு எனக்கு ஒரு முடிவைக் கூறவேண்டும் என்கிறார்.

கட்சித் தலைமைப் பீடத்தில் ஏற்கனவே பதவிப் போட்டிகளும் தள்ளுமுள்ளுக்களும் தீவிர மடைந்திருக்கும் நிலையில் இந்தத் தொண்டனின் குரல் அம்பலம் ஏறுமா? ■

"கல்முனைத் தமிழ் மக்களின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கும் வகையிலான திட்டங்கள் மாற்று இனத்தவர்களால் முன்னெடுக்கப்படும் நிலையில் அதனை முறியடிக்க தமிழ் அரசுக் கட்சிக்கும் அப்பால் சிந்திக்கவேண்டியவனாக இருந்தேன், மாற்று இனத்தவர்களின் திட்டங்களை முறியடித்து எனது மக்களைக் காப்பதற்கு நான் மாற்றுக் கட்சியினரை நாடியது உண்மை தான், அதற்காக நான் கட்சி தாவிவிட்டேன் என்பது அர்த்தமல்ல."

# ஐ, டானியல் பிளெக்:






**2016** ஆம் ஆண்டு வெளியான பிரித்தானிய நாட்டுத் திரைப்படம் ஐ, டானியல் பிளெக். நாடக வகைத் திரைப்படமான இதன் இயக்குநர் கென் லொச் என்பவர். இந்தப் படம் 2016ஆண்டில் நடந்த கேன்ஸ் திரைப்பட விழாவில் பாம் டி ஓர், என்கிற தங்கப் பனை விருதையும், 2016 லோகார்னோ சர்வதேச திரைப்பட விழாவில் பிரிக்ஸ் டு பொது விருதையும், 2017ஆம் ஆண்டுக்கான சிறந்த பிரிட்டிஷ் திரைப்படத்திற்கான பாஃப்டா விருதையும் வென்றது. சுருக்கமாகச் சொன்னால், பிரிட்டனைக் கிண்டலடிக்கின்ற அருமையான திரை அனுபவம் இந்தப் படம்.

## காலச் சூழலுக்குப் பொருந்தும் கதை

மக்களுக்காக... நாம்... என்று கூறி அமைக்கப்பட்ட அரசுகள் அதன் வழித்தடத்திலிருந்து மாறி வருகின்ற நிலையை அமெரிக்கா உட்பட்ட ஐரோப்பிய மற்றும் விருத்தியடைந்த நாடுகள் பலவற்றில் காணலாம். இந்தக் கொரோனாப் பெருந்தொற்றுச் சூழலில் இதை நன்கு அவதானிக்கலாம். மருத்துவ வசதிகள் அளிக்கப்படாமல் அல்லது மருத்துவ சேவைகளின் மட்டுப்பாடுகள் - நிபந்தனைகள் காரணமாக அமெரிக்கா உட்படப் பல நாட்டு மக்கள் சிகிச்சையின்றி அவதியுறுகின்றனர், இறக்கின்றனர்.

மக்களைக் காப்பாற்றுவது மற்றும் மக்களைப் பராமரிப்பதற்கு முக்கியமளிக்காத நிலைக்கு மாறிவிட்ட ஜனநாயகச் சூழலே இத்தகைய நாடுகளில் எல்லாம் விரவியுள்ளது. இந்த நிலையில் கவனமீர்த்த திரைப்படம் இது.

அரசுகள் வகுத்துள்ள நாட்டின் சட்டங்களும் அமைப்புகளும் மக்களுக்கு உதவுவதற்காகவே



அமைக்கப்பட்டவை. ஒவ்வொரு நாட்டுக்கும் அவை மாறுபடுகின்றன. ஒரு நாட்டின் சட்ட திட்டங்கள் அந்த நாட்டைச் சேர்ந்தவருக்கு உதவி செய்யும் விதமாகத்தான் இருக்கிறது. சட்ட திட்டங்கள் கடுமையாக இருப்பது நல்லது தான். ஆனால், சில இடங்களில் நெகிழ்வுத் தன்மையும் நடைமுறைச் சிக்கல்களையும் யோசிக்காமல் கண்மூடித்தனமாக அமைப்பையும் சட்டத்தையும் பின்பற்ற ஆரம்பித்தால் என்ன நிகழும் என்பதே இதன் கதை.




## கதை

பிரிட்டனில் வாழும் பிளெக்கிற்கு 80 வயதாகிறது. திடீரென அவருக்கு நெஞ்சு வலி ஏற்பட, அவரால் இனி வேலைக்குச் செல்ல முடியாது எனக் கூறுகிறது அரசும் அதன் சட்டங்களும். மருத்துவர் மூலம் அது உறுதிப்படுத்தப்பட்டுச் சான்றளிக்கப்படுகிறது. ஆனால், தன் உடல்நலம் நன்றாகத்தான் இருக்கிறது, தன்னால் வேலைக்கு செல்ல முடியும் எனச் சொல்கிறார் அவர். அதற்கெல்லம் அனுமதிக்காத பிரிட்டனின் சட்டங்கள், அவரை ஓய்வில் இருக்கச் சொல்கின்றன.

ஓய்வில் இருக்கும்போது ஓய்வூதியம் பெறுவதற்கென்று தனியே விண்ணப்பம் அளிக்க வேண்டும். இப்படி ஏகப்பட்ட சட்ட திட்டங்களால் அவதியுறுகிறார் பிளெக். இந்தச் சூழ்நிலையில் அவரைப் போன்றே அவதியுறும் கேட்டியைப் பார்க்கிறார். அவருக்கு உதவுகிறார். அந்த நாட்டின் சட்டங்களும் அமைப்புகளும் அவர்களை என்னவெல்லாம் செய்கின்றன என்பதே மீதிக் கதை.

## சட்ட திட்டங்களின் பலவீனம்

இறுக்கமாக வகுக்கப்பட்ட சட்ட திட்டங்கள் மக்களைக் குற்றம் செய்ய விடாமல் ஒழுங்குபடுத்தும் என நினைத்தால் அது தவறு என்பதை நமக்குச் சொல்கிறது பிளெக் பாத்திரம். மக்களுக்கு உதவக் கூடிய வகையில்தான் சட்டங்கள் இருக்க வேண்டும். மக்களுக்காகத்தான் சட்டங்களும் அமைப்புகளும்; சட்டங்களுக்காக மக்கள் இல்லை என்று பிளெக்கிற்கும் கேட்டிற்கும் நடக்கும் சம்பவங்கள் சொல்கின்றன.

மருத்துவரிடம் பிளெக் சொல்லும் பதில்கள் சிரிப்பை ஏற்படுத்தினாலும், பிரிட்டனில் சமூக அமைப்பு அவ்வளவு இறுக்கமாக இருக்கிறது என்பது அதில் கிண்டலாக வெளிவருகிறது. அங்கே இருக்கும் அரச அமைப்புகள் மட்டுமல்ல தனியார் கடைகளும் கூடச் சட்ட திட்டங்களைக் கடுமையாகப் பின்பற்றுகின்றன. வேறு வழி இல்லாமல் செய்யக் கூடாத தொழிலைச் செய்கிறாள் கேட்டி. இப்படிப் படம் முழுக்க பிரிட்டனின் அரச அமைப்பின் மீது விமர்சனங்களை வைக்கிறது படம்.

அதனை மக்களுக்குப் புரியாத வகையில் சொல்லாமல் மிக வெளிப்படையாக தைரியமாக அந்த கடுமையான அமைப்பினால் பாதிக்கப்பட்ட மனிதர்களை வைத்து கதையைச் சொல்லியிருக்கிறார் இயக்குநர் கென் லோச்.

## நகைச்சுவையூட்டும் நடைமுறைச் சிக்கல்

சட்டங்கள் மூலம் எந்த உதவியையும் பெற முடியாத கேட்டிற்கு பிளெக் உதவி செய்கிறார். அவளது குழந்தைகளுக்குப் பரிசுகளைக் கொடுக்கிறார். ஏறக்குறையத் தாத்தாவைப் போல இருக்கிறார். பிளெக்கினைச் சுற்றி இருக்கும் அனைவருக்கும் அவரால் முடிந்த அளவுக்கு உதவி செய்கிறார். ஆனால், அவரால் சட்ட திட்டங்களோடு போராட முடியவில்லை.

80 வயதான அவரைக் கணினியில் இணையத்தைப் பயன்படுத்தி விண்ணப்பங்களை நிரப்பச் சொல்வது அதிகபட்சமான நகைச்சுவையாக இருந்தாலும், நடைமுறைச் சிக்கல் என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். நெஞ்சு வலியின் காரணமாக வேலைக்குச் செல்ல முடியாமல் அவருக்குத் தேவையான உதவித்தொகையைப் பெறுவதற்கு மேல்முறையீடுகள் செய்தும் பயனில்லாமல் சோர்ந்து போகிறார்.

உணவு வங்கியில் கேட்டியினால் பசியை அடக்க முடியாமல் அங்கேயே சாப்பிடுவதும், உடல்நலம் இல்லாமல் பிளேக் வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடக்கும்போது கேட்டியின் மகள் பிளேக்கிடம் பேசும் வசனங்களும் இங்கிலாந்தின் அமைப்பினால் பாதிக்கப்படும் மனிதர்களின் உச்சபட்ச வலியைப் பார்வையாளருக்குக் கடத்துகிறது. அதேநேரத்தில் இந்தச் சோகக் கதையை கேட்கின்ற பார்வையாளரை அழ வைக்காமல் அந்த நாட்டின் சட்டதிட்டங்கள் மீதான கிண்டலின் மூலமே காட்சிகள் நகர்கின்றன.

எல்லா முயற்சிகளையும் செய்து சோர்ந்து போன பிளெக் கடைசியாக தனது எதிர்ப்புக் குரலை சுவரில் எழுதிக் காட்டுகிறார். அவ்வளவு கட்டுப்பாடான நாட்டின் இதற்கான எதிர்விளைவுகள் எப்படி இருக்கும்? அவை எல்லாவற்றையும் 80 வயதிலும் அவர் எதிர்கொள்கிறார்.

உலகில் வளர்ந்த நாடாக இருக்கும் பிரிட்டனின் சட்ட திட்டங்கள் சாதாரண மக்களை எப்படியெல்லாம் அவதிக்குள்ளாக்குகின்றன என்பதை பிளெக்கின் அந்தக் கடிதத்தில் இருக்கும் வார்த்தைகள் சொல்கின்றன.

"நான் பிச்சைக்காரன் இல்லை, திருடன் இல்லை, பணக்காரனும் இல்லை, என்னுடைய சுமாரியாதையை எங்கேயும் இழக்க விரும்பவில்லை. அதேநேரத்தில் நான் நாயும் இல்லை. நான் இந்த நாட்டின் குடிமகன், எனக்கான உரிமைகள் என்னைக் காப்பாற்றும்."

# மருந்து உற்பத்தியில் தன்னிறைவு அடைய

■ வாகடவாணன்



# தளராத நடைபோடும் இலங்கை!

"இலங்கையானது மருந்துப்பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்காக வருடமொன்றிற்கு 130 பில்லியன் ரூபாவிற்கும் மேலான தொகையை செலவு செய்கிறது. குறித்த இறக்குமதியின் மூலமே நாட்டின் மருந்துத் தேவையில் 85 வீதம் நிறைவு செய்யப்படுகின்றது." இலங்கை நனோ தொழிநுட்ப நிறுவகத்தின் வளாகத்தில் அமைக்கப்பட்ட மருந்து உற்பத்தி மற்றும் ஆய்வு தொழிற்சாலை திறப்பு விழாவில் மேற்கண்ட கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஹேமாஸ் கூட்டு வணிகத்தின் கீழ் வரும் மொறிசன் நிறுவனத்தின் இரண்டாவது தொழிற்சாலையான மேற்படி புதிய கட்டமைப்பு, 18.5 மில்லியன் அமெரிக்கன் டொலர் முதலீட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. வாய் மூலமாக உள்ளெடுக்கப்படும் திண்ம நிலை மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான இந்தத் தொழிற்சாலை, தற்போதைய நிலையில் இலங்கையில் உள்ள மிகப்பெரும் மருந்து உற்பத்தி நிலையமாகக் கொள்ளப்படுகிறது.

இலங்கையின் மொத்த குளிகைத் தேவையில் 20 வீதத்தினை வழங்கக்கூடிய வசதிகளைக் கொண்டுள்ள மேற்படி தொழிற்கூடம், கடந்த வெள்ளிக்கிழமை தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவினால் திறந்து வைக்கப்பட்டது. குறித்த வைபவத்தில் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி, வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன, மருந்துப்பொருள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தலுக்கான துணை அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன, திறன் அபிவிருத்தி, ஆய்வு மற்றும் கண்டுபிடிப்பு விடயதானத்திற்கு பொறுப்பான துணை அமைச்சர் சீதா அரம்பேபொல மற்றும் ஹேமாஸ் கூட்டு வணிக குழுமத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரியான கஸ்தூரி செல்லராஜா வில்சன் உட்பட இலங்கை மருந்தாக்கல்துறையுடன் தொடர்புடைய உயர்மட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

முன்னதாக, நீரிழிவு நோயாளிகளால் பயன்படுத்தப்படும் இன்சுலின் திரவ மருந்தினை இலங்கையில் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலைக்கான அடிக்கல் நாட்டும் வைபவம், புரட்டாதி (செப்டெம்பர்) 18ஆம் நாள் காலி மாவட்டத்தில் அமைந்துள்ள கொக்கல ஏற்றுமதி வலயத்தில் இடம்பெற்றிருந்தது. அரச மருந்து உற்பத்தி நிறுவனத்தினதும் தனியார் அமைப்பு ஒன்றினதும் கூட்டு முயற்சியான இந்த முதலீடு, 200 தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதுடன் ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியத்தினையும் கொண்டிருக்கிறது.

இலவச அரச சுகாதாரத்துறையை கொண்டமைந்த நாடாக விளங்கும் இலங்கை, தனது குடிமக்களின் சுகாதாரத் தேவையை நிறைவு செய்வதற்காக வருடாந்தம் பில்லியன் கணக்கில் செலவு செய்கிறது. நாளாந்தம் எகிறி வரும் சுகாதார தேவைகள் காரணமாகவும் வாழ்க்கை முறை மாற்றம் காரணமாகவும் ஏற்படும் கேள்வியை ஈடுசெய்ய அரச துறையுடன் தனியார் துறையும் இணைந்து கொண்டாலும், மருந்துப்பொருட்கள் மற்றும் மருத்துவ சாதனங்களுக்காக கடல்சார் வான்சார் துறைமுகங்களையே பெரிதும் நம்பியிருக்க வேண்டியிருக்கிறது.

### தன்னிறைவிற்கான தொடர் வேலைத்திட்டம்

மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்களை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கான முனைப்பு, இந்த நாட்டில் காலம் காலமாக ஆர்வம் காட்டப்பட்டே வருகின்றது. காலத்திற்கு காலம் அதில் முன்னேற்றம் ஏற்பட்டுக்கொண்டே வருகிறது. 2015ஆம் ஆண்டில் அப்போது பதவிக்கு வந்த அரசு, தனது முதல் 100 நாள் வேலைத் திட்டத்தில் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தினை கொண்டுவந்து நடைமுறைப் படுத்தியிருந்தது.

அத்துடன் அரச ஆதரவுடன் கூடிய கூட்டு முயற்சியினாலான முதலீட்டுத் திட்டங்களுக்கும் வரவேற்பினை வழங்கியிருந்தது. அதனைத் தொடர்ந்து அநாவசியமான வகையில் மருந்து இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் வகையிலான திட்டங்களும் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் நடைமுறைக்கிடப்பட்டன.

### தனியான துணை அமைச்சு புதிதாகத் தொடக்கம்

கடந்த ஆவணி (ஓகஸ்ட்) மாதம் ஏற்பட்ட அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் தான், மருந்து சார் கைத்தொழில் துறைக்கென தனியான துணை அமைச்சு நிறுவப்பட்டது. இந்த மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் துணை அமைச்சராக ரஜரட்ட பல்கலைக்கழகத்தினை சேர்ந்த மருந்தியல் துறை பேராசிரியர் சன்ன ஜயசுமன நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து, இதுவரை காலமும் சுகாதார அமைச்சின் கீழ் இயங்கி வந்த அரச மருந்துக் கூட்டுத்தாபனம், அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை என்பன புதிய அமைச்சின் ஆளுகையின் கீழ் கொண்டு வரப்பட்டன.

இந்த புதிய மாற்றம், மருந்தாக்கவியல் மற்றும் மருந்தியல் துறை சார்ந்தவர்களிடமிருந்து வரவேற்பையும் பெற்றிருந்தது.

### 50 வீதத்திற்கான சபதம்

உள்நாட்டு உற்பத்தியில் 50 வீதத்தினையேனும் அடுத்து வரும் 3 வருடங்களில் உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக தனது கடமையேற்பின் போது தெரிவித்திருந்த அமைச்சர், அவ்வாறான உற்பத்திகள் குறைந்த விலையுடையவையாகவும் உயர் தரமுடையவையாகவும் இருப்பது உறுதிப்படுத்தப்படும் எனவும் தெரிவித்திருந்தார். விஞ்ஞான முறைக்கு அமைவாக நியமிக்கப்பட்ட அமைச்சரவையில், கல்வித்தகைமைகள் மற்றும் பொருத்தப்பாடு என்பவற்றை ஆராய்ந்த பின்னரே அமைச்சுப்பதவிகள் வழங்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

### எடுத்து வைக்கப்படும் புதிய அடிகள்

அண்மையில், ஏரிக்கரை நிறுவனத்திலிருந்து வெளியாகும் ஆங்கிலத் தினசரிக்கு செவ்வியளித்திருந்த துணை அமைச்சர் ஜயசுமன, மருந்து உற்பத்தி தொடர்பாக முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ள பல்முனை நகர்வுகள் தொடர்பில் தெளிவுபடுத்தியிருந்தார். அம்பாந்தோட்டையை மையமாகக் கொண்டு ஏற்றுமதி நோக்கான மருந்துற்பத்தி முதலீட்டு வலயம் ஒன்றை நிறுவுவதற்கும் அனுராதபுரம் ஒயாமடுவ பிரதேசத்தை மையப்படுத்திய வகையில் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கான மருந்துற்பத்தி வலயம் ஒன்றினை நிறுவவும் ஆலோசிக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

அரசு தனியார் கூட்டு முயற்சியுடனான முதலீட்டுத் திட்டங்கள் ஊடாக மேலும் பல மருந்துத் தொழிற்சாலைகள் அமைக்கப்படுவதற்கு ஆவன செய்யப்போவதாகக் குறிப்பிட்ட பேராசிரியர், இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகளை பரிந்துரை செய்வது மருத்துவர்களினது கடமை எனவும் தனது செவ்வியில் தெரிவித்திருந்தார்.

### வளரும் சந்தை


இலங்கையின் மருந்துப் பொருட்களுக்கான சந்தை தொடர் வளர்ச்சியை காண்பித்து வரும் நிலையில், அதிகரித்து வரும் வயதானோரின் சதவீதம் மற்றும் தொற்றா நோய்களின் உயர் பரம்பல் என்பன வர்த்தக நோக்கில் ஆரோக்கியமான தன்மையையே காட்டி நிற்கிறது. 2017ஆம் ஆண்டளவில் 642 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த இலங்கை மருந்துச் சந்தை செலவினம், 2022ஆம் ஆண்டளவில் 787 மில்லியன் அமெரிக்கன் டொலர்களை எட்டும் என்று சந்தைப்படுத்தல் சார்ந்த கணிப்பு ஒன்று கூறுகின்றது.

பணவீக்கத்தினால் பெரிதும் பாதிக்கப்படாத மருந்து வழங்கலை உறுதி செய்யும் வகையிலும், விரயமாகும் அந்நிய செலாவணியை கட்டுப்படுத்தும் வகையிலும், மற்றும் மூளை வெளியேற்றத்தினை குறைக்கும் வகையிலும் எடுத்து வைக்கப்படும் அடிகள், மருந்து உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு அடைவதை விரைவுபடுத்தட்டும். அதற்கான பாதப்பதிவுகள், ஆமை நடையாக அல்லாமல் முயல் பாய்ச்சலாக அமைவது ஆரோக்கியமானது மட்டுமல்ல அவசியமானதும் ஆகும்.

## மூளைக்கு வேலை

முடிகிறதா பாருங்கள்

1




படத்தில் காட்டப்பட்டவாறு பசு, யானையின் எண்ணிக்கை யாது?

■ நாச்சியார்

# விரல் ரேகையைப் போல தனித்துவமானது தாய்ப்பால்!

குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுப்பதற்குத் தாய்மார்கள் பலர் பின்னடிக்கிறார்கள். இயல்பாகவே தாய்ப்பால் கொடுக்க முடியாதிருப்பவர்கள் போக, தாய்ப்பால் சுரந்தும் அதைக் கொடுக்கத் தவறுகின்ற தாய்மாரின் செயல் ஆரோக்கியமற்றது.

தமது உடல் வலுக் குன்றி, உடல் பொலிவிழந்து, அழகு குன்றிவிடும் என்று எண்ணுவதால் தாய்ப்பால் கொடுப்பதைத் தவிர்த்து வருகிறார்கள் பல தாய்மார். அவர்களின் செயல் கண்டிக்கத் தக்கது. அதனால்தான் தாதியர்கள் மூலமும் குடும்ப நல உத்தியோகத்தர்கள் மூலமும் பிரதேசங்கள் - கிராமங்கள் தோறும் தாய்ப்பல் ஊட்டுவதை ஊக்குவிக்கின்ற விழிப்புணர்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தாய்ப்பால் கொடுக்க முடியாத நிலையிலுள்ளவர்கள் மாத்திரம் அவர்தம் குழந்தைகளுக்குப் பதிலீட்டுப் பால் வழங்க வேண்டியிருக்கிறது.

## தாய்ப்பாலே உகந்தது

குழந்தைகளின் ஊட்டச்சத்துக்கு சிறந்த ஆதாரமாகவும், பிறந்த குழந்தைகளுக்குச் சக்தி வழங்குவதாகவும், தொற்று நோய்களில் இருந்து பாதுகாப்பதாகவும், உடற்பருமனால் ஏற்படும் ஆபத்தைக் குறைக்க உதவுவதாகவும், வாழ்வின் பிற்காலத்தில் ஐ.க்யூ. திறனை அதிகரிக்கச் செய்வதாகவும் தாய்ப்பால் இருக்கிறது என்கிறது உலக சுகாதார நிறுவனம்.

தாய்ப்பால் கொடுக்க முடியாத அல்லது கொடுக்க விரும்பாத பிள்ளைகளுக்குப் பெட்டிப்பால் மாற்று ஆகாரமாக வழங்கப்படுகிறது. பிறந்து சில தினங்களே ஆகியிருக்கும் குழந்தைக்கான இந்தப் பால் பெரும்பாலும் பசுவின் பாலில் இருந்தே தயாரிக்கப்படுகின்றது. அந்தக் குழந்தைகளின் ஆரோக்கியத்துக்கு ஏற்புடையதாக இருக்கும் வகையிலும், குழந்தையின் வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்கும் வகையிலும் அது தயாரிக்கப்படுகிறது. ஆனால், தாயின் பாலில் இருக்கும் அனைத்துப் பயன்களும் அதில் கிடைக்காது.

அமெரிக்காவைச் சேர்ந்த டர்ட்டில் ட்ரீ என்கிற ஆய்வக நிறுவனம் ஒன்று தாய்ப்பாலைத் தானமாகப் பெற்று அதில் உள்ள ஸ்டெம் செல்களைத் தான் தயாரிக்கின்ற பெட்டிப் பாலுக்குப் பயன்படுத்துகிறது. அந்தச் செல்களை பயோ ரியாக்டரில் வைத்து, பால் சுரக்கும் செல்களாக வளரச் செய்யப்படுகின்றன. பால் சுரக்கும் செல்கள் பால் சுரக்கின்றன. அதை வடிகட்டி இறுதிப் பால் தயாரிக்கப்படுகிறது. எந்த ஒரு பாலூட்டியினதும் ஸ்டெம் செல் கிடைத்தாலும், அதைக் கொண்டு இதுபோல பால் தயாரிக்க முடியும்.

## தாய்ப்பால் தயாரிப்பு முடியாத காரியம்

மனித இனத்தின் பாலில் புரதங்கள், கொழுப்பு அமிலங்கள், ஓமோன்கள், பக்ரீரியா மற்றும் சீனிச் சத்துகள் என ஆயிரக்கணக்கான சேர்மானங்கள் உள்ளதாக அறிஞர்கள் கூறுகின்றனர். தாய்ப்பாலில் ஏராளமான பொருள்கள் சேர்ந்திருப்பதால்தான் தாய்ப்பாலைப் போன்ற பாலை உருவாக்குவது சிரமமாக இருக்கிறது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

தாயின் குருதி, செரிமான மண்டலம், நோய் எதிர்ப்பு மண்டலம், மார்பக நோய் எதிர்ப்பு மண்டலம் போன்ற பல இடங்களில் இருந்து உருவாகும் சேர்மானங்களில் இருந்து மனித இனத்தின் பால் உருவாகிறது. கொழுப்பு அமிலங்கள் சிதைக்கப்பட்டு தாயின் பாலில் சேர்கின்றன என்று பிரிட்டனின் இம்பீரியல் கல்லூரியில் தாய்ப்பால் ஆராய்ச்சியாளராக இருக்கின்ற மருத்துவர் நட்டாலி ஷென்கெரின் கூற்று. மனித இனத்தில் பாலில் உள்ள சில சேர்மானங்களை மட்டுமே, ஆய்வகத்தில் உருவாக்கும் பாலில் காண முடியும். குறிப்பாக நோய் எதிர்ப்பாற்றல் என்று வரும்போது, பாலில் உள்ள சேர்மானங்களைப் பொருத்து ஒவ்வொருவருக்கும் அது மாறுபடுகிறது.

## விரல் ரேகையைப்போல தனித்துவம்

தாய்ப்பால் தான் குழந்தைகளுக்கு மிகச் சிறந்தது, யாராலும் அதற்கு மாற்றாக இன்னொன்றைத் தயாரிக்க முடியாது. எந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினாலும் அது சாத்தியமாகும் என ஒரு போதும் நான் நம்பவில்லை. ஏனெனில் அது தனிப்பட்ட கலவையாக உள்ளது.

தாய்மார்கள் வாழும் சூழலுக்கு ஏற்ப, அவர்களின் ஊட்டச்சத்திற்கு ஏற்ப தனித்துவமானது என்கிறார் டர்ட்டில் ட்ரீ ஆய்வக இணை நிறுவனர் மேக்ஸ் ரியே. அத்தோடு ஒவ்வொரு குழந்தைக்கும் ஏற்ற நிலையில் தனித்துவமாகத் தாய்ப்பால் உற்பத்தி ஆகிறது



என்று கடந்த சில தசாப்த காலங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளில் இருந்து தெரியவந்துள்ளது.

தாயின் பாலில் நோய் எதிர்ப்புத் தன்மை மற்றும் மரபணு நிலையில் மாறுபாடுகள் உள்ளன. பாலில் சேரும் சீனிச் சத்தின் அளவுகூட ஒவ்வொரு தாய்க்கும், குழந்தைக்கும் வெவ்வேறு மாதிரியாக இருக்கின்றது. தாய்ப் பால் என்பது விரல் ரேகையைப் போன்ற தனித்துவமானது. அந்தக் குழந்தை மற்றும் குழந்தைக்கான உணவுக்கான தனித்துவ அடையாளம் கொண்டதாக இருக்கிறது என்று மருத்துவர் ஷென்கெரின் சொல்கிறார்.

தாய்ப்பால் தயாரிப்பு என்பது இருவழிச் செயல்முறையாக இருக்கிறது. தாம் வாழும் சுற்றுப்புறச் சூழலில் தாய் என்ன உணர்வுகளைப் பெறுகிறார் என்பதைப் பொறுத்து அது அமைகிறது. அந்த உணர்வுகளுக்கு ஏற்ற சூழ்நிலைகள் அமைவதும் உண்டு. ஒரு தாய் பக்ரீரியா மற்றும் வைரஸ் தாக்கும் சூழலை எதிர்கொண்டால், அவரது குருதி நோய் எதிர்ப்பு மண்டலம் நோய் எதிர்ப்பு அணுக்களை உருவாக்கும். அவை மார்பகத்தை நோக்கி செலுத்தப்பட்டு, தாய்ப்பாலுடன் சேர்க்கப்படும். அந்தக் குறிப்பிட்ட கிருமிக்கு எதிராக குழந்தையைப் பாதுகாப்பதாக அது இருக்கும் என்பதும் ஷென்கெரின் கூற்றுத்தான்.

ஆகவே தாய்மார்கள் குறைந்தபட்சம் முதல் 6 மாதங்களுக்காவது தமது குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். இதில் உலக அளவில் 40 சதவீத குழந்தைகளுக்கு மட்டுமே தாய்ப்பால் வழங்கப்படுகிறதாம். எவ்வளவு கவலையான தகவல் இது...? ■


கிருபா லேணர்ஸ்

கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை

கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்

தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960

☆ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
☆ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
☆ இரவு நேர வாகனப் பயிற்சி.
☆ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
☆ தவணை முறைக் கட்டணங்கள்.
☆ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
☆ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி

வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

# கண்டும் காணாமலும் விடலாமோ?

கதிரேசன் காத்தவராயன்

"ஆக்கள் கூட்டமாக் கூடப்படாதெண்டல்லே வாய்கிழியக் கத்திறாங்கள்... நீங்கள் எங்கை வெளிக்கிடுறியள்?"

என்ரை மனிசி பிள்ளையளின்ர வழியனுப்புதலோடை அதைப்பத்தியே யோசிச்சபடி போனன். உண்ணாணை அவங்கள் அந்த அறிவிப்பை என்ரை வீட்டுக்காரருக்குத்தான் இரகசியமாய்க் கூப்பிட்டுக் காதுக்கை சொன்னாங்களோ எண்டுதான் நினைச்சன் பாருங்கோ. அப்பிடிச் சனம். றோட்டிலை... கடையளிலை... பெற்றோல் செற்றிலை... பாரிலை.... எங்கை பாத்தாலும் சனம்தான்.

வழமைமாதிரி மூக்கையும் வாயையும் மூடினபடி... நாடியை மூடினபடி... கழுத்திலை கட்டினபடி தொங்கவிட்டபடி எண்டு சனம் தங்கடைபாடு. கூட்டத்தைப் பாக்கிறவையும் எல்லா இடங்களிலையும் நிண்டவை. அவையிலையும்கனபேர் மூக்கு வாய் மூடுறதைப்பத்தி யோசிச்சமாதிரித் தெரியேல்லை.

"கதிரேசண்ணை...!"

எண்ட குரலைக் கேட்டவுடனை நிண்டு பாத்தா எங்கடை சுப்பண்ணை. அந்தாள் ஒரு அப்பாவி மனிசன். கதைக்க ஒராள் அம்பிட்ட புழுகத்தோடை றோட்டைக் கடந்து அந்தாள் நிண்டநிழலுக்குப் போனன்.

"கதிரேசண்ணை... சப்பாட்டுச்சாமான், பெற்றோல் எல்லாம் சரிதானண்ணை சனம் புடவைக் கடையளிலையும் நிக்குது... ஏனண்ணை?" எண்டார் சுப்பண்ணை. கேள்வி ஞாயந்தான். அதுக்குப் பதில்...?

"ம்.ம்ம் அது சுப்பண்ணை சித்திரை வருசம் ஊரடங்கிலை மாட்டினதாலை புதுத் துணிமணிக்கு வழியில்லாமலுக்கல்லே போட்டுது... சனம் நல்ல முன்யோசினையானதல்லே... அதுதான் தீவாளிக்கும் ஏதுமெண்டால் கொண்டாடாமலுக்கு இருக்கிறதே?" எண்டன் நான்.

அந்தாளும் நம்பிவிட்டுது.

அப்பிடி கதைச்சபடி நிக்க சுந்தரத்தார் அதிலை வந்தார்.

"அண்ணை ஒரு பஸ்சிலை எத்தினை பேர் ஏறலாமண்ணை?" எண்ட கேள்விதான் அவற்றை முதல்க்கதை. இண்டைக்கென்னன கேள்வியளோடைதான் பொழுது போகப்



போகுது போலை எண்டு நினைச்சபடி.

"ஏன்? பஸ்செடுத்து ஓடப்போறியோ?" எண்டு மடக்கினன்.

"அதில்லைக் கதிரேசண்ணை! அந்த புங்குடுதீவு கொரோனாப் பிள்ளை போன அதே பஸ்சிலை அவளோடை போனதெண்டு எண்பது பேர்வரையிலை நெடுந்தீவிலை தனிமைப்படுத்தியிருக்காம். அதுதானண்ணை யாழ்ப்பாணத்திலையிருந்து குறிகாட்டுவானுக்கு பஸ்ஸிலை அவ்வளவு ஆக்கள் எப்பிடியண்ணை பஸ்ஸிலை? அதுக்குத்தான் கேட்டனான்" எண்டு விளக்கமாச் சொன்னார் சுந்தரத்தார்.

"இஞ்சார் சுந்தரம்... ஆறஅமர இருந்து எங்கடை பஸ்காறற்ரை விளையாட்டுகளைப் பாக்கிறேல்லையோ?

ஆக்களையே ஏத்திறவங்கள்? கிழங்கைச் சாக்கிலை அடையிற மாதிரியல்லே அடையிறவங்கள்...

சீற்ரிபியும்தான் பிறைவேற்றும்தான்... அடையிற அடைச்சல்... ஆக்களை இழுத்து அடையிறதிலை தொடக்கம் றோட்டுகளிலை கலைபடுகிறது வரைக்கும்.... பஸ்சுகளை நினைச்சாலே தலையைச் சுத்துது."

"அது சரியண்ணை! சீற்றுகளுக்கு அளவாத்தான் ஆக்களை ஏத்தவேணும் எண்டு சட்டமில்லே இருக்கு? அப்ப அவையை ஏன் பிடிக்கேல்லை?" எண்டார் சுப்பண்ணை.

"சுப்பண்ணை அது பெரிய இடத்துப் பிரச்சனை. வாயைக்குடுத்து வம்பிலை மாட்டாமலுக்கு வீட்டை ஒழுங்காப் போய்ச் சேருற வழியைப் பார்" எண்டபடி சுந்தரத்தார் போக வெளிக்கிட நானும் கவனமா மற்றப் பக்கம் போறதுக்கெண்டு றோட்டைப் பாக்கத் தொடங்கினன்.

சுப்பண்ணைக்கு மட்டுமே உந்தப் பிரச்சினை விளங்கயில்லை எண்டு நினைக்கிறியள்? உங்கை கனபேருக்கு விளங்கேல்லை... ஆனால் விளங்கேல்லை எண்டு கேக்கேல்லை. அவ்வளவுதான் கண்டியளே எங்கடை அறிவு. அப்ப வரட்டே?


KUDIL PRODUCT
ECO-FRIENDLY

கமுகு மடல் தட்டுக்கள் விற்பனைக்கு

12" - Rs.360 - 12 தட்டுக்கள்
10" - Rs.300 - 12 தட்டுக்கள்
08" - Rs.240 - 12 தட்டுக்கள்
06" - Rs.192 - 12 தட்டுக்கள்

மேலும் தொடர்புகளுக்கு
No. 74/1, A35, Visvamadu.
kudilproduct@gmail.com
+94 71 7777 559





# லீசிங்கில் பல நூதனக் கொள்ளைகள்!

■ விதுரன்

கடந்த ஆண்டு நான் மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்குவதற்காக நகரத்திலுள்ள மோட்டார் சைக்கிள் காட்சியறை ஒன்றுக்குச் சென்றேன். அந்தக் காட்சியறையில் இருந்தவர்கள். நான் கேட்ட ரக மோட்டார் சைக்கிளை எனக்குக் காட்டினார்கள் அதன் அனுகூலங்களை விளக்கினார்கள். நான் தெரிவு செய்த மோட்டார் சைக்கிளைக் காட்டி அதைத் தாருங்கள் என்றதும் அங்கு பொறுப்பாக விருந்த பெண் ஊழியர் ஒருவர் "ரெடிக் காசா அல்லது லீசிங்கா" என்று கேட்டார்.

லீசிங் என்று எதைக் கூறுகிறீர்கள் என்ற கேட்டபோது, "3 லட்சம் பெறுமதியுடைய மோட்டர் சைக்கிளுக்கு ஒரு லட்சத்தைக் கட்டிவிட்டு மிகுதிப் பணத்தைத் இரண்டு வருட காலப்பகுதியில் கட்டி முடிக்கலாம்" என்றார் அது பற்றிச் சாதாரணமாகக் கணக்குப் பார்த்தபோது மோட்டார் சைக்கிளின் பெறுமதியைவிட ஏறத்தாழ ஒரு லட்ச ரூபாவை மேலதிகமாகக் கட்ட வேண்டியிருப்பது தெரிந்தது. நான் ரெடிக் காசு என்று கூறி முழுப் பணத்தையும் கொடுத்து மோட்டார் சைக்கிளை வாங்கிச் சென்றேன்.

நான் மோட்டார் சைக்கிளை வாங்கி ஒரு வருடமாகியிருந்தது. ஒருவர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நீங்கள் இன்னார் தானே?, சென்ற ஆண்டு ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கியிருக்கிறீர்கள். தற்போது உங்களுக்குப் பணம் தேவைப்பட்டால் உங்கள் மோட்டார் சைக்கிள் பதிவுப் புத்தகத்தை எங்கள் லீசிங் நிறுவனத்தில் ஈடாக வைத்து 2 லட்ச ரூபாய் வரை கடன் எடுக்கலாமே என்றார்.

லீசிங் கடன் பெற்று மோட்டார் சைக்கிள் வாங்கக்கூடாது என்பதனாலேயே முழுப் பணத்தையும் செலுத்தி மோட்டார் சைக்கிளை வாங்கினேன். பிறகெதற்கு என்னைக் கடனாளி ஆக்குகிறீர்? இப்படித்தான சனத்தை ஏமாற்றுகிறீர்கள்? என்று நான் கேட்கத் தொலைபேசி உரையர்டலைத் துண்டித்து விட்டார் அந்த நபர்.

நான் மீண்டும் அவருக்குத் தொடர்பை ஏற்படுத்தி உமக்கு என்ன பெயர்? எந்த லீசிங் நிறுவனம்? உங்கள் தலைமைக் காரியாலயத்திலுள்ள சிங்கள அதிகாரியின் (இங்குள்ள கடன் வழங்கும் நிறுவனங்கள் பெரும்பாலும் சிங்களத் தலைமைகளைக் கொண்டனவே) தொலைபேசி இலக்கத்தை தருமாறு கேட்டபோது, "றோங் நம்பர்" என்று கூறிவிட்டு அழைப்பைத் துண்டித்தார் அந்த நபர்.

நான் மீண்டும் அவருக்குத் தொடர்பை ஏற்படுத்தி உமது தொலைபேசி இலக்கத்தை இலங்கை அதிபர் செயலகத்துக்கு அனுப்பப் போகிறேன். நீர் லீசிங் என்ற பெயரில் மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்க முயல்கிறீர் என்று அறிவிக்கப்போகிறேன் என்று கூறியதும் அந்த நபர் ஆடிப்போய்விட்டார். "அங்கிள் தயவு செய்து அப்படிச் செய்துவிடாதீர்கள்" என்று மன்றாடினார். "மன்னித்துக் கொள் ளுங்கோ" என்றார்.

எனது விடயத்தில் தற்செயலாக இடம்பெற்றது இந்த உரையாடல். இதுதொடர்பில் வேறு பலரிடம் தேடிப்பார்த்தேன். பலர் வெளிநாட்டில் உள்ளவர்களின் பண உதவியுடன் அல்லது உள்நாட்டிலுள்ள தமது வசதியை வைத்து முழுப் பணத்தையும் செலுத்தி மோட்டார் சைக்கிளை வாங்குகிறார்கள். அதன் பின்னர் அவர்களின் பயணங்கள், மோட்டார் சைக்கிள் பராமரிப்பு, எரிபொருள் என மோட்டார் சைக்கிள் சார்ந்த பல செலவுகளுக்கு மேலதிக பணம் தேவைப்படும்போது - அதற்குத் தட்டுப்பாட்டைச் சந்திக்கும்போது, இவ் வகை லீசிங் நிறுவன முகவர்கள் அவர்கள் வாங்கிய மோட்டார் சைக்கிளை வைத்தே பணம் பெறும் வழி வகைகளைக் காட்டிக் கொடுக்கின்றனர்.



இதனால் மோட்டார் சைக்கிள் பதிவுப் புத்தகத்தை அடகு வைத்து லட்ச ரூபா வரையில் பணம் பெற்றுச் செலவழிக்கின்றனர்.

நான் மீண்டும் அவருக்குத் தொடர்பை ஏற்படுத்தி உமது தொலைபேசி இலக்கத்தை இலங்கை அதிபர் செயலகத்துக்கு அனுப்பப் போகிறேன். நீர் லீசிங் என்ற பெயரில் மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்க முயல்கிறீர் என்று அறிவிக்கப்போகிறேன் என்று கூறியதும் அந்த நபர் ஆடிப்போய்விட்டார். "அங்கிள் தயவு செய்து அப்படிச் செய்துவிடாதீர்கள்" என்று மன்றாடினார். "மன்னித்துக் கொள் ளுங்கோ" என்றார்.

இதில் பலரின் வீட்டாருக்கு மோட்டார் பதிவுப் புத்தகத்தை அடகு வைத்துப் பணம் பெற முடியும் என்ற நூதனமான களவு பற்றித் தெரிந்திருப்பதில்லை.

இதேபோல ஓய்வூதியம் பெறுபவர்களுக்குப் பல லீசிங் நிறுவனங்களும் தனியார் வங்கிகளும் தொலைபேசி அழைப்புகள் மூலமும் கடிதம் மூலமும் "உங்கள் ஓய்வூதியம் பெறும் வங்கிக் கணக்கை எமது கிளைக்கு மாற்றினால் அதை அடிப்படையாக வைத்து எந்த விதமான சிபரிசுகளோ, பொறுப்புகளோ இன்றி 2 மில்லியன்கள் (20லட்சம்) வரை கடன் பெற முடியும்" என ஏறத்தாழ நாகரீகத்துடன் மிரட்டுகின்றன.

இதிலிருந்து அவர்களது மாதாந்தக் கட்டணத்தை அறவிடுவதற்கான வாய்ப்பையும், அதிக வட்டி வீதத்தையும் இதன் மூலம் இந்த நிறுவனங்கள் பெற்றுக்கொள்கின்றன. இவ்வாறானவர்களின் மாதாந்தக் கொடுப்பனவால் "பிறீமியம்" எனும் பெயரிலான ஒரு பகுதி அங்கு பணியாற்றும் முகவருக்குக் கிடைக்கிறது. இதனால் இவ்வகை முகவர்களும் பெருவிருப்புடன் இந்த விடயத்தில் செயலாற்றுகின்றனர்.

அவர்கள் எந்தப் பொய்யையும் சொல்வதற்குத் தயாராகவுள்ளனர். இதனால் அவர்களும் தனிப்பட்ட முறையில் மிக மோசமான சுற்றுமாற்றுக் காரர்களாக மாறிவிடுகின்றனர்.

ஓய்வூதியர்கள் பலர் நோயாளிகளாக இருப்பதைக் காரணம் காட்டி அவர்களின் போக்குவரத்தைக் காரணமாக வைத்து அவர்தம் பிள்ளைகளும் மருமக்களும் அவர்களின் ஓய்வூதியத்தைப் பயன்படுத்திக் கார் வாங்கி ஓடுகின்ற நூதனமான குடும்ப ஏமாற்றுகளும் நடந்துள்ளன. இந்தத் துணிவை இந்தியத் தொலைக்காட்சி நாடகங்களே சாதாரண மக்களுக்குக் கொடுத்துள்ளன. பல மோட்டார் சைக்கிள்கள் விபத்துக்குள்ளாகிய பின்னர் தான் அதன் பதிவுப் புத்தகம் லீசிங் நிறுவனத்தில் அடகு என்பது தெரியவருகின்றது. அடிபட்ட மோட்டார் சைக்கிளைத் திருத்தப் பணம் இல்லாததால் உயர்ந்த விலைக்கு வாங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் பல திருத்தகங்களில் நிறுத்திய இடத்தில் தூசு பிடித்துக் கிடக்கின்றன.

கடன் எப்படியெல்லாம் எடுக்கமுடியும் என்ற நூதன விடயங்களை லீசிங் நிறுவனங்கள் மக்கள் மீது திணிக்கின்றன. தாம் வழங்கும் கடனுக்கு அதிகமான வட்டி கட்டவேண்டியிருப்பதை இவை நூதனமாக மறைக்கின்றன. இவ்வாறான லீசிங் சுத்து மாத்தில் வீழ்பவர்கள் அதிலிருந்து மீளமுடியாத நிலையில் இந்தக் கடன் சுமையிலிருந்து மீள்வதற்காக வழிப்பறி, கொள்ளை, போதைக் கடத்தல், ஏமாற்று வேலைகள் என இறங்குவதும் இயலாத கட்டத்தில் தற்கொலை செய்து கொள்வதும் நடக்கின்றது. ஆனாலும் இந்த லீசிங் நிறுவனங்களைத் தேடி நாடி, அவற்றுக்கு அடிமைப்பட்டு வாழ்வைக் கழிக்கின்ற அடிமட்ட மனிதர்களின் நிலை கவலைக்குரியது. ■

# எந்நாளும் நலம் வாழ

மருத்துவர் - கந்தையா சோதிதாசன்

### கபசுரக் குடிநீர் - அணுகாது கொரோனா

தொட்டாலும் வரும் கொரானா தும்மல்
இருமலொடு சளித்துளிகள் ஓரிரண்டு
பட்டாலும் ஒட்டும் மூக்குநீர் ஓடும் மூச்சிரைத்து
காச்சல்வரும் நெஞ்சில் சளி இறுகும் தொண்டை
கட்டும் குரல்கம்மும் வந்துவிட்டால் போதும்
குடும்பம் குழந்தை குட்டி எல்லார்க்கும் தொற்றும்
கட்டயம் அருந்து கண்மணியே கபசுரகுடிநீர்
கொரோனா அணுகாமல் காக்கும் இது.

**விளக்கவுரை:**

நோயுள்ளவரை அல்லது அவர் தொட்ட பொருள்களைத் தொட்டாலே கொரோன தொற்றிவிடுகிறது. சாதாரண காய்ச்சலுக்கு இருப்பதுபோல் தும்மல், இருமல் போன்ற அறிகுறிகளுடன் இது தோன்றுகிறது. நோயாளியின் சளித் திரவம் சிறுதுளி பட்டாலே தொற்றிக்கொள்கிறது. மேலும் சுவாசத் தொகுதி பாதிப்படைந்து தொண்டைநோ ஏற்பட்டு, மூச்சுவிடுவதில் சிரமம் ஏற்படுகிறது. இது ஒருவருக்கு வந்து விட்டால் அவர்களது குடும்பம் மற்றும் சுற்றுச் சூழலில் எளிதில் பரவிவிடுகிறது. என் கண் மணி போன்ற வளே! கபசுர குடிநீர் என்ற இந்த மருந்து கொரோனா வராமல் மனித உடலில் எதிர்ப்பு சத்தியை அளிக்கிறது. வந்தாலும் நோயை விரட்டுகிறது. எனவே கட்டாயம் இதை அருந்திச் சுகம் பெறுவாயாக.

குறிப்பு - சித்த மருத்துவ நூல்களில் குறிப்பிடப்படும் கபசுரக்குடிநீரை கொரோன சிகிச்சையில் பயன்படுத்தலாம் என்று இந்தியாவின் தமிழ் நாடு சித்த மருத்துவக் கழகம் அறிவித்துள்ளது. நோய்வரு முன் காக்கவும் இதை அருந்தலாம் எனப் பரிந்துரை செய்கிறது. இது சித்த மருத்துவர் ஒருவரின் மேற்பார்வையில் தயாரிக்கப்படுவதே சிறந்தது ஆனாலும் எல்லோரும் நோய்த் தடுப்பாகப் பாவிக்கக்கூடிய மூலி கைக் குடிநீரொன்று கீழே தரப்படுகிறது.

தேவையானவை - சுக்கு (வேர்க்கொம்பு) -100 கிராம், அதிமதுரம் - 100 கிராம், சித்தரத்தை - 30 கிராம், கடுக்காய்த்தோல் - 30 கிராம், மஞ்சள் - 10 கிராம், திப்பிலி - 5கிராம், ஓமம் - 5கிராம், கராம்பு - 5 கிராம், மிளகு - 5கிராம்.

மேற்குறிய அனைத்துப் பொருள்களையும் இடித்துத் தூள் செய்து, அதில் 10 கிராம் அளவெடுத்துக் கொதி நீரில் இட்டுச் சிறு துண்டு கருப்பட்டி சேர்த்து (தேனீர் போல ) காலை - மாலை உணவுக்குப் பின் 100 மில்லி அளவு அருந்துங்கள். 5 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு 30 மில்லி கொடுக்கலாம்.


**கபசுரக் குடிநீர்’**

நிலவேம்பு, சிறுதேக்கு, சுக்கு, திப்பிலி, லவங்கம், ஆடாதொடை வேர், கற்பூரவள்ளி, சீந்தில், கோரைக்கிழங்கு, கோஷ்டம், அக்ரஹாரம் ஆகிய மூலிகைகளைச் சம அளவில் எடுத்து கபசுரக் குடிநீர் தயாரிக்கப்படுகிறது. ‘கபசுரக் குடிநீரை’ கசாயமாகக் காய்ச்சிக் குடித்தால் பலன் கிடைக்கும்.

அதாவது, நான்கு தேக்கரண்டி தூளை, 200 மில்லி லீற்றர் நீரில் கலந்து கொதிக்க வைத்து, வடிகட்டுவதன் மூலம் கிடைக்கும் 60 மில்லி லீற்றர் கசாயத்தை வெறும் வயிற்றில் தொடர்ந்து 3 நாள்கள் குடிக்க வேண்டும்.

# காட்சிக்கு வந்த சவப்பெட்டிகள்!

கிட்டத்தட்ட 2ஆயிரத்து 500 ஆண்டுகள் பழமையானவை என்று கருதப்படுகின்ற சவப்பெட்டிகளை கடந்த சனிக்கிழமை எகிப்து காட்சிப்படுத்தியது. சில நாள்களுக்கு முன்பு எகிப்தின் சாகாரா நெக்ரோபோலிஸ் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டிருந்த இவற்றில் பழங்கால எகிப்தின் 26ஆவது வம்சத்தைச் சேர்ந்த பாதிரியார்கள் மற்றும் எழுத்தர்கள் சமாதியாகியுள்ளனர் என்று தெரியவந்துள்ளது. எகிப்தின் தலைநகர் கெய்ரோவிற்குத் தெற்கேயுள்ள இந்தப் பகுதியை ஐ.நாவின் யுனெஸ்கோ அமைப்பு உலக பாரம்பரிய தளமாக்கியிருந்தது. அவ்விடத்திலேயே இவை கண்டுபிடிக்கப்பட்டன. எதிர்விளைவுகளிலிருந்து பாதுகாக்கப்படுவதற்காக வித்தியாசமான ஒரு பாதுகாப்பு முறையின் கீழ் இந்தச் சவப்பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன என்று இவற்றைக் கண்டறிந் குழுவினர் தெரிவிக்கின்றனர். பழங்கால எகிப்தியர்களின் செயற்றிறன் குறித்து ஆச்சரியப்பட வைக்கின்ற மம்மிகளாக இந்தக் கண்டுபிடிப்பு அமைந்துள்ளது.






Price: Rs. 1150 (Islandwide Free Delivery for ezcash Payment)
விபரங்களுக்கு அழையுங்கள்: 0769 355 944

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:
'யாழ் முற்றம்' - இல: 461, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(அத்தியடி உப தபால் நிலையம் அருகில்)

Lion Comics & Muthu Comics

உங்கள் மனங்கவர்ந்த காமிக்ஸ் புத்தகங்கள்!
இலங்கையிலும் விற்பனையாகின்றன!




யாழ்ப்பாணத்தில்
பாக்யா புத்தகசாலை - கொக்குவில்
ஸ்ரீலங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம்


கொழும்பில்
பூபாலசிங்கம் புத்தகசாலை - வெள்ளவத்தை
கந்தையா அன்ட் சன்ஸ் - 357, காலிவீதி, பம்பலப்பிட்டி

தபாலில் பெற விபரங்களுக்கு (SMS மட்டும்) - 0769 355 944


https://www.facebook.com/tamilcomics/


லயன், முத்து காமிக்ஸ் குழும வெளியீடுகளை அனுமதியின்றி அச்சுவடிவிலோ மின்னிதழ் வடிவிலோ விற்பனை செய்தல், பரிமாறுதல் போன்ற நடவடிக்கைகள் காப்புரிமச் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்! – வெளியீட்டாளர்

# 2020 நோபல் ஆரம்பம்!








ஆண்டுதோறும் மருத்துவம், இயற்பியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. அமைதிக்கான நோபல் பரிசு நோர்வேயிலும் மற்றைய துறைகளில் மிளிர்ந்தவர்களுக்குரிய பரிசுகள் சுவீடனின் தலைநகர் ஸ்ரொக்ஹோமிலும் அறிவிக்கப்படும். இந்த வருடத்துக்கான இந்தப் பரிசு வழங்கல் இந்த மாதம் ஆரம்பித்துள்ளது. அந்த வகையில் 2020 ஆம் ஆண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசும், இயற்பியலுக்கான நோபல் பரிசுகள் இதன் முதற்கட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளன. கடந்த 5ஆம் திகதி மருத்துவத்துக்கான பரிசு பிரிட்டன், அமெரிக்க விஞ்ஞானிகளுக்குக் கூட்டாக அறிவிக்கப் பட்டது. அமெரிக்க விஞ்ஞானி ஹார்வே ஜே. ஆல்டர் (வைராலஜிஸ்ட்), பிரிட்டன் விஞ்ஞானி மைக்கல் ஹாட்டன், அமெரிக்க விஞ்ஞானி சார்லஸ் எம். ரைஸ் (பேராசிரியர் ராக்கர் ஃபெல் லர்




பல்கலைக்கழகம்) ஆகியோரே இந்தப் பரிசைப் பெறுகின்றனர். அதையடுத்து 6ஆம் திகதி இயற்பியலுக்கான பரிசு அறிவிக்கப்பட்டது.

### அவர்கள் கண்டுபிடித்தது என்ன?

சிரோசிஸ் எனப்படும் கல்லீரல் செல்களை அழித்தல் நோய் மற்றும் கல்லீரல் புற்றுநோயை ஏற்படுத்தும் குருதியில் பரவும் ஹெபாடைடிஸ் வைரஸுக்கு எதிராகக் கண்டுபிடிப்புகளைச் செய்தமைக்காக இந்த விருது இவர்களுக்கு வழங்கப்படுகிறது. குருதி மூலம் பரவும் ஹெபா டைடிஸ் நோய், கல்லீரல் புற்றுநோய், கல்லீரல் அழற்சி ஆகியவற்றை உண்டாக்குகிறது. ஹெபாடைடிஸ் சி வைரஸ்தான் அது என்பதை கண்டுபிடித்தமைக்காக இந்த 3 விஞ்ஞானிகளுக்கு கூட்டாக இந்த நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. இவர்கள் ஏற்கெனவே ஹெபாடை டிஸ் ஏ, பி வைரஸ்களையும் கண்டுபிடித்திருந்தனர், இதுதான் ஹெபாடைடிஸ் சி வைரஸ் ஆய்வுக்கான முதல் படியாக அமைந்தது. இந்த ஹெபாடைடிஸ் சி வைரஸ் கண்டுபிடிப்பின் மூலம் நாட்பட்ட ஹெபாடைடிஸ் ஏற்படுவதற்கான காரணத்தைக் குருதிப் பரிசோதனைகள் மூலம் கண்டறிய உதவின. கோடிக்கணக்கான மனித உயிர்களைக் காப்பாற்ற புதிய மருந்துகள் கண்டுபிடிப்பதற்கான ஆய்வுகளைத் தொடங்க வழிகாட்டியது. இதற்கு முன் 1960 ஆம் ஆண்டில் அமெரிக்காவைச் சேர்ந்த பரூச் சாமுவேல் ப்ளூம் பெர்க் ரத்தத்தில் பரவும் ஒரு விதமான வைரஸால்தான் ஹெபாடைடிஸ் நோய் பரவு கிறது. அதுதான் ஹெபாடைடிஸ் பி எனக் கண்டு பிடித்தார். இந்தக் கண்டு பிடிப்பே ஹெபா டைடிஸ் பி வகைக்கு மருந்து கண்டுபிடிக்க உத்வேகமாக இருந்தது. இதற்காக அவருக்கு 1976ஆம் ஆண்டில் நோபல் பரிசு வழங்கப்பட்டிருந்தது.


### ஹெபாடைடிஸ் கண்டுபிடிக்கப்பட்டது


இம்முறை உச்சபட்ச கவனத்துடன் செய்யப்படும் குருதிப் பரிசோதனையின் மூலம் ஹெபாடைடிஸ் நோயைக் கண்டுபிடிக்க முடியும் என்று நிரூபித்துள்ளனர் இவர்கள். இதுவரை ஹெபாடைடிஸ் ஏ, பி இருவகைகளுக்கு மட்டுமே தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த ஆய்வாளர்களின் கண்டுபிடிப்பு ஹெபாடிடைஸ் சி வைரஸுக்கு எதிராகத் தடுப்பு மருந்தைக் கண்டுபிடிக்க இது உதவும். இதன் காரணமாக வரலாற்றிலேயே முதல் முறையாக, ஹெபாடைடிஸ் சி வைரஸைக் குணப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை வந்துள்ளது. ஹெபாடைடிஸ் சி என்பது மனித உடலில் கல்லீரலைத் தாக்கும் வைரஸ். இந்த வைரஸால் கல்லீரல் பெரும் பாதிப்புக்குள்ளா கும். அமெரிக்காவில் மட்டும் 39 லட்சம் மக்கள் ஹெபாடை டிஸ் சி வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள னர். உலக அளவில் பல கோடி பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த ஹெபாடைடிஸ் சி வைரஸ் மனிதர்களைத் தாக்கினால் உடனடியாக அறிகுறிகள் தெரியாது. நோய் முற்றும்போதுகூட இலேசான அறிகுறிகள்தான் இருக்கும். இதனாலே இந்த வைரஸ் தாக்குதல் குறித்துப் பெரும்பாலானோருக்குத் தெரிவதில்லை. பெரும்பாலும் பாதிக்கப்பட்டவரிடம் இருந்து குருதி மாற்று மற்றும் உடலுறவு மூலம் பரவுகிறது.

சிரோசிஸ் எனப்படும் கல்லீரல் செல்களை அழித்தல் நோய் மற்றும் கல்லீரல் புற்றுநோயை ஏற்படுத்தும் குருதியில் பரவும் ஹெபாடைடிஸ் வைரஸுக்கு எதிராகக் கண்டுபிடிப்புகளைச் செய்தமைக்காக இந்த விருது இவர்களுக்கு வழங்கப்படுகிறது.

### இயற்பியலுக்கான நோபல்

2020ம் ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசும் 3 பேருக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. கருந்துளை உருவாக்கம் குறித்த பொதுவான சார்பியல் கோட்பாட்டின் வலுவான கணிப்பைக் கண்டுபிடித்ததற்காக ரோஜர் பென்ரோசுக்கும், விண்மீன் திரளின் மையப்பகுதியில் உள்ள ஒரு அதிசய சிறு பொருளைக் கண்டுபிடித்த தற்காக ரின்ஹெர்ட் கென்செல், ஆன்ட்ரியா கெஸ் ஆகியோருக்கு இந்தப் பரிசு வழங்கப்படுகிறது. பரிசுத்தொகையில், ரோஜர் பென்ரோசுக்கு 50 சதவீதமும், ரின்ஹெர்ட் கென்செல், ஆன்ட்ரியா கெஸ் ஆகி யோருக்கு தலா 25 சதவீதமும் வழங்கப்படும் எனவும் அறி விக்கப்பட்டுள்ளது. இதைவிட இன்னுமிருக்கின்ற பரிசுக்குரிய வர்களும் தொடர்ந்து அறிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.






## 2022இல் ஜுராசிக் வேர்ல்ட்!

அடுத்த ஆண்டு வெளியாகவிருந்த ஜுராசிக் வேர்ல்ட் டாமினியன் திரைப்படம் 2022ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது. ஸ்பில்பெர்க் இயக்கிய ஜுராசிக் பார்க் திரைப்பட வரிசையின் தொடர்ச்சியாக ஜுராசிக் வேர்ல்ட் வெளியானது. க்றிஸ் ப்ராட் நடிப்பில் கோலின் ட்ரெவாரோ இயக்கிய இந்தப் படம் உலகமெங்கும் நல்ல வரவேற்பைப் பெற்றது. இதன் மூன்றாம் பாகமான ஜுராசிக் வேர்ல்ட் டொமினியன் படப்பிடிப்பு கடந்த பெப்ரவரி மாதம் தொடங்கப்பட்டது. ஆனால் கொரோனா அச்சுறுத்தலால் இதன் படப்பிடிப்பு இடை நிறுத்தப்பட்டது. கடந்த ஜூலை மாதம் மீண்டும் படப்பிடிப்பு தொடங்கி நடந்து வந்தது. இந்த நிலையில் 2021ஆம் ஆண்டு மே மாதம் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்த இந்தப் படம் 2022ஆம் ஆண்டு ஜூன் மாதம் தான் வெளியாகும் என்று தற்போது அறிவிக்கப்பட் டுள்ளது. இந்த அறிவிப்பை இதன் இயக்குநர் கோலின் ட்ரெவாரோ தனது அதிகாரபூர்வ கீச்சகப் பக்கத்தில் வெளியிட் டுள்ளார். அடுத்த ஆண்டு ஜுராசிக் வேர்ல்ட்: டொமினியன் வெளியாகும் என்று எதிர்பார்ப்பில் இருந்தவர்களுக்கு இது பெரும் ஏமாற்றம்தான்!

## ஒரு கிராம் உயிர்

நிலாப் புகுந்தீர்க்கும்
ஓர் இரவில்
விழிகளின் ஈர்ப்பு விசையைத் தாண்டி
இமைகள்
பருந்துகளைப் போல் பறந்து
துயிலை
வேட்டையாட
கணிப்பொறி முன்
அவன் கண்கள்
தவம் செய்தன

களைத்து விழுந்து வீடு வந்து
கதிரையில் சாய்ந்து மாய்ந்து
உச்சி மேலே சுற்றும்
மின் விசிறியை
உற்றுநோக்கி
உடம்பை அலசி
வயிற்றை
ஆறிப்போன உணவால் நிறைத்து
சுற்றித் தலை கவிழ்கையில்
நேரம்
பன்னிரெண்டு

இரவின் நெருக்கத்தில்
கொடும் கனவு வந்து
திடுக்கிட்டு எழவே
திகைத்து விழித்து
எரியும் இதயத்துள்
சற்று நீரை ஊற்றி அணைத்து
திறன் பேசியைத் திறந்து
நேரத்தைப் பார்த்தான்
மணி
மூன்றரை
இன்னும் சில மணிக்கூறுகள் உறங்க
அவன் வாழ்க்கை அவனுக்கு
அனுமதித்திருந்தது

இயற்கையின் அழைப்பை ஏற்று
எழுந்து சென்று
இணைந்த குளியலறையின்
விளக்கை ஏற்றி
உள்ளே நுழைந்தவனுக்கு
தத்தளித்துக்கொண்டிருந்த
ஒரு கரப்பொத்தானின் அழுகை
கேட்டது

பிலஷை (*flush*ஐ) அடித்து
அதன் உயிரைப் பறித்து
கருணைக் கொலை செய்தால்
இவனுக்கு நேரம் மிச்சம்
ஏக்கத்தோடு காத்திருக்கும் தூக்கம்
வாசலில்

இன்னொருபுறம்
தீண்டத்தகாதவர் போல்
விடப்பட்டிருக்கும்
ப்ருஷை (*brush*ஐ) எடுத்து
ஒரு ஏணி அமைத்து
அந்தக் கரப்பொத்தானின்
உயிரைக் காப்பாற்றினால்
இந்தக் குளிரும் இரவில்
கைகளைக் கழுவ நனைக்கும் நீர்
துயிலைக் கெடுத்து
வரமாய்க் கிடைத்த மணிக்கூறுகளையும்
திருடி விடலாம்

ஏக்கத்தோடு காத்திருக்கும் தூக்கம்
வாசலில்

ஒரு கிராம் உயிர் தானே
ஜல சமாதி அடையட்டும் என
ஒரு விழியும்
உயிர்
ஒரு கிராம்
எழுபத்தி இரண்டு கிலோகிராம்
(அவன் எடை)
என பேதம் உண்டோ என
மறு விழியும்
பாத்ரூமில் கீதாஉபதேசம்
நிகழ்த்தும்
குருச்சேத்திரம் போன்ற யுத்த பூமியை விட
பாத்ரூம்
புனிதமான இடம் தான்
அங்கு நிகழ்த்தலாம்

சில வினாடிகள் கழிந்தன
ப்ருஷை எடுத்தான்
கரப்பொத்தான் துள்ளிக் குதித்தான்
குளிர்ந்து ஈரமான கைகளை
துவாயில் உலர்த்திவிட்டு
மீண்டும் சரிந்தான்
இமைகளை மூடி
உடலற்ற உறக்கத்துள் -

''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்''

-ஓஷோ சிறிரதி

## ஜெயலலிதாவாக கங்கனா சசிகலாவாகப் பிரியாமணி








தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர் ஏ.எல். விஜய்யின் இயக்கத்தில், விஷ்ணுவர்தன் இந்தூரி தயாரிப்பில் வெளிவரவிருக்கின்ற திரைப்படம் தலைவி. மறைந்த தமிழக முதலமைச்சரான ஜெயலலிதாவின் வாழ்க்கைப் படம் இது. இதில் ஜெயலலிதாவாகப் பொலிவூட் நடிகை கங்கனா ரணாவத்தும் அவரது தோழி சசிகலாவாகப் பிரியாமணியும் எம்.ஜி.ஆர். வேடத்தில் அரவிந்தசாமியும் நடிக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் ஆளும் அதிமுக கட்சியின் பொதுச்செய லராகவும் ஆறு முறை - எல்லாமாக 14 ஆண்டுகளுக்கு - மாநில முதல்வராகவும் இருந்தவர் ஜெ.ஜெயலலிதா. அவர், 2016ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதி மருத்துவமனையில் உயிரிழந்தார். தனது இறப்பின் கடைசி மாதங்களில் ஜெயலலிதா எதிர்கொண்ட உடல் சுகவீனம், அவரது இறப்புக்கு அடுத்த சில வாரங்களில் அவருக்கு எதிரான சொத்து குவிப்பு வழக்கில் விதிக்கப்பட்ட தண்டனை, ஆளும் அதிமுகவின் தலைமையை அவரது நெருங்கிய தோழி வி.கே.சசிகலா ஏற்று ஆட்சியில் முதல்வராக அமரவிருந்த சூழலில் அவருக்கு உச்ச நீதி மன்றம் உறுதிப்படுத்திய தண்டனை என அவரது இறப்புக்கு முன்னும் பின்னும் சில காலம்வரை தமிழக அரசியல் களம் விறுவிறுப்பாக இருந்தது. இப்போது சசிகலாவின் தண்டனை காலம் முடிவடைந்து அவரது விடுதலை எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம் என்ற எதிர்பார்ப்பு நிலவத் தொடங்கியிருக்கிறது. இதற்கு மத்தியில் இந்தப் படத்தின் படப்பிடிப்பும் தொடங்கப்பட்டிருக்கிறது.

இந்த படம் வெளிவரும் நேரத்தில் தமிழக அரசிய லில் தேர்தல் களம் சூடுபிடித்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தெய்வம் - மாங்குளம்

# காடேறி அல்லது காட்டேரிப் பேய்...




7 கதை

பெரும் வனாந்தரக் காடு என்றால் மிக உயரமான மரங்களும், சூரிய ஒளி உள்ளே புகாதபடியான இருட்டும், தரையில் நிறையச் சருகுகளும் காணப்படும். உயர்ந்து வளர்ந்துள்ள மர உச்சிகளில் பட்டு வீசும் காற்று. வெளியே காணப்படுகின்ற சூழலைவிட வனாந்தரக் காடுகளின் சூழல் வித்தியாசமானதாக இருக்கும். மனிதர்கள் இல்லாத அந்தச் சூழலில் மிருகங்களின் அச்சுறுத்தல் இருக்கும். காட்டில் சருகுச் சத்தம் எங்காவது கேட்டால் ஏதோ ஒரு விலங்கு எம்மை நோக்கி வருகிறது என்று பயம் வரும். வனாந்திரக் காடுகளின் இயற்கைச் சூழல் வேறு ஓர் உலகம்போல இருக்கும்.

இவ்வாறான காடுகளுக்குள் வேட்டையாடுதல், காட்டுப் பழம் பறித்தல், தேன் எடுத்தல், பெரு மரங்களை வெட்டுதல், கசிப்புப் போன்ற கள்ளச் சாராயம் காய்ச்சுதல் போன்ற பல்வேறு தேவைகளுக்காக மனிதர்கள் புகுவதுண்டு. தாம் சென்ற தடத்திலிருந்து மாறி மீண்டும் தாம் சென்ற பாதையைப் பிடித்துக் கொள்ள முடியாமல் திசை மாறிப் பல மைல்கள் அலைந்து திரிந்து வேறோர் பகுதியால் வெளியேறிப் பலர் வந்திருக்கிறார்கள். இவ்வாறானதில் அனுபவங்களுக்குப் பொதுவாகக் கிராமத்து மக்கள் கூறும் விளக்கம், "காடேறிப் பேய் ஏமாற்றிக் கூட்டிச் சென்றது" என்பதாகும். அதாவது காட்டிலுள்ள ஒருவகைக் கொடியைத் தாண்டியபின் திசை தெரியாமல் தவித்துப் பின்னர் காட்டுக்குள் அலைக்கழிக்கப் பட்டேன் என்று இங்குள்ள கிராமத்தவர்கள் பலர் அடிக்கடி கூறுவர். அதில் எந்தளவுக்கு உண்மையிருக்கிறது என்று பார்த்தால் அது முற்றிலும் பொய்யானது என்றே தெரிய வரும்.

கண்ணைக் கட்டிக் காட்டிக் காட்டில் விட்டதுபோல என்று ஒரு பேச்சுவழக்கு வார்த்தை உண்டு. அதில் உண்மை ஒளிந்திருக்கிறது. அதாவது இவ்வாறு காட்டுக்குள் அலைக்கழிக்கப்பட்டதாக இங்குள்ளவர்கள் கூறுவது உண்மையில் பேய் அல்லது வனதேவதை சம்பந்தப்பட்ட விடயமல்ல. அவர்கள் காட்டுக்குள் திக்குத் திசை தெரியாதது தடுமாறுகின்ற நிலையே. காடு விடயத்தில் மிகவும் அனுபவமானவர்கள் தமது தேவைகளுக்காகக் காலையில் காட்டுக்குள் இறங்கினால், உச்சி வெயில் வருவதற்கிடையில் அடர்ந்த காட்டுப் பகுதியிலிருந்து வெளியேறிவிடுகிறார்கள். வேறு சிலர் பிற்பகல் வேளையில்தான் காட்டுக்குள் இறங்குவார்கள்.

எனது பாட்டனார் இந்தக் காட்டேறி விடயத்தில் நல்ல அனுபவம் உடையவர். அவரது கருத்துப்படி உச்சி வெயில் வந்ததும் காட்டுக்குள் திசையைக் கண்டுபிடிப்பதில் சிரமம் ஏற்படுமாம்! அவ்வாறான நேரத்தில் காட்டுக்குள் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டால் காட்டுக்குள் செல்லும்போது தாம் சென்ற தடம் மாறாமல் இருப்பதற்காகப் போகும் வழிதோறும் குலைக் கொப்புகளை வெட்டிப் போட்டுக் கொண்டு போவர். வழித் தடத்தைச் சரியாக நிதானிப்பவர்களுக்கும், சூரிய ஒளியை வைத்துத் திசையை ஊகித்துக் கொள்ள முடிந்தவர்களுக்கும் இந்தக் காடேறிப்பேய்ப் பயம் இருப்பதில்லை. அதனால் அவர்கள் தமது பலவீனத்தை மூடி மறைப்பதற்கு இவ்வாறான கதைவிடும் வேலைகளிலும் இறங்குவதில்லை.

உச்சி வெயில் நேரத்தில் காட்டுக்குள் திசை குழம்பி, அடுத்து வருகின்ற 2 மணித்தியாலங்களில் திசைமாறி அதிக தூரம் சென்றுவிட வாய்ப்புண்டு. சிலர் 20-30 மைல்களைக் கடந்துபோய் வேறொரு காட்டுக்குள் மிதந்த சம்பவங்களும் உண்டு. முழங்காவில் - எழுச்சிக் கிராமம் பகுதியில் இருக்கின்ற ஒரு காட்டுக்குள் மதிய நேரம் நுழைந்த அண்ணாவும் தம்பியும் இருட்டாகியும் வீடு மீளவில்லை. அந்தப் பெருங்காட்டுக்குள் சென்ற பின்னர் வழி தவறிய் அவர்கள் திக்குத் தெரியாமல் ஒருவரை ஒருவர் தேடியலைந்து காட்டுக்குள்ளேயே தொலைந்து போனார்களாம். அண்ணா தம்பி என்று அழைத்துக்கொண்டும் தம்பி அண்ணா என்று கூவியபடியும் காட் டுக்குள் ஒருவரை ஒருவர் பிரிந்து அலைந்து இறந்தார்களாம். காட்டேரிப் பேய்கள் உலாவுகின்ற அந்தக் காட்டுக்குள் போவதைத் தவிர்க்கவேண்டும் என்றும் கூறும் பலர் இப்போதும் உள்ளனர். அந்த அண்ணன் தம்பிக் காடும் நம்மவர்க்குப் பயம் காட்டியபடி இருக்கிறது. ■



# இந்தியாதமிழர் பக்கம் . . .

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரஜீவ் காந்தி - ஜே.ஆர். ஒப்பந்தம் கைச்சாத்தாகி, ரஜீவ் கொல்லப்பட்ட பின்னர் இந்தியாவில் ஆட்சிபீடமேறிய வி.பி.சிங், சந்திர சேகர், பி.வி. நரசிம்ராவ், வாஜ்பாய், எச்.டி.தேவகவுடா, இந்திர குமார் குஜ்ரால், மன்மோகன் சிங், 2014இல் இறுதியாக ஆட்சிக்கு வந்த மோடி ஆகியோரை மிகவும் தந்திரமாகக் கையாண்டு வருகின்றனர் சிங்களத் தலைவர்கள். 33 ஆண்டுகளாக இவர்களைத் திறம்படக் கையாண்டதன் மூலமே 13ஆவது திருத்தத்தை வடக்குக் கிழக்கில் நடைமுறைப்படுத்தாமல் தவிர்த்திருக்கிறார்கள். இதற்கு மாறாக தமிழர் தரப்பால் இந்தியாவை நெருங்கவோ அவர்களைத் தமது கருத்துக்களைச் செவி மடுக்க வைக்கவோ முடிந்திருக்கவில்லை.

இதைவிட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் தமிழரை ஒரு தரப்பாக இந்தியாவோ இலங்கையோ ஏற்றுக்கொள்ளவில்லை. ஒப்பந்தத்துக்கு முன்பாகப் பிரபாகரன் - ரஜீவ்காந்தி சந்திப்புக்கூட தனிப்பட்ட உரையாடல்களே தவிர முறை சார்ந்த மூன்றாம் தரப்பாகப் புலிகள் ஒப்பந்தத்தில் கையொப்பமிடவில்லை. உண்மையில் இலங்கை அரசு கூறுவதுபோல இந்தியா வெளிச் சக்தியாக இந்த நாட்டுக்குள் உட்புகுந்தச சம்பவமே தவிர வேறேதுவும் இல்லை. இந்நிலையில் இந்த ஒப்பந்தத்தையொட்டி தமிழர் தொடர்பில் பொறுப்புக் கூறும் கடப்பாடு இந்திய அரசுக்கோ இலங்கை அரசுக்கோ இல்லை.

இத்தகைய பின்னணியில்தான் அண்மையில் இலங்கை இந்தியத் தலைவர்கள் கூட்டாக விடுத்த அறிக்கையையும் நோக்கவேண்டும். ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சிபீடம் ஏறியுள்ள நிலையில் 13ஆவது திருத்தத்தை நீக்கவேண்டும் என்கிற கோரிக்கை அவர்களது பங்காளிகளால் வலியுறுத்தப்பட்டு வந்தது. மாகாண சபைகளுக்கான துணை அமைச்சர் முன்னாள் அட்மிரல் சரத் வீரசேகர இந்த நிலைப் பாட்டை இந்தியத் தூதரிடம் நேரிலேயே தெரிவித்திருந்தேன் என்று நேர்காணல்களைக்கூட வழங்கியிருந்தார். இந்த நிலையில் 13ஆவது திருத்தத்தைப் பலப்படுத்தி தமிழர்களுக்குத் தீர்வு ஒன்று வழங்கப்படவேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்பதை அந்த அறிக்கை அடிக்கோடிட்டிருக்கின்றது என்பதைத் தூக்கிப் பிடித்து இந்தியா ஏதோ செய்துவிடப் போகின்றது என்கிற மாயையை ஏற்படுத்தப் பார்க்கிறார்கள் தமிழ்த் தலைவர்கள்.

அவர்கள் கதை விடுவதுபோல இந்தியா இலங்கை ஒப்பந்தம் செயற்படுத்தப்பாது நிலை யில் இந்தியா பொறுப்புக்கூறாது விடும்போது இந்தியாவுக்கு எதிரான சர்வதேச விசாரணை ஒன்றையும் மேற்கொள்ள முடியாது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகி 33 வருடங்கள் கடந்துள்ள நிலையில் இந்திய, இலங்கையுடனான ராஜதந்திர உறவுகளை இலங்கை அரசுடனேயே வைத்துக்கொள்ள விரும்பும். தமிழ்த் தலைவர் களை நாடாது. தமிழருக்கான தீர்வொன்று அவசியம் எனக் கூறும் நரேந்திர மோடி அந்த ஒற்றைச் சொல்லுடன் இது விடயத்தில் தனது அரசியலை நிறுத்திக்கொள்வார். தமிழ்த் தலைவர்களை அழைத்து அவர்களுடன் ஒப்பத்தங்கள் எதையும் செய்துவிடப் போவதில்லை.

இந்த நிலையில் தமிழ்த் தலைவர்கள் ஒருதலைப்பட்சமாக இந்தியா தமிழர்களைப் பாதுகாத்து பின்னால் நிற்கிறது என்று சொல்ல முயற்சிப்பது முற்றிலும் ஏமாற்று நாடகம் மட்டுமே. இலங்கை சீனா உறவைத் தமிழரை வைத்து இந்தியா கையாள நினைத்தால் கடந்த காலத்தில் இந்தியா அடைந்த தோல்வியையே அடையும் என்பது தமி ழர் தரப்புக்குப் புரிகிறதோ இல்லையோ இந்தியாவுக்கு நன்கு புரியும். இறுதிப் போர் தொடர்பில் பன்னாட்டு விசாரணை ஒன்று அவசியம் என இந்தியா ஒரு போதும் கூறப்போவதில்லை. அப்படியொன்று நடந்துவிட்டால் அதன் மூலம் இந்தியாவிற்குக் கிடைக்கக் கூடிய கொஞ்ச நஞ்ச பிடியும் இலங்கையில் கிட்டாமல் போய்விடும் என்பதுடன் அத்தகைய விசாரணை ஒன்றினால் போரில் இந்தியாவின் பங்களிப்பும் வெட்ட வெளிச்சமாகி விடும் என்பது புது டில்லிக்கு நன்கு தெரியும். எனவே 13ஆவது திருத்தம் அகற்றப்பட்டாலும் இந்தியா செய்யப்போவது ஒன்றுமில்லை.

மூளைக்கு வேலை விடை

பசு = 3 யானை = 8.

$3x = y + 1$, $5 + x = y$

$\Rightarrow x = 3, y = 8$

# செல்லப் பாம்பும் சிறுமியும்

இஸ்ரேலைச் சேர்ந்த எட்டு வயதான இன்பார் என்கிற சிறுமி தனது வீட்டின் பின்புறத்திலுள்ள சிறிய நீச்சல் குளத்தில் தனது நண்பருடன் நீச்சலடித்தார். அவரது நண்பர் யார் தெரியுமா? அது மலைப் பாம்பு. அந்த மலைப் பாம்பைக் குளிர்விப்பதற்காக அதை நீருக்குள் இறக்கியிருக்கிறார் இன்பார். பாம்பென்றவுடன் குலை நடுங்குகிறதா...? 11 அடி நீளமுள்ள அந்த மஞ்சள் பாம்புடன் சிறுமி நீருக்குள் நிற்கும் ஒளிப்படத்தைப் பன்னாட்டு ஊடகங்கள் பலவும் பகிர்ந்து செய்தி வரைந்துள்ளன. பெல்லி என்று பெயரிடப்பட்ட அந்த மஞ்சள் நிற மலைப்பாம்பு அவரது குடும்பத்தின் செல்லப்பிராணிகளில் ஒன்றாகும், தெற்கு இஸ்ரேலிலுள்ள குறித்த விவசாயக் குடும்பத்தில் அந்த மலைப்பாம்பு மகிழ்வாக வாழ்கிற தாம். பிரபல திரைப்படத் தயாரிப்புக் கலையகமான டிஸ்னியின் பிரபலமான அனி மேஷன் படமான



பியூட்டி அண்ட் தி பீஸ்ட், என்கிற திரைப்படத்தில் வருகின்ற பெல்லி என்கிற பெண் கதாபாத்திரத்தின் பெயரைத்தான் இந்த மலைப்பாம்புக்கு வைத்துள்ளனர். அந்தத் திரைப்படத்தில் வருகின்ற நடனக் காட்சியில் மஞ்சள் உடையை அணிந்திருப்பார் அந்தப் பெண். கடந்த சில வாரங்களாகக் கொரோனா காரணமாக இஸ்ரேலில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இந்தச் சூழலில் பெல்லி தனக்கு நல்ல பொழுது போக்களிக்கன்றது என்று இன்பார் கூறியுள்ளார்.


## செம்மண்

### வாரமலருக்கு...

- கவிதை
- கட்டுரை
- சிறுகதை
- நெடுங்கதை
- குறுங்கதை
- நிமிடக்கதை
- நாவல்(தொடர்)
- சிரிப்புத் துணுக்குகள்

ஆகியவற்றை எழுத விரும்புபவர்கள் அவற்றைப் பின்வரும் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கலாம்!

**அஞ்சல் /தபால்**
**செம்மண் வாரமலர்**
**551A, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**மின்னஞ்சல்**
**shemman.redsoil@gmail.com**
**தொடர்புக்கு: 021 492 7781**

எந்தவொரு ஆக்கத்துக்கும் தெளிவான முழுப் பெயர், முகவரி புனைபெயர் (இருந்தால்), தொடர்பு எண் என்பன குறிப்பிடப்பட வேண்டும். இந்த விவரங்கள் இல்லாத ஆக்கங்கள் எவ்வளவு தரமானவையாக இருந்தாலும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.


## கார்ட்டூன்




## இந்த வார சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | | 8 | | 5 | | 7 | |
| | | 7 | | | | | | 3 |
| | 1 | 5 | 7 | | | | | |
| | | 2 | | | | | 3 | 1 |
| | 4 | | 3 | 9 | 1 | | 5 | |
| 1 | 5 | | | | | 8 | | |
| | | | | | 7 | 3 | 4 | |
| 8 | | | | | | 9 | | |
| | 3 | | 1 | | 4 | | 6 | 7 |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஒழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
சுடோக்கு,
**551 A,** கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையங்கள். சரியாக எழுதி வெற்றிபெரும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 2 | 7 | 5 | 9 | 8 | 4 | 1 |
| 4 | 8 | 5 | 6 | 1 | 3 | 9 | 2 | 7 |
| 1 | 9 | 7 | 2 | 4 | 8 | 6 | 5 | 3 |
| 3 | 2 | 4 | 9 | 7 | 1 | 5 | 6 | 8 |
| 8 | 7 | 6 | 5 | 3 | 2 | 1 | 9 | 4 |
| 5 | 1 | 9 | 4 | 8 | 6 | 3 | 7 | 2 |
| 2 | 6 | 8 | 3 | 9 | 7 | 4 | 1 | 5 |
| 7 | 4 | 1 | 8 | 6 | 5 | 2 | 3 | 9 |
| 9 | 5 | 3 | 1 | 2 | 4 | 7 | 8 | 6 |

# கோடம்பாக்கம்

● சாருநிவேதிதா

ஹாலிவுட் படங்களைக் கொஞ்சம் உல்டா பண்ணி தமிழ் மக்களுக்குக் கொடுத்து, அவர்களைச் சந்தோஷப்படுத்துவது கோடம்பாக்கத்து வழக்கங்களில் ஒன்று. அதன்படி, பிரபல எழுத்தாளன் கச்சிராயனைச் சந்தித்த சிரஞ்சீவி என்ற ஓர் இளம் தயாரிப்பாளர், அவன் கையில் ஒரு டி.வி.டியைக் கொடுத்து "இதுதான் என் அடுத்த படம். இதற்கு நீங்கள்தான் வசனம்" என்று சொன்னார்.

சிரஞ்சீவி பற்றி அவன் கேள்விப்பட்டு இருக்கிறான். அவர் இதற்கு முன் தயாரித்த இரண்டு படங்களுமே ஓரளவுக்கு வசூல் கொடுத்தவை. இப்போது இந்தப் படத்துக்கு அவர்தான் இயக்கம். அவரே ஹீரோ, அவரே தயாரிப்பாளர்!

அந்த டி.வி.டி-யைப் பார்த்த அவன் தன் வாழ்நாளின் உச்சகட்ட அதிர்ச்சியை அடைந்தான். காரணம், 'U Turn' என்ற அந்தப் படத்தின் கதை அப்படி.

ஜெனிஃபர் லோபஸ் நடித்த அந்தப் படத்தை நீங்கள் பார்த்திருந்தால், உங்களுக்கு அதன் விபரீதம் இதற்குள் புரிந்திருக்கும். பார்த்திருக்காவிட்டால் இப்போது அதன் கதையைச் சுருக்கமாகச் சொல்கிறேன்.

ஒரு ஆளிடம் வாங்கிய மிகப் பெரிய கடனைத் திருப்பித் தருவதற்காக ஒரு பெரும் தொகையை எடுத்துக்கொண்டு போகிறான் பாபி என்ற இளைஞன். இடையில், ஓர் ஊரில் அவனுடைய கார் ரிப்பேர் ஆகிவிடுகிறது. அந்த நேரத்தில் அவன் நுழைந்த கடையில் நடந்த கொள்ளை முயற்சியில், அவனுடைய பணம் அத்தனையும் பறிபோகிறது. ஏற்கெனவே குறிப்பிட்ட தவணையில் வட்டி கட்டாததால், அந்த ஈட்டிக்காரன் பாபியின் இரண்டு விரல்களைத் துண்டித்திருக்கிறான். இப்போது சொன்னபடி கொடுக்காவிட்டால் எந்த உறுப்பைத் துண்டிப்பானோ?

அதே ஊரில் வாழும் ஒரு தம்பதி ஜெனிஃபரும் அவளுடைய 54 வயதுக் கணவன் ஜாக்கும். ஜெனிஃபரைக் கொன்றுவிட்டால் பெரும் பணம் கொடுத்து பாபியை ஆபத்தில் இருந்து காப்பாற்றுவதாகச் சொல்கிறான் ஜாக். ஆனால், ஜெனிஃபர் கூறும் கதையோ படுபயங்கரமாக இருக்கிறது. 'தான் ஜாக்குக்கு மனைவி மட்டும் அல்ல... அவனுடைய மகளும்தான். தன்னைச் சிறு வயதில் இருந்தே பாலியல்ரீதியாகத் துன்புறுத்திக்கொண்டு இருக்கும் ஜாக், என் அம்மாவைக் கொன்றுவிட்டு என்னை மனைவியாக வைத்துக்கொண்டு இருக்கிறான்' என்கிறாள். "நீ ஜாக்கைக் கொன்றுவிட்டால் உனக்குப் பெரும் தொகை தருகிறேன்" என்று பாபியிடம் சொல்கிறாள் ஜெனி.

கடைசியில் என்ன நடக்கிறது என்பது இப்போது நீங்கள் படித்துக்கொண்டு இருக்கும் இந்தக் கதைக்குத் தேவை இல்லை. டி.வி.டி - யைப் பார்த்த ராயன் அடித்துப் பிடித்துக்கொண்டு சிரஞ்சீவியைப் பார்க்க ஓடினான். ஏற்கெனவே இலக்கிய உலகில் அவனுடைய பெயர் கன்னாபின்னா என்று கெட்டுக்கிடந்தது. எப்போதும் பாரிலேயே விழுந்து கிடப்பான்... ஸ்த்ரீலோலன் அப்படி இப்படி என்று அவனைப்பற்றி ஏகப்பட்ட வதந்திகள் உலவிக்கொண்டு இருந்தன. இதெல்லாம் போதாது என்று கச்சிராயனே 'இன்செஸ்ட்'டை மையமாக வைத்து ஓரிரண்டு கதைகளை எழுதி இருக்கிறான். போதாதா?

ஆனால், சிரஞ்சீவி பேச்சில் வல்லவர். "கதையை நாம் தமிழ்ச் சூழலுக்கு ஏற்றபடி மாற்றிவிடுவோம். கவலையைவிடுங்கள். அப்பாவுக்குப் பதில் மாமா" என்றார்.

"அதில் என்ன சுவாரஸ்யம் இருக்கிறது? மாமா என்றால் ஜெனி முறைப்பெண் ஆகிவிட மாட்டாளா?"

"சரி, வளர்ப்புத் தந்தை என்று வைத்துக்கொள்ளுங்கள். அதோடு, கதையின் முடிவில் அந்த வில்லனைக் கொன்றுவிடுவோம். பிறகென்ன?"

கச்சிராயன் யோசனையில் ஆழ்ந்தபோது அவன் கையில் ஒரு பணக்கட்டை வைத்தார் சிரஞ்சீவி. "இது அட்வான்ஸ்தான். 10,000 ரூபா. வசனத்தை முடிச்சிட்டா இன்னொரு 40 குடுத்துர்றேன். இது ரொம்ப சின்ன அமௌன்ட். ஆனா, படம் நிச்சயம் பிச்சுக்கிட்டு ஓடும். அப்போ உங்களைச் செமத்தியா கவனிச்சுர்றேன்."

அவனுடைய இலக்கிய சகாக்கள் எல்லாம் லகரங்களில் வாங்கிக்கொண்டு இருக்கும்போது,இது என்ன பிசாத்து ஐம்பதாயிரம் என்று யோசித்தான் ராயன். ஆனால், அவன் ஒரு சினிமா பைத்தியம். தவிர, எடுத்த எடுப்பிலேயே பணத்தைப்பற்றிப் பேசிக்கொண்டு இருந்தால் இண்டஸ்ட்ரியில் 'அந்த ஆள் ஒரு வில்லங்கம்' என்ற பெயர் வந்துவிடும் அல்லவா?

முதலில் கே.கே. நகரில் ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் ஆபீஸ் போடப்பட்டது. மதியம் 12 மணிக்கு ஆரம்பிக்கும் டிஸ்கஷன். அதற்குள்ளாகவே ஓர் உதவி (இயக்குநர்) மதியச் சாப்பாடு வாங்கக் கிளம்பி இருப்பார்.



சிரஞ்சீவியைச் சுற்றி ஆறு உதவிகள் இருந்தனர். இவர்களிடையே சீனியாரிட்டி உண்டு. ஆக, சீனியராக இருந்தவர் பெயர் நாதன். 65 வயதுக்கு மேல் இருக்கும். பார்க்க அந்தக் காலத்து 'என்னத்தே கண்ணையா'வைப் போல் இருப்பார். 45 ஆண்டுகளாக உதவி இயக்குநர். ஆரம்ப கட்டத்தில் கச்சிராயனுக்கு இது ஒரு புதிராகவே இருந்தது. பிறகு, போகப் போகக் காரணம் விளங்கிவிட்டது. சிவாஜி மற்றும் அவர்படங்களுக்கு வசனம் எழுதிய தூயவன் போன்றவர்களிடம் எல்லாம் வேலை செய்திருக்கிறார் நாதன். இதில் என்ன விசேஷம் என்றால், தூயவனும் கச்சிராயனின் சொந்த ஊரான நாகூரைச் சேர்ந்தவர்.

நாகூரில் இருந்து பிரபலமானவர்கள் யார்? நாகூர் ஹனிபா தவிர, தூயவன். இவர்களுக்குப் பிறகு நாம்தான் என்ற ஓர் எண்ணம் லேசாகத் தலைதூக்கியது ராயனுக்கு. ஆனால், நாதனைப் பார்க்கும்போது எல்லாம் கொஞ்சம் கலவரமாகும். ஓர் ஆள் 45 ஆண்டுகளாக உதவி இயக்குநராகவே காலம் கழிப்பது என்றால், இது என்ன சினிமா உலகம்?

அன்றைய தினம் ராயப்பேட்டையில் உள்ள சபாரி ஹோட்டல் வரை போயிருந்தார் உதவி. அங்கேதான் ஃபிஷ் பிரியாணி நன்றாக இருக்கும். மறுநாள் ஆழ்வார்பேட்டை சாம்கோ உணவகத்தில் இருந்து பிரெய்ன் பிரியாணி வரும். இதே போல் கோடம்பாக்கம், வடபழனி வட்டாரங்களில் உள்ள பல மெஸ்களில் இருந்தும் தருவிக்கப்படும்.

"இதெல்லாம் பரவால்ல சார். முன்னாடி இருந்த டைரக்டர் சபாரில ஃபிஷ் பிரியாணி வாங்கச் சொல்லுவான்; சாம்கோவுல காடை ஃப்ரை அப்புறம் அங்கேர்ந்து செனடாப்ரோடு தாபா எக்ஸ்பிரஸ்ல ஷாமி கபாப். இப்படி ஒருவேளை சாப்பிடறதுக்கே நாலு கடைக்கு அலையணும். என் சொத்தையே காலி பண்ணிட்டான்" என்று மூக்கால் அழுவார் சிரஞ்சீவி. அந்தப் பழைய இயக்குநர் கொடுத்த டார்ச்சரின் காரணமாகத்தான்இவரே இயக்குவது என்று முடிவு செய்து விட்டதாகவும் சொன்னார்.

இது தவிர, சினிமா துறையில் இருப்பதால் கிடைக்கும் இன்னொரு அனுகூலம், அங்கே கிடைக்கும் அதி பயங்கரமான கிசுகிசுச் செய்திகள். சிரஞ்சீவியின் உதவிகளுள் ஒருவனான கிரி சொன்ன கிசுகிசுவைக் கேட்டு, மூளையே கிறுகிறுத்துப் போனது அவனுக்கு.

இப்போது கிரிக்கு 35 வயது இருக்கலாம். 10 ஆண்டுகளுக்கு முன்பு அவன் சென்னைக்கு வந்த புதிது. சினிமா சான்ஸ் தேடி அலைந்த நண்பர்கள், சாஃப்ட்வேர் கம்பெனியில் வேலை செய்தவர்கள், வேலை தேடிக்கொண்டு இருந்தவர்கள் என்று சிலர் ஒரே அறையில் தங்கி இருந்தார்கள்.

ஒரு நாள் இரவு, அவன் அறையில் தங்கியிருந்த ஒருவன் மிகுந்த பதற்றமாக வந்தான். இப்போது பிரபலமாக இருக்கும் ஒரு நடிகரின் அல்லக்கை அவன். அந்த நடிகரும் அவரது அல்லக்கைகள் சிலரும் சென்னைக்கு வெளியே உள்ள ஒரு பீச்சில் குடித்துக் கும்மாளமிட்டுவிட்டுத் திரும்பி இருக்கிறார்கள். வரும் வழியில் ஏதோ தோன்ற... கார் நேராக ஓர் அநாதை ஆசிரமத்துக்குத் திரும்பிவிட்டது. அந்த ஆசிரமத்துக்குப் படியளக்கும் தர்மகர்த்தாக்களில் நடிகரும் ஒருவர். அங்கிருந்த பார்வைஅற்ற ஒரு பெண்ணை காரில் தூக்கிப் போட்டு ஃபார்ம் ஹவுஸ் சென்றுஇருக்கிறார்கள். நாலு பேர். இறுதியாக இவனை அழைத்தார்களாம். இவன் போகும்போது அவளுக்கு மூச்சுப் பேச்சே இல்லை. இவன் பயந்து போய் வெளியே வந்துவிட்டான். இவனைத் தவிர மற்ற எல்லோரும் வி.ஐ.பி. நபர்களின் பிள்ளைகள்.

"ஒருவேளை ஏதாவது பிரச்னை என்றால் நாங்க பணம் தர்றோம். நீ ஸ்டேஷன் போறியா?" என்று கேட்டுஇருக்கிறார்கள். அவன் மிரண்டு போய் இரண்டு நாட்கள் தலைமறைவாக இருந்தான். நல்லவேளை அந்தப் பெண் பிழைத்துக்கொண்டதால் பிரச்னை இல்லாமல் போயிற்று.

"இது நடந்து 10 வருடங்கள் இருக்கும். இப்போது அந்த ரூம்மேட்கள் எல்லாரும் எங்கே இருக்கிறார்கள் என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை. அந்த ஆசிரமம் இன்னும் இருக்கிறது.

அந்த நடிகர் இப்போது ரொம்பப் பிரபலம்'' என்று சொல்லி முடித்தான் கிரி.

இதுபோல் திருநெல்வேலி இருட்டுக் கடை அல்வா மாதிரி எக்கச்சக்கமான கிசுகிசுக்கள் வந்து விழுந்து கொண்டே இருந்தன.

மதிய உணவுக்குப் பிறகு 3 மணிக்கு ஆரம் பித்தால் டிஸ்கஷன் இடைவேளை மாலை 7 மணிக்கு. அதற்குப் பிறகு டிஸ்கஷன் சரக்கோடு துவங்கும். ராயனுக்கும் சிரஞ்சீவிக்கும் ஆர்.சி. கோல்டு. மற்ற உதவிகளுக்கு ஓல்டு மாங்க், எம். சி.பிராந்தி, எம்.ஜி.எம்.வோட்கா என்று அவரவர் பிரியப்படி வந்துவிடும். ஆனால், உதவிகள் யாரும் ஒரேயடியாகக் குடித்துவிட்டு மட்டை யாகிவிட மாட்டார்கள். அந்தச் சலுகை இயக்கு நருக்கும் ரைட்டருக்கும் மட்டும்தான்.

எல்லாம் ராணுவ ஒழுங்கோடும் கட்டுக்கோப் புடனும் நடக்கும். இந்த உதவி இயக்குநர்கள் என்ற பிரிவு மட்டும் இல்லாவிட்டால் சினிமா துறையே ஸ்தம்பித்துவிடும். எல்லோரும் சாப் பிட்ட இலைகளை எடுக்க வேண்டும். டீ கிளாஸை எடுக்க வேண்டும். ஆஷ்ட்ரேயைச் சுத்தப்படுத்த வேண்டும். இன்னும் இப்படி நூற்றுக் கணக்கான வேலைகள். எல்லாம் எதற்காக? ஒரு காலத்தில் ஷங்கர், கே.எஸ்.ரவிக்குமார் போன்றவர்களைப் போல் ஆக வேண்டும்என்ற கனவுதான்.

சரக்கோடு ஆரம்பிக்கும் இரண்டாவது செஷன் டிஸ்கஷன்தான் இன்னும் சூடாக இருக்கும். சம யங்களில் இரவு 3 மணி வரைக்கும் கூட நீளும். அதிலும் இந்த கிரிக்கும் நாதனுக்கும் ஆகவே ஆகாது. கிரி ஒன்று சொன்னால் நாதன் அதற்கு நேர் எதிராக ஒன்று சொல்வார். சமயங்களில் இரண்டு பேரும் கட்டிப்புரண்டு அடித்துக்கொள் வார்களோ என்றுகூடப் பயமாக இருக்கும். இது தவிர, கதை பற்றி இயக்குநர் ஏதாவது சொன்னால் அதற்கும் கட்டையைப் போடுவார் நாதன். கட்டை என்றால் சாதாரண கட்டை அல்ல. பைக்கில் சென்றுகொண்டு இருக்கும்போது குறுக்கே கட்டையைப் போட்டால் எப்படி இருக்கும், அந்த மாதிரி கட்டை.

இயக்குநர் சூடாகி ஏதாவது பதில் சொன்னால், ''இவ்வளவும் ஏன் செய்றேன்? படம் ஓட வேண் டும். அதற்காகத்தான் இவ்வளவு போராடுறேன். டைரக்டருக்கு ஜால்ரா போடணும்னா சொல்லுங்க. நீங்க எது சொன்னாலும் சரி சரின்னு தலை ஆட்டுறேன். எப்படி இருக்கணும் சொல்லுங்க?'' என்று இயக்குநரையே மடக்குவார்.

ம்ஹூம்... இவ்வளவு தட்டையாகச் சொல்ல மாட்டார். உள்ளமும் உயிரும் கரைந்து உருகுவது போன்ற தொனியுடன் சொல்லுவார். அது நடிப்போ பாவனையோ இல்லை. நிஜம். ஒன்று மட்டும் சொல்கிறேன். சினிமா மீது அவர்களுக்கு இருந்த காதலைப் போல் இந்த உலகத்தில் யாருக்கும் எதன் மீதும் அவ்வளவு காதல் இருக்காது.

அதிலும் நாதன் இந்தப் படத்தின் கதாபாத்திர மாகவே மாறிவிட்டார். வில்லன் ஜாக் தன் மனை வியை அதாவது, மகளைக் கற்பழிக்கும்போதும், கொல்ல முயற்சி செய்யும்போதும் நாதன் ஜாக்கா கவே மாறி விடுவார். அப்போது கிரிதான் ஜெனி யாக நடிப்பான்.


''நாதனின் இந்த இன்வால்வ்மென்ட்தான் இவரை இன்னமும் சகித்துக்கொண்டு இருப்பதன் காரணம்'' என்பார் சிரஞ்சீவி.

மேலும், நாதனால் வேறொரு உபயோகமும் இருந்தது. படத்தின் ஒரு கட்டத்தில் விழும் சிக் கலை அவிழ்க்க முடியாமல் உதவி இயக்குநர்கள் எல்லோரும் ஒரு முட்டுச் சந்துக்கு வந்து நிற்கும் போது, சட்டென்று ஒரு வழியை உருவாக்குவார் நாதன்.

கதையில் ஒரு முக்கியமான கட்டம், ஜெனியை ஜாக் ஒரு மலை உச்சியிலிருந்து தள்ளிவிடுவது, ''வில்லன் ஹீரோயினை மலையில் இருந்து தள்ளி விடுவதை 'மந்திரிகுமாரி'யில் வில்லன் கள்ளபார்ட் நடராஜன் ஏற்கெனவே செய்திருக் கிறார்; அது வேண்டாம்'' என்று கட்டை போட் டார் நாதன். அவர் சொல்லித்தான் அந்த விஷ யமே மற்றவர்களுக்குத் தெரிந்தது என்றாலும், அந்த ஆட்சேபனை ஏற்கப்பட்டது.

இந்தப் படம் முழுக்கவுமே ஹாலிவுட் படத்தின் ரீ-மேக். அது போதாது என்று பல்வேறு ஹாலி வுட் படங்களிலிருந்து காட்சிகளைச் சுடுவதற் கென்றே இரண்டு உதவி இயக்குநர்களைக் கொண்ட தனி டிபார்ட்மென்ட் ஒன்று இயங்கியது. இருந்தாலும் ஒரு தமிழ்ப் படத்தில் வந்த காட்சி மற்றொன்றில் வரக் கூடாது என்பதில் மட்டும் கவனமாக இருந்தார்கள். அப்படி யானால் ஜெனியை வேறு எப்படிக் கொல்வது?

இதற்கு மட்டுமே டிஸ்கஷன் இரண்டு வார காலத்துக்கு ஓடியது. பல்வேறுவிதமான கொலை கள். ராயனுக்கு கொலைக் கனவாக வந்து கொண்டு இருந்தது. கடைசியில் நாதன்தான் வழி சொன்னார். வில்லன் ஹீரோயினை மலை உச் சிக்கு அழைத்துச் செல்ல வேண்டியது. சிலருக்கு உயரம் ஒப்புக்கொள்ளாது. அது ஒருமாதிரி ஃபோ பியா. அதனால் கீழே விழுந்து செத்துப் போகி றாள் ஹீரோயின்.



ஆர்வம் தாங்க முடியாமல் ''ஃபோபியான்னா?'' என்று வாயைத் திறந்து கேட்டுவிட்டான் கிரி.

குரலில் எந்த உணர்ச்சியும் இல்லாமல் ''பயம்'' என்றார் நாதன். ''ஆனால் அந்த ஃபோபியாவுக்கு ஏதோ ஒரு பெயர் இருக்கிறது. அந்தக் காலத்தில் 'பிரக்ஞை'யில் படித்திருக்கிறேன். மறந்து விட்டது.''

''அக்ரோஃபோபியா'' என்று சிக்ஸர் அடித்தான் கச்சிராயன். கூடியிருந்த அத்தனை பேரும் ஆடிப் போய்விட்டார்கள். ஆனால், ராயனுக்கு மட்டும் நாதனைப்பற்றி ஆச்சர்யம். 'அடப்பாவி. பிரக்ஞைஎல்லாம் படித்திருக்கிறாரே இந்த மனுஷன்!' என்று. 30 ஆண்டுகளுக்கு முன்னால் வந்துகொண்டு இருந்த ஒரு தீவிரமான இலக்கியப் பத்திரிகை அது.

அன்றைய தினம் எல்லோருக்குமே ஆர்.சி. கோல்டு தருவிக்கப்பட்டது. இதற்கிடையில் வில்லனுக்கும் ஹீரோயினுக்குமான உறவு தந்தை - மகள் என்று இருக்கக் கூடாது என்பதில் மட்டும் கவனமாகவே இருந்து வந்தான் கச்சி ராயன். வளர்ப்புத் தந்தையாக இருந்தாலும் அது வேண்டாம் என்றே விவாதித்தான். சித்தப்பா என்று வைக்கலாம் என்பது நாதனின் கட்சி. இப்படியே அப்பா, சித்தப்பா, மாமா என்று அந்த உறவு மாறி மாறிச் சென்றது.

வளர்ப்புத் தந்தை என்று வைக்கலாம் என்பது சிரஞ்சீவியின் வாதம். ''ஒரு பெண் தன் கணவனை ஹனிமூனுக்கு அழைத்துச் சென்று தன் கள்ளக் காதலனை வைத்துத் தீர்த்துக்கட்ட வில்லையா? சொசைட்டில என்னென்னமோ நடக்குது. சினிமாவில் காண்பிக்கக் கூடாதா?'' என்றார் அவர். இப்போது என்றால், 'ஒரு பெண் தன் கள்ளக் காதலைத் தட்டிக்கேட்ட சொந்த மகனையே துண்டுதுண்டாக வெட்டி ஃப்ரிஜ்ஜில் ஒளித்து வைக்கவில்லையா?' என்று கேட்டி ருப்பார்.

படத்தின் டயலாக் போர்ஷன் முடிவுக்கு வந்து விட்ட நிலையிலும் ஹீரோயினுக்கும் வில்ல னுக்கும் என்ன உறவு என்று முடிவு செய்யப்பட வில்லை. 'சரி, அதைப் பிறகு பார்த்துக்கொள்ள லாம்' என்று சொல்லிவிட்டு, நடிகர்களைத் தேடும் படலத்தை ஆரம்பித்தார் சிரஞ்சீவி. எவ்வளவு முயன்றும் வில்லன் நடிகருக்குத் தோதான ஆள் கிடைக்கவில்லை. நடிகர் கிடைத்தால் சம்பளம் கட்டுப்படி ஆகவில்லை.

கடைசியில் கச்சிராயனே அந்த வில்லன் ரோலைச் செய்வது என்று முடிவாயிற்று. கச்சி ராயனின் வயதும் 54 என்பதால் அதுவும் பொருத்தமாகவே அமைந்தது. திடீரென்று இப்படி நடிக்கும் வாய்ப்பு கிடைத்ததில் அவ னுக்கு சந்தோஷமே என்றாலும், இந்த உறவுப் பிரச்னைதான் பெரிய தலைவலியாக இருந்தது.

ஹீரோயின் ஒரு புது நடிகை. நடிகைக்கு வேண்டிய முதல் தகுதி கவர்ச்சியும் அழகும். அது அந்தப் பெண்ணிடம் இருந்தது. ஆனால், மற்ற நடிகைகளிடம் இல்லாத ஒரு புது விஷய மும் அவளிடம் இருந்தது. அவள் மும்பையின் காலா கோடா மார்கில் (கறுப்புக் குதிரைச் சதுக்கம்) நடக்கும் பரீட்சார்த்த நாடகக் குழுக்களில் நடித்துக்கொண்டு இருந்த புத்திஜீவி ரகம்.

'யு டர்ன்' என்பதால் சம்மதித்துவிட்டாள். புத்திஜீவி என்பதால் சிகரெட், தண்ணி எல்லாம் உண்டு. சிரஞ்சீவி கோஷ்டியோடு சேர்ந்தே தண்ணி அடித்தாள். இரவு 3 மணி ஆகிவிட்டால் அங்கேயே தூங்கிவிட்டு காலையில்தான் போவாள். சுருக்கமாகச் சொன் னால், ஆண் - பெண் வித்தியாசம் இல்லாமல் பழகினாள்.

நாதன், கச்சிராயன் இருவர் காட்டிலும் மழை. சினிமா டிஸ்கஷனுக்கு ஊடாகவே அந்த மும் பைப் பெண்ணுடன் ஸ்டானிஸ்லாவ்ஸ்கி (நாடகம்), கீஸ்லோவ்ஸ்கி (சினிமா), ட்சைக் கோவ்ஸ்கி (இசை) போன்ற பல 'இஸ்கி'களைப் பற்றி மணிக் கணக்கில் விவாதித்தார்கள். அந்த விவாதங்களில் மற்றவர்கள் யாரும் கலந்து கொள்வதில்லை என்பதை சொல்லத் தேவை இல்லை.

இவ்வாறாக, சுமார் ஆறு மாத காலம் ஓடியது கச்சிராயனின் சினிமா பிரவேசம். படப்பிடிப்புக்கு லொகேஷன்கூடப் பார்த்துவிட்டார்கள். படத் துக்குப் பெயர் வைத்தாகிவிட்டது. ஹீரோ சிரஞ்சீ விக்கும் புதிய நாமகரணம் ஆனது. தெலுங்கில் ஒரு சிரஞ்சீவி சூப்பர் ஸ்டாராக இருக்கும்போது அதே பெயரில் எப்படி இன்னொரு சிரஞ்சீவி இருக்க முடியும்?

ஒரு கட்டத்தில் மதிய உணவு கே.கே.நகரில் ஒரு சாதாரண மெஸ்ஸில் இருந்து வர ஆரம் பித்தது. தொட்டுக்கொள்ள அவித்த முட்டைகூட இல்லை என்றதும் கச்சிராயன் புரிந்துகொண்டான். கம்பெனியில் பல மாற்றங்கள் தெரிந்தன.

முன்பெல்லாம் ராயனை பிக்கப் பண்ண கார் வரும்.பிறகு, ஓர் உதவி இயக்குநர் அவருடைய அரதப் பழசான ஒரு பைக்கை எடுத்துக்கொண்டு வந்து ராயனை அழைத்துப் போனார். பிறகு, அந்த பைக் வருவதும் நின்றுபோனது. கச்சிராய னும் பழையபடி தன்னுடைய இலக்கிய உலகத் துக்குத் திரும்பி வந்து சக இலக்கியவாதிகளுடன் ஹோதாவை ஆரம்பித்தான்.

இதெல்லாம் முடிந்து ஆறு மாதங்கள் இருக்கும். ஒருநாள் எதேச்சையாக கிரியைப்பார்த்த தான் கச்சிராயன். ராயனை நோக்கி ஆர்வத்துடன் ஓடி வந்த கிரி, ''விஷயம் தெரியுமா சார்?'' என்று ஆரம்பித்தான்.


''என்ன?''

''அந்த பாம்பே பொண்ணு இல்ல... நம்ம ஹீரோயின். அதுகிட்ட வேலையைக் காமிச்சுட் டாங்க நம்ம ஆளுங்க. டைரக்டரோ இல்ல அந்த நாதனோதான்... வேற யாரும் செஞ்சிருக்க முடியாது. (வயிற்றைக் கைகளால் சுட்டிக்காட்டி) நாலு மாசம்... உயிருக்கே ரொம்பப் பிரச்னையாப் போய்டுச்சு. டைரக்டர்தான் பேர் கெட்டுரக் கூடா துன்னு ரொம்ப அலைஞ்சுக் கிட்டு இருந்தாரு... தேவையா இது?''

விஷயத்தைக் கேட்டதும் கச்சிராயனுக்குத் துணுக்கென்றது. அவளிடம் படித்துப் படித்துச் சொன்னோமே, ஐபில் மாத்திரையைப் போட்டுக் கொள்ளச் சொல்லி? போதையில் மறந்துவிட்டாள் போல... அடடா! ■

# மாகாண சபை முறையை ஒழிக்க விடமாட்டோம்!

## அதற்கான பொது வாக்கெடுப்பாக அடுத்த தேர்தலை மாற்றவேண்டும்



● மு.த. ஹசன் அலி

ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்ற முடியாது என்பதைத் தவிர மற்ற எல்லாவற்றையும் என்னால் சாதிக்க முடியும் என்று இறுமாப்புடன் தம்பட்டமடிக்கும் அளவிற்கு ஒரு தனி மனிதரிடம் 1978இல் அரசியல் அதிகாரங்கள் குவிந்திருந்தன.

அவ்வாறான நிலமை ஆபத்தானது என்பதை உணர்ந்து, குவிக்கப்பட்ட அதிகாரங்களை ஜனநாயகத்தின் உரிமையாளர்களான வாக்காளப் பெருமக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றத்துக்கும், சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும், நீதித்துறைக்கும் பகிர்ந்தளித்து அர்த்தமுள்ள ஜனநாயக மரபை உயிர்வாழவைப்போம் என்று மக்களுக்கு வாக்குறுதிகளை அள்ளி வழங்கியே 1978 இற்குப் பின்னர் பதவிக்கு வந்த எல்லா அதிபர்களும், தேர்தல்களில் வெற்றியீட்டினார்கள்.

தற்போதைய தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச தொடக்கத்தில் கதிர்காமத்திற்குப் பாதயாத்திரை சென்று அங்கு ஆற்றிய தனது உரையின் மூலம் இந்த மாற்றத்திற்கான உறுதிமொழியை வழங்கியிருந்தார்.

1994இல் மாண்புமிகு சந்திரிக்கா அம்மையாரும் இதனையே கூறினார். அதனால் அவரை ஒரு அமைதித் தூதுவராகச் தமிழ், முஸ்லிம் மக்கள் கருதினார்கள்.

2005இல் மீண்டும் மகிந்த ராஜபக்ச ஜனத்தா விமுக்திப் பெரமுனவுடன் (ஜே.வி.பி) ஒப்பந்தம் செய்து ஆட்சிக்கு வந்த பின்னரும் இதனையே கூறினார்.

பின்னர் 19ஆவது திருத்தமானது சென்ற நல்லாட்சி அரசினால் நிறைவேற்றப்பட்டபோது 224 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒருமித்து ஆதரித்து வாக்களித்து கடுமையான 18ஆவது திருத்தத்தினை புதைகுழியில் தள்ளி ஆறுதல் பெருமூச்சு விட்டார்கள் என்பது வரலாறாகும்.

அதிகாரக்குவிப்பு பிரச்சினைக்கு ஒரு நிவாரணியாக இறுதியாகக் கொண்டுவரப்பட்ட 19ஆவது திருத்தத்தில் பல குறைகள் இருப்பதனைப் பலரும் இப்போது ஏற்றுக்கொள்கின்றனர். அதனால் பரஸ்பரம் கலந்தாலோசித்து ஒருமித்த நிலைப்பாட்டுடன் புதியதோர் அரசியல் மாற்றத்தை மீண்டும் 225 உறுப்பினரும் கருத்தொருமித்த நிலையில் கொண்டு வருவதே ஆரோக்கியமான ஜனநாயகப் பண்பாடாகும்.

ஒரு தனிக்கட்சியின் நன்மைக்காகவோ அல்லது ஒரு தனிச் சமூகத்தின் நலனுக்காகவோ யாப்பு மாற்றம் கொண்டுவரப்பட்டால் அது நாட்டைக் குழப்பும் ஒரு செயலாகத்தான் காலப்போக்கில் திரிவுபடும்.

இன்று ஒரு தனிக்கட்சியானது மூன்றில் இரண்டு பங்கு பலத்தை அதன் கூட்டுக் கட்சிகளுடன் சேர்ந்து பெற்றுக் கொண்டுவிட்டது என்பதற்காக, அதுவும் சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான இனவாத அலைகளை ஏற்படுத்தி ஒருசில சக்திகள் பெரும்தேசிய மக்களை உசுப்பேத்தி பெற்றுக்கொண்ட இந்த வெற்றியை தமக்கு சாதகமாக ஆக்கிக்கொண்டு சிறுபான்மையினருக்கு எதிரான யாப்பு மாற்றங்களை நிறைவேற்றி அதன் மூலம் சட்ட ரீதியாக அவர்களை அடக்கி ஒடுக்கி ஆளத் துடிப்பது போன்ற ஒரு அச்ச நிலைமை தோற்றுவிக்கப்பட்டு வருவதை உணரக்கூடியதாக இருக்கின்றது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் கொண்ட வெற்றியானது தோல்வி அடைந்தவர்களை துவம்சம் செய்வதற்கும் ஒத்துவராதவர்களை அடிமைப் படுத்துவதற்கும் பெரும்பான்மை சமூகம் தமக்குத் தந்த அங்கீகாரம்தான் என்பதாக ஒருசில பெரும்தேசிய கடும்போக்குவாதிகள் கருதிக் கொண்டு செயல்படத் தொடங்கியுள்ளனர்.

தோல்வி அடைந்தவர்களும் இந்த நாட்டில் பிறப்புரிமையும் கருத்துரிமையும் கொண்ட குடிமக்கள் என்ற உண்மையை யாரும் மறுதலிக்க முடியாது. உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட அந்த உயரிய ஜனநாயகப் பண்பைப் புரிந்து கொள்ள மறுப்பவர்கள் பூகோள கிராமமாகிய நவீன உலகில் தனிமைப்பட்டு விடுவார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

குழப்பங்களுக்கு மத்தியிலும் அரச தரப்பிலுள்ள ஒருசில மிதவாத சக்திகள் இடையிடையே சிறுபான்மையினருக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய சமநிலையான அறிக்கைகளை அவ்வப்போது வெளியிட்டு வருகின்றதையும் அவதானிக்க கூடியதாக உள்ளது. ஆட்சியிலுள்ள உயர்மட்டத்தைச் சேர்ந்தவர்கள் அனுபவமிக்க அரசியல் தலைவர்கள் நிதானமாக சமாளித்துக்கொண்டு செல்வது ஓரளவு ஆறுதலை அளித்தாலும் கடும்போக்குவாதிகளின் நெருக்குதலை எவ்வாறு அவர்கள் சமாளிப்பார்கள் என்பதைச் சொல்ல முடியாதுள்ளது.

அண்மையில் இந்தியத் தலைமை அமைச்சர் மோடி 13ஆவது திருத்தம் தொடர்பில் சிறுபான்மையினருக்கு ஆறுதல் அளிக்கக் கூடியவாறு தனது கருத்தை வெளியிட்டதனைப் பற்றி அரச தரப்பு அமைச்சர்கள் மாறுபட்ட கடுமையான விமர்சனங்களை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். “இந்திய தலையீடு” என்ற பதத்தை இட்டுக்கட்டி இந்தியாவுக்கு சவால் விட்டுக்கொண்டு குழப்பிக் கொண்டிருக்கின்றார்கள். இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலான அரசமைப்பின் 13ஆவது திருத்தமானது மாகாணசபை முறைமையை இங்கு உருவாக்கியது என்பது உலகம் அறிந்த உண்மையாகும்.

பூகோள ரீதியாக இலங்கைக்கு மிக்க அருகில் உள்ள இந்தியாவைப் புறக்கணித்து நமது நாடு ஒருபோதும் பயணிக்க முடியாது. இலங்கையிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லீம், மலாய், பறங்கிய, இந்திய வம்சாவழியினர் அனைவரும் இந்தியப் பண்பாட்டின் படிவங்களாகும். இந்நாட்டிலுள்ள சாதி, மதம், மொழி எல்லாமே இந்திய வாழ்வியல்களுடன் பின்னிப் பிணைந்து இரண்டறக் கலந்தவையாகும். அவ்வாறான தொடர்புகளை இலங்கையில் புறக்கணித்துவிட்டு எம்மால் தன்னிச்சையாக இயங்க முடியாது என்பது யதார்த்த நிலையாகும்.

காலனித்துவ ஆட்சியாளர்கள்கூட இந்தியாவில் இருந்துதான் நமது நாட்டின் நிர்வாகங்களை வழிநடத்திக் கொண்டிருந்தார்கள் என்பது வரலாறாகும். எல்லாவற்றிற்கும் மேலாக பிராந்தியப் பாதுகாப்பு மிக முக்கியமான அம்சமாக இரு நாடுகளாலும் முன்னுரிமைப் படுத்தப்பட வேண்டும்.

**வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்கள் அவர்களது சுயநிர்ணய உரிமைகளை வெறுமனே தாரைவார்க்க மாட்டார் கள் என்பதனைத் திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம். சிறுபான்மைச் சமூகங்களின் விருப்பங்களை உதாசீனம் செய்து பெரும்தேசிய கடும்போக்குவாதிகள் தாறுமாறாக நடந்து கொள்வதற்கு அரசிலுள்ள அனு பவமிக்க மூத்த அரசியல் தலைவர்கள் இலகுவில் அனுமதிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.**

இந்த நாட்டில் மூன்று தசாப்தங்களாகத் தொடர்ந்து வந்த உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இந்திய அரசு பெரும் உதவிகளைச் செய்திருந்தது என்ற விடயம் எமது ஆட்சியாளர்களே ஒப்புக்கொண்ட உண்மையாகும். எனவே இந்தியா இங்குள்ள சிறுபான்மையினருக்கு ஆதரவாக குரல்கொடுப்பதை ஆக்கிரமிப்பாகக் கருத முடியாது. பிராந்தியத்தில் அர்த்தமற்ற முறுகல் நிலமைகள் கருக்கொள்வதை யாரும் விரும்ப மாட்டார்கள் என்பதுதான் யதார்த்தமாகும்.

ஒருசிலர் சவால் விடுவது போன்று மாகாணசபை முறைமையில் எவ்விதமான மாற்றங்களையும் செய்வதற்கு சிறுபான்மைச் சமூகங்கள் ஒருபோதும் உடன்படமாட்டா. குறிப்பாக வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்கள் அவர்களது சுயநிர்ணய உரிமைகளை வெறுமனே தாரைவார்க்க மாட்டார்கள் என்பதனைத் திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.

சிறுபான்மைச் சமூகங்களின் விருப்பங்களை உதாசீனம் செய்து பெரும்தேசிய கடும்போக்குவாதிகள் தாறுமாறாக நடந்துகொள்வதற்கு அரசிலுள்ள அனுபவமிக்க மூத்த அரசியல் தலைவர்கள் இலகுவில் அனுமதிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள அரசமைப்பின் 20ஆவது திருத்தமானது 1978ஆம் ஆண்டிலிருந்து படிமுறையாக கொண்டுவரப்பட்ட எல்லாத் திருத்தங்களையும் புறந்தள்ளிவிட்டு ஒரு முழுமையான சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கான போக்காகத்தான் தென்படுகிறது.

13ஆவது திருத்தமாக 1987இல் கொண்டுவரப்

பட்ட மாகாணசபை முறைமையில் வடக்கு கிழக்கு முஸ்லீம்களின் அபிலாஷைகள் முழுமையாக புறக்கணிக்கப்பட்டிருந்ததாக தலைவர் அஷ்ரஃப் தனது அதிருப்தியை வெளியிட்டிருந்தார். கிழக்கு மாகாணத்தில் காலாகாலமாக பரவலாகப் பெரும் பான்மையாக வாழ்ந்து வந்த முஸ்லீம்களைக் கலந்தாலோசிக்காது வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒருதலைப் பட்சமாக ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரே மாகாணமாக ஒப்பந்தம் செய்யப்பட்டதன் மூலம் புதிய மாகாணத்தில் முஸ்லிம்களின் இனப் பரம்பல் 17 சதவீதமாகக் குறைக்கப்பட்டதனை அவர் கண்டித்திருந்தார்.

வடகிழக்கு இணைப்பானது பின்னர் பொது வாக்கெடுப்பின் மூலம் பிரிபடும்போது சுய நிர்ணய உரிமையுடனான தனியான ஓர் அலகு முஸ்லீம்களுக்கு வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தமிழ் தலைவர்களுடன் பேசினார். அவர்களை அதற்கு இணங்கவும் வைத்தார்.

ஆனாலும் மாகாணசபை முறைமையை அதிகாரப் பரவலுடனான சுய நிர்ணய உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு மையப் புள்ளியாக அவர் அடையாளம் கண்டார். தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடகிழக்கு மாகாணம் ஒப்பந்தத்தில் உள்ளவாறு பின்னர் இரண்டாகப் பிரிபடும்போது நிபந்தனையை முன்வைக்க அவர் காத்துக் கொண்டிருந்தார்.

ஆனால் அவரது ஆயுள் அதற்குள் முடிவடைந்துவிட்டது. துரதிர்ஷ்டவசமாக வடகிழக்குப் பிரிவு 2007இல் நீதிமன்றத்தால் நிகழ்ந்தேறியது. பெரும் தேசியவதிகளின் திட்டமிட்ட அந்த காய் நகர்த்தல் மூலம் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும் பான்மையாக வாழ்ந்த மாவட்டங்கள் இரண்டும் பின்னர் திட்டமிட்ட அரச குடியேற்றங்களாலும், இடையில் நிறுவப்பட்ட எல்லை நிர்ணய சபைகளின் பக்கசார்பான தீர்மானங்களினாலும் கபளீகரம் செய்யப்பட்டன.

அரச நிர்வாகங்களின் மாவட்டத் தலைமைகள் நிரந்தரமாகப் பெரும்பான்மை இனத்தவர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்ததாலும், மத்தியில் ஆறில் ஐந்து பெரும்பான்மையைக் கொண்ட அரசு ஆட்சியில் இருந்ததாலும் நாடாளுமன்றத்தில் இருந்த எமது பிரதிநிதிகள் செயலிழந்து போயிருந்ததாலும், போர்ச் சூழலில் வடகிழக்கு மூழ்கியிருந்ததாலும் இந்த அவல நிலை கிழக்கு முஸ்லிம்களுக்கு அன்று ஏற்பட்டது.

இவ்வாறான துர்ப்பாக்கிய நிலையிலிருந்து மீண்டு கொள்ள முடியாத, எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாத நிலைமையிலேயே தற்போது மீண்டும் மாகாணசபைப் பிரச்சினை முஸ்லிம்களின் மத்தியில் தலைதூக்கியுள்ளது.

மாகாணசபை முறைமையானது நிலத்தொடர்புள்ள ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் பாரம்பரியமாக ஒன்றி வாழ்கின்ற சமூகங்களுக்கு தங்களைத் தாங்களே ஒரு சிறிய அளவிலேனும் உரிமையுடனும் உணர்வுடனும் ஆண்டு மகிழக்கூடிய ஒரு அனுபவத்தைக் கொடுக்கின்றது. அந்த விசித்திர உணர்வை அனுபவித்தவர்கள் மாகாணசபை முறைமையை விட்டுக்கொடுக்க ஒருபோதும் விரும்பமாட்டார்கள். அந்த உணர்வானது வட கிழக்கில் பூர்வீகமாக வாழும் மக்களுக்கு மட்டும் ஏற்புடையதல்ல. தான் பிறந்து வாழ்ந்துவரும் மண்ணை நேசிக்கும் ஒவ்வொருவரும் அந்த சிறிய அளவு சுதந்திரத்தை சுவைக்கவே விரும்புவார்கள்.

அதனால்தான் வட கிழக்கிற்கு வெளியில் மாகாணங்களாகப் பிரிந்து பூர்வீகமாக வாழ்ந்துவரும் பெரும்பான்மைச் சமூகங்களைச் சேர்ந்த பெரும்தேசிய மக்களும், மலைநாட்டில் வாழும் இந்திய வம்சாவழியினரும், நிலத்தொடர்பு சார்ந்த சாதி சம்பிரதாயங்களின் பின்னிப் பிணைந்தவர்களும் இவ்வாறான சுயமான சுதந்திரத்தை தக்கவைத்துக் கொள்ளவே விரும்புவார்கள். அரச தரப்பைச் சார்ந்த மாகாணசபை உறுப்பினர்கள் அனைவரும் மாகாணசபை முறைமையை இல்லாமல் செய்வதற்கு ஒட்டுமொத்தமாக எதிர்ப்புக்களை வெளியிட்டுள்ளதும்கூட மேற்குறிப்பிட்ட உணர்வுகள் காரணமாகத்தான். இவ்வாறான உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டியது ஆட்சியாளர்களின் கடமையாகும்.

எனவேதான் இந்த நாட்டில் மக்கள் ஏற்கனவே அனுபவித்துவரும் ஜனநாயக ஆட்சி முறை அடுக்குகளான அதிபர் முறைமை, நாடாளுமன்ற முறைமை, மாகாணசபை முறைமை, உள்ளூராட்சி முறைமை போன்ற உரிமைகளில் எதையாவது இல்லாமல் செய்வதாக இருந்தால் மக்களின் நேரடியான விருப்பங்களைப் பொது வாக்கெடுப்பு மூலம் பெற்றுக் கொள்ளவேண்டியது மிக முக்கியம்.

வடக்கு கிழக்கைப் பொறுத்தவரை மொழிவாரியான சமூகங்களின் இணைவுதான் இரு சமூகங்களுக்கும் ஆரோக்கியமான பாதுகாப்பாகும். தலைவர் அஷ்ரபும் அதனையே கூறிவந்தார். ஆனால் அவரது தம்பிமார் அமைச்சுப் பதவிகளுக்காக அரசியல்செய்து பிழைப்புத் தேடியதால் பெரும் தேசியவதிகளின் கால்களைச் சுற்றித்திரியும் பூனைக்குட்டிகளாக மாறிவிட்டனர்.

இதனைத் தட்டிக்கேட்டவர்கள்; தூரப்படுத்தப்பட்டு விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டு வெளியேறினர். 20 வருடங்களாக தமிழர்களோடு வேலிச்சண்டை பிடித்துக்கொண்டு குரங்குகளிடம் அப்பங்களைப் பங்கிடுவதற்குக் கொடுத்து ஒரு முடிவுமில்லாமல் நிர்க்கதியாகி இருந்தவற்றையும் இழந்துவிட்டு இருக்கின்றனர். மாவட்ட எல்லைகள் பறிபோவதைப்பற்றி கிஞ்சித்தும் கவலைப்படாது பக்கத்து வீட்டார்களுடன் உரசல்களை ஏற்படுத்திக் கொண்டு அதில் குளிர்காய்வதையே அரசியலாக்கிக் கொண்டுவிட்டனர்.

தமிழ் முஸ்லீம் உறவுகள் வலுப்படும்வரை இரு சமூகங்களுக்கும் விமோசனம் கிடைக்க மாட்டாது. வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் பேசும் இரண்டு சமூகங்களும் ஒற்றுமைப்பட வேண்டிய காலம் கனிந்து வருவதாகவே நான் உணருகின்றேன்.

தமிழ் தலைவர்களும், புத்திஜீவிகளும், ஊடகங்களும் தற்போது நேசக்கரம் நீட்டுவதை நான் வரவேற்கின்றேன். இந்த சந்தர்ப்பத்தை இரு சமூகங்களும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் வடக்கு கிழக்கிலுள்ள சகல மாவட்டங்களையும் தமிழ் பேசும் மக்கள் வென்றெடுக்க வேண்டும். சமூகங்களுக்கு இடையிலான தனித்தனியான கூட்டணிகளாகவோ அல்லது இணைந்தோ வியூகங்களை அமைத்து போட்டியிட்டு நமது பூர்வீக மண்ணில் சுய நிர்ணய உரிமையை நிலைநாட்ட தமிழ் பேசும் இரு சமூகங்களும் முன்வரவேண்டும். அதன்பின்னர் அமையப் போகும் மாகாண சபைகளில் நமது பிரச்சினைகளுக்கு நேரடிப் பேச்சு மூலமும், விட்டுக்கொடுப்புக்கள் மூலமும் சுமூகமான தீர்வுகளைத் தேட வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ்பேசும் மக்களின் பூர்வீக தாயகமாகும். அதில் தமிழ், முஸ்லீம்கள் இரண்டு தேசியங்களும் பொது உணர்வுகளுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளும் பொறிமுறையொன்றை உருவாக்கவேண்டும் என்ற நமது தலைவர்களின் கனவுகளை நிறைவேற்ற முன்வரவேண்டும்.

வடக்கு கிழக்கில் இனி ஒரு தேர்தல்வரும் போது தமிழரா முதலமைச்சர்? முஸ்லிமா முதலமைச்சர்? என்ற போட்டி நாடகத்தைப் பெரும் பான்மையினம் முன்னின்று நடத்த நாம் அனுமதிக்கலாகாது.

மாகாண முறைமையை நீக்குவதற்கு உடன்படமாட்டோம் என்ற பொதுவான முழக்கத்தை முன்வைத்து அதற்கான பொது வாக்கெடுப்பாக எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல் அமைய வேண்டும்.

**(கட்டுரையாளர் ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகம், முன்னாள் துணை அமைச்சர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)**

## வலியுதை புழுக்கம்

சூரியன் வியர்க்கும்
பொழுதொன்றின் தழுவலில்
விறைத்துக் கிடக்கிறது
காற்று.

மேனிப் புழுக்கத்தையெல்லாம்
சப்பிக்கொண்டிருக்கிறது
மனசு வெதும்பியபடி.

காவலாளிகள் உறைந்த
முன் கதவுகளை அலுவலகங்கள்
அரவணைத்திருக்கின்ற
பொழுதின் மறைவில்
பின் கதவுவழி
ஆளரவம் நுழைந்து
ஆர்ப்பாட்டமாய்
வெளியேறுகிறது.

வெற்றுக் கதிரைகள்
புத்தம் புது வரவுகளால்
கனம் கொள்கின்றன.
தொலைபேசும் நிறுவனக்கணக்கும்
அப்படியே உப்பிக் கனக்கிறது.

அலுவலகக் கோவைகளில்
ஆறிக்கிடக்கின்றன
விண்ணப்பங்கள்

எதுவித அவசரமுமின்றி.

சூரியன் வியர்க்கும் பொழுதில்
தென்றலின் கதைகளை
வாயோயாமல் சொல்லிக்கொண்டிருக்க
முடிகிறதை எண்ண
ஆச்சரியமாயிருக்கிறது.
கேட்பாரிருப்பதால் கூட
நீளமாகச் சொல்லப்பட்டிருக்கலாம்.

அப்படியேதும் எண்ணத் தோன்ற
- வில்லையா?
புழுக்கந்தான் எஞ்சியிருக்கிறது
இடைவெளியில்லாமல்
நிறைந்தபடி.

**- கை.சரவணன்**

## புத்தரைக் கைப்பற்றிய பொலிஸார்!

பெறுமதி மிகுந்தது என்று கருதத்தக்க மிகச் சிறியதொரு புத்தர் சிலையைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனராம். 2 அங்குலம் (2இஞ்சி) மாத்திரமே உடைய அந்தச் சிறிய புத்தர் சிலையின் பண மதிப்பு 600கோடியாம். இந்தச் சிறிய புத்தர் சிலைக்கு ஏன் இவ்வளவு மதிப்பு என்று தேடியதில் அது நீல நிற மாணிக்கக்கல்லில் உருவாக்கப்பட்ட பழமை வாய்ந்த சிலை என்று தெரியவந்தது. இதனால் தான் பொலிஸார் பெரும்பாடுபட்டுத் தேடி அந்தச் சிறிய புத்தரைக் கைப்பற்றியுள்ளனர். மொனராகலை மாவட்டத்திலுள்ள கும்புக்கன பகுதியில் வைத்து இந்தச் சிலை கைப்பற்றப்பட்டுள்ளது. சட்டவிரோதமான முறையில் விற்கப்படவிருந்த நிலையிலேயே குறித்த சிலையைத் தாம் கைப்பற்றினோம் என்கின்றனர் பொலிஸார். இந்தச் சிறிய புத்தரைக் கைப்பற்றியது மட்டுமல்லாமல் நான்கு பேரையும் கைது செய்துள்ளனர் பொலிஸார். இந்த நான்கு சந்தேக நபர்களும் புத்தர் சிலையை விற்பனை செய்ய முற்பட்ட இடைத் தரகர்களே குறித்த சிலையின் உரிமையாளர் தேடப்பட்டு வருகிறாராம்.



# ஐ.பி.எல் – 2020 ஆதிக்கத்தில் மும்பை அரும்பொட்டில் சென்னை..!!

குமரன்



ஐக்கிய அரபு இராட்சியத்தில் நடந்துவரும் இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்) போட்டிகள் லீக் ஆட்டங்களில் அரைவாசி கட்டத்தை நெருங்கியுள்ளன. இதில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சென்னை சுப்பர் கிங்ஸ் அணி கடுமையாகத் தடுமாறுகின்றது.

மகேந்திரசிங் டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ், ரோஹித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ், விராட் ஹோலி தலைமையிலான றோயல் சலெஞ்சேர்ஸ் பெங்களூர், ஷிரேஸ் ஐயர் தலைமையிலான டெல்லி ஹெப்பிட்டல்ஸ், டேவிட் வோர்னர் தலைமையிலான சன்ரைசர்ஸ் ஹைதராபார்த், கே.எல்.ராகுல் தலைமையிலான கிங்ஸ் லெவன் பஞ்சாப், டினேஸ் ஹார்த்திக் தலைமையிலான கொல்ஹத்தா நைட் ரைடேர்ஸ், ஸ்டீவ் ஸிமித் தலைமையிலான ராஜஸ்தான் ரோயல்ஸ் போன்ற எட்டு அணிகளும் இந்தத் தொடரில் மோதுகின்றன.

இதுவரை 22 போட்டிகள் நடந்தாயிற்று, இந்த லீக் போட்டிகளின் தொடக்கத்திலேயே மும்பை - சென்னை அணிகள் மோதின. இதுவரை இடம்பெற்ற 12 வருடப் போட்டிகளிலும் எதிர்த்து மோதும் அணிகளுக்கு என்றுமே வில்லன்களாக விளங்கும் சென்னை சுப்பர் ஹிங்ஸ் அசத்தலான வெற்றியுடன்தான் இந்தப் போட்டியைத் தொடக்கியது. மும்பையை அது துவம்சம் செய்த விதத்தைப் பார்த்த ரசிகர்கள், தல தோனி இந்திய அணியில் விளையாடவில்லை என்றாலும் முழுத் திறனுடன்தான் உள்ளார் போல என்று கொண்டாடினார்கள். ஆனால் அடுத்தடுத்து வந்த இரு போட்டிகளில் பெரும் தோல்வி. விரட்டிப் பிடிக்க முடியாமல் அந்த இரண்டு ஆட்டங்களையும் கோட்டைவிட்டுவிட்டு நான்காவது ஆட்டத்தில் தூக்கம் கலைந்தெழுந்த கும்பகர்ணன் போன்று திடீரென 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி என்று தனக்குள்ளே இருக்கும் அசுரத் தனத்தை வெளிப்படுத்தியது சென்னை.

ஆனால், மீண்டும் 6 மாத தூக்கத்திற்குச் சென்ற கும்பகர்ணன் கணக்கில் ஐந்தாவது ஆட்டத்தில் தோல்வி. தோனி தான்தோன்றித் தனமாகச் செயற்பட்டு தன்னிச்சையாகத் தெரிவு செய்யும் விளையாடும் 11 பேர் அணிதான் இந்த மோசமான தோல்விகளுக்குக் காரணம் என்று தமிழக ஊடகங்கள் கழுவிக் கழுவி ஊற்றுகின்றன. தோனியைத் தல என்று தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடிய இந்த ஊடகங்கள்தான் இப்போது அவரது தலைமையையும் முடிவுகளையும் துவைத்துக் காயப்போடுகின்றன. கேள்வி கேட்கின்றன. விமர்சிக்கின்றன.

இனி சென்னை அணி மீண்டெழுந்து கோப்பையை வெல்லவேண்டும் என்றால் ஏதாவது அதிசயம்தான் நிகழவேண்டும் என்கின்றன தமிழக ஊடகங்கள்.

நடந்து முடிந்த இருபத்து இரண்டு போட்டிகளின் அடிப்படையில் மும்பை இந்தியன்ஸ் அணி பலம்வாய்ந்த அணியாக உருவெடுத்துள்ளதுடன் புள்ளிகளின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. மும்பை அணிக்கு அடுத்த நிலையில் பல இளம் வீரர்களை தன்னகத்தே கொண்ட டெல்லி அணியும் மூன்றாம் இடத்தில் கொல்கத்தா அணியும் நான்காம் நிலையில் பெங்களூர் அணியும் காணப்படுகின்றன.




ஐ.பி.எல். சட்டதிட்டங்களைப் பொறுத்தமட்டில் முதல் நான்கு இடங்களைப் பெறும் அணிகள்தான், பிளே. ஓப் சுற்றுக்கு தெரிவாகும். இந்த நிலையில்தான் அசைக்க முடியாத பலம் பொருந்திய அணியான சென்னை சுப்பர்கிங்ஸ் அணி என்றுமில்லாத பின்னடைவை சந்தித்துள்ளது. ஆறு போட்டிகளில் விளையாடியுள்ள சென்னை அணி இரண்டு போட்டிகளில் மாத்திரம் வென்றுள்ளது.

இந்த லீக் போட்டிகளில் மும்பை அணிக்கு நிகராக டெல்லி கப்பிட்டல்ஸ் அணியினர் பந்துவீச்சு, துடுப்பாட்டம், களத்தடுப்பு என சிறந்து விளங்குகின்றனர். மும்பை அணியின் ஒவ்வொரு ஆட்டத்திலும் யாரேனும் ஒருவர் அணியினை தன் தலையில் சுமந்து முழுப் பொறுப்பினையும் ஏற்று வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்று விடுகின்றனர். டிரன்ட் போல்ட், பும்ரா, பேட்டின்சன் என்கின்ற பலம் பொருந்திய பந்துவீச்சுப் பட்டாளமும், ரோஹித், டி ஹொக், பொலார்ட், பாண்டியா சகோதரர்கள், இஷான் ஹிஷான், யாதவ் போன்ற பெருந்துடுப்பாட்ட பலத்தையும் தன்னகத்தே கொண்டு மும்பை இந்தியன்ஸ் களமாடி வருகின்றது. இதே போலத்தான் டெல்லி அணியும் அனைத்திலும் தாங்களும் சளைத்தவர்கள் அல்லர் என முற்றிலும் இளம்படை ஒன்றினை கட்டியமைத்து களம் கண்டு வருகின்றது. இத்தனைக்கும், தோல்விக்கே பெயர் போன றோயல் சலெஞ்சேர்ஸ் பெங்களூர் அணி சொல்லிக்கொள்ளும் படியான வெற்றிகளை பெற்றுக்கொண்டு பட்டியலில் முதல் நான்கு இடங்களுக்குள் உலாவருகின்றது. அதே போலதான் கொல்கத்தா அணியும் முதல் நான்கு இடங்களுக்குள் தம்மை தக்க வைத்துள்ளது.

இவை அனைத்துக்கும் மாறாக, அடுத்த நான்கு இடங்களிலுள்ள அணிகளில் அனைவரது கவனத்தையும் ஈர்த்திருப்பது சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பின்னடைவுதான். டோனி சிறந்த தலைமைத்துவ பண்பை கொண்டிருந்தாலும் சிலநேரங்களில் அவர் எடுக்கின்ற முடிவுகள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்கிறார்கள் விமர்சகர்கள். அதற்க்கு சிறந்த உதாரணம் ஆரம்ப போட்டிகளில் இருந்து கேதார் ஜாதவிற்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவம். எதிரணியினரது பந்துகளை சற்றேனும் நேர்த்தியாக ஆடத்தெரியாத சிறுபிள்ளைத்தனமான விளையாட்டை மிகமுக்கியமான நேரங்களில் அரங்கேற்றி ரசிகர்களிடம் இருந்து நன்றாக வாங்கிக்கட்டிக் கொள்கின்றார் அவர். இறுதியாக நடைபெற்ற போட்டியிலும் கூட பிராவோ போன்ற நட்சத்திர வீரர்களுக்கு வாய்ப்பு வழங்காமல் தான் ஆடி முடிப்பேன் என்ற நப்பாசையில் இறுதிவரை மைதானத்தில் நின்று தோல்வியை பெற்றுக்கொடுத்தது நல்லதொரு எடுத்துக்காட்டு.

ஆக, நடைபெற்று முடிந்துள்ள போட்டிகளின்படி அசைக்கமுடியாத இடத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியும், அசைக்கவே முடியாது என நினைத்து களம் காண ஆரம்பித்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணி லீக் ஆட்டங்களுடனேயே வெளியேறிவிடுவோமா என்கின்ற அரும்பொட்டான நிலையிலும் போட்டியிட்டு வருகின்றன.




இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியர் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.10.2020 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781